விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005




இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 தை 09 திங்கட்கிழமை (22.01.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 034

# தமிழர் தாயகத்தை சிங்களமயமாக்க சதி!

## அரசின் திட்டங்களை அம்பலப்படுத்திய முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்



(யாழ்ப்பாணம்) தமிழர் தாயகத்தை தம் வசமாக்க பெரும்பான்மை இனத்தவர்கள் பலவந்தமாக கொண்டுவரப்பட்டு குடியேற்றப்பட்டனர். இவ்வாறு பாரிய இன அழிப்பொன்று வடக்கு - கிழக்கிலே நடை பெற்று வருகிறது. எமது பாரம்பரியத்தை அழிக்கவென திட்ட மிட்டு இடம்பெறும் இத்தகைய நடவடிக்கைக்கு அரசாங்கமும் ஒத்துழைப்பு வழங்கி வருவதாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் விமர்சித்துள்ளார். (15-ம் பக்கம் பார்க்க..)

### கம்பவாரிதிக்கு பதில்




கம்பவாரிதிக்கு வலம்புரி பிரதம ஆசிரியரின் பதில் கடிதம் நாளை மறுதினம் 24-ம் திகதி புதன்கிழமை தொடக்கம் வாசிக்கத் தவறாதீர்கள்

## கடற்படையின் தேவைக்கு சுவீகரிக்கவுள்ள காணியை மீட்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கடற்படையினரின் முகாம் அமைப்பதற்கென சுவீகரிக்கப்பட வுள்ள தனது காணியை, தனது எதிர்காலத்தை கருத்தில் கொண்டு மீட்டுத்தருமாறு தனி நபர் ஒருவர் சம்பந்தப்பட்ட அதிகாரிக 23

## தேர்தல் சுவரொட்டி ஒட்டிய இருவர் கோப்பாயில் கைது

(யாழ்ப்பாணம்)

தேர்தல் விதிமுறைகளை மீறி கட்சி ஒன்றின் பரப்புரை சுவரொட் டிகளை ஒட்டினார்கள் என்ற குற் றச்சாட்டில் 2 பேர் கோப்பாய் பொலி ஸாரால் கைது செய்யப்ப 24

## தபால் மூலமான வாக்குப்பதிவு இன்று ஆரம்பம்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்த லுக்கான தபால் மூலமான வாக்குப் பதிவு இன்று ஆரம்பமாகி 23

### ஒருவரை ஒருவர் குற்றம்சாட்டி
## தமிழ்த் தேசிய பேரவையும் ஹூலும் பொலிஸில் முறையீடு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியப் பேரவையின் யாழ் மாநகர முதன்மை வேட்பா ளர் வி.மணிவண்ணன் தன்னை எச்சரிக்கை செய்வது போல தேர் தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற் றியதாகக் கூறி,

தேர்தல் ஆணைக்குழு உறுப்பி னரான ரட்ணஜீவன் ஹூல், யாழ்ப் பாண பொலிஸ் நிலையத்தில் முறை ப்பாடு ஒன்றை பதிவு செய்துள்ளார்.

இதேபோல் ரட்ணஜீவன் ஹூல் தமக்கு எதிராகவும் நீதிமன்றத்தை நிந்தித்தும் கொழும்பு ஊடக 23

### யாழ். ஆறுகால்மடம் பகுதியில்
## தனித்திருந்த வயோதிப மாது நகைக்காக அடித்துக் கொலை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆறுகால்மடம் பகுதியில் உள்ள வீட்டில் தனிமை யில் வசித்து வந்த மூதாட்டி ஒருவர், மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டு நேற்று இரவு வீட்டின் அறையினுள் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

### பொலிஸார் சந்தேகம்

தலையில் அடிகாயங்கள் காண ப்படுவதுடன் அவர் அணிந்திருந்த நகைகள் திருடப்பட்டிருப்பதால் இது திட்டமிட்ட கொலையாக இருக்க லாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். 24

## கூட்டமைப்பின் தலைமையால் முடியாவிட்டால் வெளியேறுங்கள்!

### கஜேந்திரகுமார் பகிரங்க சவால்



(யாழ்ப்பாணம்)

கூட்டமைப்பின் தலைமையே உங்களால் முடியாவிட்டால் அரசி யலை விட்டுப் போங்கள் என அகில இலங்கை தமிழ் காங்கிரசின் தலைவரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆவேசமாக உரையாற்றியுள்ளார்.

வவுனியா, பாவற்குளம் 6-ம் வட்டாரத்தில் நேற்று இடம்பெற்ற அகில இலங்கை தமிழ் 23

## நாட்டின் அரசியல்வாதிகளில் 50வீதமானோர் திருடர்கள்

### என்கிறார் ஜனாதிபதி மைத்திரி

(மட்டக்களப்பு)



மக்களின் பணத்தை திருடியவ ர்களை ஒருபோதும் மன்னிக்கப் போவதில்லை என ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று மாலை நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்ட த்தில் கலந்துகொண்டு 24

## 50 பாடசாலை மாணவர்களுக்கு மாதாந்தம் ரூபா 5 ஆயிரம் வீதம்

### 5 வருடங்களுக்கு புலமைப்பரிசில்; யாழ். படைத் தலைமையகம் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)



யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்க ளின் உண்மை நிலையை உணர்ந்து அவ ர்களுக்கு தேவையான அனைத்து உதவிக ளையும் வழங்குவோம் என பாதுகாப்பு படைகளின் யாழ்ப்பாண மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்சன 23

## பருத்தித்துறை கடலில் கரை ஒதுங்கிய மூங்கில் தெப்பம்



06

## சிங்கப்பூர் பிரதமர் இன்று இலங்கை வருகிறார்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவின் அழைப்பை ஏற்று உத் தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு சிங்கப்பூர் பிரதமர் லீ ஷியன் லூங்ஸ் இன்று இலங் கைக்கு வரவுள்ளார்.

நாளை மறுதினம் 24-ம் திகதி வரையில் இலங்கையில் 24

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ரவி கருணாநாயக்கவை கைது செய்ய நடவடிக்கை!

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் ரவி கருணா நாயக்க கைது செய்யப்படலாம் என தகவல் வெளியாகி உள்ளது.

சர்ச்சைக்குரிய மத்திய வங்கி பிணை முறி மோசடி தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையின் அடிப்படையில் ரவி கருணாநாயக்க கைது செய்யப்படவுள்ளார்.

கொழும்பு இணையத்தளம் ஒன்று இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

பிணை முறி தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவில் போலி சாட்சியம் வழங்கிய குற்றச்சாட்டில் அவர் இவ்வாறு கைது செய்யப்படவுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

முழுமையான, நீதிமன்ற அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவில் போலி சாட்சியம் வழங்கியமை பாரியதொரு குற்றச்சாட்டாகும்.

ரவி கருணாநாயக்கவை கைது செய்வதற்கு முன்னர் அல்லது பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவரை கைது செய்யும் நடவடிக்கையில் ஐக்கிய தேசிய கட்சி ஈடுபட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. (மு-1)


## விற்பனையாளர் உடன் தேவை

யாழ்.நகரில் உள்ள புடவை விற்பனை நிலையத்துக்கு அனுபவமுள்ள பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை. மேலும் கணனியில் பில் போடும் அனுபவமுள்ளவர்களும் தேவை.

**தொடர்புகளுக்கு:-**

**0773482634**

(2497)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532




## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் கும்பாபிஷேக தின விழா 23.01.2018 செவ்வாய்க்கிழமை

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலின் கும்பாபிஷேக தினமாகிய 2018.01.23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நாளை அம்பாளுக்கும் அனைத்துப் பரிவாரமூர்த்திகளுக்கும் விசேட அபிஷேகம் நடைபெறும். உச்சிக்காலப் பூசையைத் தொடர்ந்து விசேட வசந்தமண்டபப் பூசை நடைபெற்று அம்பாள் வெள்ளை எருதேறி உள்வீதி, வெளிவீதி உலா வந்து நம்பி வரும் அடியார்களுக்கு நல்லருள் தருவார்.

இத்தினத்தில் வருகை தந்து அம்பாளின் பேரருளைப் பெற்றேகுமாறு அடியார்களை அன்புடன் வேண்டுகின்றோம்.

**அன்னையின் பணியில்**
**நா.யோகநாதன்**
**செயலாளர்**
**அறங்காவலர் சபை**
**ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு**

(அ-1299)

## கண்ணீர் அஞ்சலி

### கந்தன் தங்கராசா



(மாவிட்டபுரம் தெற்கு, தெல்லிப்பழை)

மாவிட்டபுரம் பளையைப் பிறப்பிடமாகவும் V.C.C மாவிட்டபுரம் தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தன் தங்கராசா அவர்கள் 20.01.2018 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலமான செய்தி அறிந்து துயர் அடைவதுடன் அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்ப உறவுகளுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.


ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்
உமாசுதன்-அனுசியா
குடும்பத்தினர் (பெறாமகன்)

(2496)

## மரண அறிவித்தல்

### கந்தசாமி காசிராஜா
### (சக்கரை அண்ணா)



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் நல்லூர் சங்கிலியன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி காசிராஜா 21.01.2018 ஞாயிற்றுக்கிழமை நேற்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி-செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பொன்னையா-வள்ளிப்பிள்ளை (நீர்வேலி) தம்பதியினரின் அன்பு மருமகனும், கபிலன், ரவி, நந்தினி, ரகு ஆகியோரின் பாசமிகு தந்தையும், கலாறஜனி, ராஜி, சந்திரமோகன், உதயா ஆகியோரின் அன்பு மாமனாரும், தருமராஜா, மனோரஞ்சிதம் ஆகியோரின் அன்பு சகோதரரும், கனகலிங்கம்-நீலாம்பிகை (வேலணை), கிருஸ்ணபிள்ளை-பரமேஸ்வரி (பருத்தித்துறை), சின்னத்தம்பி-அன்னலட்சி (தாவடி), தியாகராஜா-சிவயோகம் (காரைநகர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், டிருபன், கிஷாந், பிறித்தன், சஸ்கியா, பாபியன், பிரபன், பிரணவி, கஜனி, யுகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.01.2018) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**69, சங்கிலியன் வீதி,**
**நல்லூர்**

**தகவல்:-கபிலன் (மகன்)**
T.P:-0774174604, 0212226557

(2495)

## கண்ணீர் அஞ்சலி

### அமரர்
### சிரந்த விராஜ் கூரே



வடக்கு மாகாண ஆளுநர் கௌரவ றெஜினோல்ட் கூரே அவர்களின் சகோதரர் சிரந்த விராஜ் கூரே அவர்கள் காலமானார். அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் ஆளுநரின் துயரத்தில் வட மாகாண தமிழ் மக்களாகிய நாமும் பங்கு கொள்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 22.01.2018 பிற்பகல் 2.30 மணிக்கு Gurugedara, Kapugedara Road, Uggalboda, Kalutara North எனும் முகவரியில் நடைபெறவுள்ளது.

(அ-1288)

**எஸ்.முரளி**
**0773000967, 0768235343**

# நாடாளுமன்றை கலைக்க பிரதமரை நீக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் இல்லை!

## ஐ.தே.க.பிரதியமைச்சர் அஜித் சுட்டிக்காட்டு





(கொழும்பு)

அரசியலமைப்புச் சட்டத்தின் 19 ஆவது திருத்தச் சட்டத்திற்கு அமைய நாடாளுமன்றத்தை கலைக்கவோ பிரதமரை நீக்கவோ ஜனாதிபதிக்கு அதிகாரம் இல்லை என பிரதியமைச்சர் அஜித் பீ. பெரேரா தெரிவித்துள்ளார்.

பாணந்துறை - கெசல்வத்தை பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

19ஆவது திருத்தச் சட்டத்தின் செல்லுப்படி தன்மையை ஜனாதிபதி அண்மையில் பரீட்சித்துப் பார்த்தார். அவருக்கு பதில் கிடைத்தது.

ஜனாதிபதி 6 ஆண்டுகளுக்கு தெரிவு செய்யப்பட்டார். எனினும் அதனை அவரது விருப்பதுடன் 5 ஆண்டுகளாக குறைத்தோம்.

19ஆவது திருத்தச்சட்டம் அமுலில் இருப்பதால், ஜனாதிபதியாக நாடாளுமன்றத்தை கலைக்க முடியாது. பிரதமரையும் நீக்க முடியாது.

பிரதமரின் இணக்கத்துடனேயே அவரை நீக்க முடியும். இதனால், நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் இருக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கே நாட்டின் அதிகார பலம் உள்ளது.

பழைய முறை இருந்திரு ந்தால், எப்போது நாடாளு மன்றம் கலைக்கப்படுமோ என்ற அச்சத்தில் இருந்தி ருப்போம். ஜனாதிபதி கடுமை யான கருத்துக்களை வெளி யிட்டாலும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எந்த பாதி ப்பும் ஏற்படாது எனவும் அஜித் பீ. பெரேரா மேலும் தெரிவித் தார். (இ-7)

## குற்றவாளிகளைப் பாதுகாக்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளது

### அநுர எம்.பி.சாடல்

(கொழும்பு)

அரசாங்கம் குற்றவாளி களை பாதுகாக்கும் முயற்சி யிலேயே ஈடுபட்டுள்ளதாக ஜே.வி.பியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினரு மான அநுரகுமார திஸாநா யக்க தெரிவித்துள்ளார்.

காலியில் நேற்று முன் தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

"அரசியல் தொடர்பில் மக்கள் தற்போது நம்பிக்கை இழந்துள்ளனர். தேர்தலுக்கு முன்னர் மக்களுக்கு வழ ங்கப்பட்ட வாக்குறுதிகளை மக்கள் பிரதிநிதிகள் நிறை வேற்றுவது இல்லை. மோச



டிகளில் ஈடுபடுவதற்காக மக்கள் யாருக்கும் வாக்களிப்பதில்லை.

கடந்த காலத்தில் மோசடிகளில் ஈடுபட்டவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதாக கூறியே தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. எனினும், அரசாங்கம் குற்றவாளி களை பாதுகாக்கும் முயற்சியிலேயே ஈடுபட்டுள்ளது' என அவர் கடுமை யாகச் சாடினார். (இ-7)

### ட்ரம்ப் அரசின் பட்ஜெட் நிராகரிப்பு

## கொழும்பு அமெரிக்க மையம் தற்காலிகமாக மூடப்பட்டது!

(கொழும்பு)

கொழும்பிலுள்ள அமெரிக்க மையம் (American Center) மறு அறிவித்தல் வரும் வரையில் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

அமெரிக்க அரசாங்கத்தின் குறுங்கால வரவு-செலவுத் திட்டத் துக்கு, அமெரிக்க செனட் உறுப்பினர்கள் அங்கீகாரம் அளிக்க மறுத்துள்ளதால், அமெரிக்காவின் பெரும்பாலான அரச பணிய கங்கள் மூடப்பட்டுள்ளன.

பென்டகன் மற்றும் ஏனைய சில சமஷ்டி முகவர் அமைப்புக ளுக்கான நிதி ஒதுக்கீடுகளுக்கு, செனட்டின், குடியரசு மற்றும் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் அங்கீகாரம் அளிக்க மறுத்து வருகின்றனர்.

இதனால், அமெரிக்காவின் பெரும்பாலான அரசு பணியகங்கள் செயலிழந்துள்ளன.

குறிப்பாக நுழைவிசைவு வழங்கும் பணிகளில் பெரும் பாதிப்பு ஏற்படும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதுகுறித்து கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், திட்டமிட்டபடி, கடவுச்சீட்டு மற்றும் நுழைவிசைவு சேவைகள் தொடரும் என்றும், அமெரிக்க மையம் மறு அறிவித்தல் வரும் வரை மூடப்பட்டிருக்கும் என்றும் தெரிவித்துள்ளது. (இ-7)


## அன்புடன் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு...

மீண்டும் ஒரு தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள சூழலில், உங்களின் நியாயமான தீர்ப்புக்காக உங்களுடன் மனந்திறந்து சில கருத்துக்களைப் பறிமாறிக்கொள்ள முற்படுகின்றேன்.

1989ஆம் ஆண்டுக்குப் பின்னர் எமது தாயகப் பிரதேசத்தில் இயல்புச் சூழல் முடக்கப்பட்டுக் கிடந்ததையும், அரசியல் தலைமைகள் செயற்பட முடியாமல் இந்த மண்ணைவிட்டு வெளிநாடுகளுக்கும், தென் இலங்கைக்கும் ஓடியதையும், அரச இயந்திரம் இயங்க முடியாமல் போனதையும் உங்களில் பலர் அறிந்திருப்பீர்கள். அவ்வாறான ஓர் இருண்ட சூழலிலேயே துணிச்சலோடு தேசிய நீரோட்டத்தில் நான் கலந்துகொண்டேன்.

அந்தச் சூனியச் சூழலையும், தடைகளையும் எதிர்கொண்டு, எமது தாயகத்தில் ஜனநாயகச் சூழலை ஏற்படுத்துவதற்கும், எமது மக்கள் இயல்புச் சூழலை அனுபவிப்பதற்கும் உயிர் அச்சுறுத்தலுக்கு முகம் கொடுத்தபடி நானே முன்னின்று உழைத்திருந்தேன்.

மக்கள் சேவையை திறம்படச் செய்து முடிப்பதற்காக இரவு பகல் பாராமலும், நேர, காலம் பாராமலும், மழை, வெய்யில் பாராமலும் நான் செயல்பட்டபோது, எனக்கு உங்களின் ஆலோசனைகள் தேவையாக இருந்தன. உங்களின் பங்களிப்பும் தேவையாக இருந்தது. அதற்காக, எந்தவேளையில் நான் உங்களை அழைத்தாலும் நீங்கள் வருகை தந்து மனம் சோராமல் உதவி செய்தீர்கள்.

அரசாங்க உத்தியோகத்தர்கள் தமது பணியைச் செய்தாலும், அதை ஒரு சமூக சேவையாகவும், மனிதாபிமானப் பணியாகவும் நினைத்து மக்களுக்கு செய்ய வேண்டும் என்று நான் உங்களிடம் கோரிக்கை விடுத்ததையும், நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். அத்துடன் நீங்கள் நியாயமாகவும், சுதந்திரமாகவும் செயல்பட உங்களுக்கு நான் பக்கபலமாக இருந்ததையும் நினைவில் கொண்டிருப்பீர்கள் என்றும் நம்புகின்றேன்.

உங்கள் பங்களிப்பும், உதவியும் கிடைக்கப்பெற்றதால்தான், யுத்த இடிபாடுகளாகக் கிடந்த யாழ். குடா நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடிந்தது.

எனது அயராத முயற்சியினால்தான் வடக்கிலும், கிழக்கிலும் பல ஆயிரம் பேருக்கு அரச வேலை வாய்ப்புகளைப் பெற்றுக்கொடுக்கவும் முடிந்தது. அந்த நன்றி உணர்வோடு இன்னும் பலர் இருப்பதையும் அன்போடு ஞாபகத்தில் வைத்திருக்கின்றேன்.எமது மக்கள் எதிர்கொண்ட பல்வேறு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக நேரகாலம் பாராமல் நான் அரச அதிகாரிகளை அழைத்திருந்தேன் என்பதற்காகவும், மக்கள் முன்வைக்கும் கோரிக்கைகளுக்கு நியாயமான உடனடித் தீர்வு காணப்பட வேண்டும் என்று பிடிவாதமாக கேட்டுக்கொண்டதற்காகவும் உங்களில் சிலர் அதிருப்தியடைந்திருப்பதாலேயே தபால் மூல வாக்குகளில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி(ஈ.பி.டி.பி)க்கு கணிசமான வாக்குகள் கிடைப்பதில்லை என்று கூறப்படுவதை நான் உண்மையென்று நம்பவில்லை.

எமது மக்களுக்காகவே நான் பாடுபட்டேன். எமது மண்ணுக்காகவே உழைத்தேன். கடந்த மூன்று வருடங்களாக எனக்கு எதிரான சக தமிழ் அரசியல் கட்சிகள் செய்த சதி காரணமாக பாதிக்கப்பட்டவர்கள் எமது மக்களும், அபிவிருத்தியற்று முடங்கிப்போனது எமது தாயகப் பிரதேசமும்தான். இப்பாதிப்பையும், பின்னடைவையும் எமது மக்கள் உணர்ந்து வருவதையும், அதை வெளிப்படுத்தி வருவதையும் நான் புரிந்து கொள்கின்றேன்.

இந்த முடக்கத்திலிருந்து அபிவிருத்தியும், மீள் எழுச்சியும் முழு வீச்சில் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும். எதிர்காலம் மீதான நம்பிக்கையை எமது மக்களிடையே மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும். சமூகச் சீர்கேடுகளை நிறுத்தி, அதனால் பாதிப்புக்குள்ளானவர்களை அதிலிருந்து மீட்டெடுக்க வேண்டும். அதற்காக நீங்களும் எனக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். நீங்கள் கடந்த காலத்தில் எவ்வாறான தீர்மானம் எடுத்திருந்தாலும் பரவாயில்லை. இம்முறை நியாயத்திற்காக எனது கோரிக்கையை ஏற்று நியாயத் தீர்ப்பை எழுதுவீர்கள் என்று நம்புகின்றேன்.

முயல்வோம்! வெல்வோம்! உளம்சோரோம்!!






என்றும் மக்கள் சேவையிலுள்ள
**டக்ளஸ் தேவானந்தா பா. உ**
செயலாளர் நாயகம்
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)

(2457)

பட்லர் பிரமாதமான சதம்

# தொடரை வென்றது இங்கிலாந்து சிட்னியிலும் வீழ்ந்தது அவுஸ்திரேலியா



பட்லரின் அட்டகாசமான சதம் கைகொடுக்க சிட்னி ஒரு நாள் போட்டியிலும் அசத்திய இங்கிலாந்து, ஹட்ரிக் வெற்றியுடன் தொடரைக் கைப்பற்றியது.

சொந்த மண்ணில் சொதப்பிய அவுஸ்திரேலியா ஏமாறமடைந்தது.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொணடுள்ள இங்கிலாந்து அணி, அங்கு 5 போட்டிகள் கொண்ட ஒருநாள்தொடரில்பங்கேற்கிறது.

முதலிரண்டு போட்டிகளில் தோல்வியடைந்த அவுஸ்திரேலியா, 0-2 என்ற கணக்கில் தொடரில் பின்தங்கி இருந்தது. இந்நிலையில் 3ஆவது ஒருநாள்போட்டி, சிட்னியில்நடந்தது. இதில்வெனறால் மட்டுமே, தொடரை வெல்லும் வாய்ப்பை தக்க வைத்துக் கொள்ள முடியும் என்ற இக்கட்டான நிலையில் அவுஸ்திரேலியா களமிறங்கியது.

நாணயச்சுழற்சியில்வென்ற அவுஸ்திரேலிய அணித் தலைவர் ஸ்ரீவ் ஸ்மித், முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தார்.

**மோர்கன் ஆறுதல்**

இதனடிப்படையில் முதலில் துடுப்பாட்டம்செய்த இங்கிலாந்து அணிக்கு ஜேசன் ரோய் (19), சுமாரான ஆரம்பம் கொடுத்தார். அலெக்ஸ் ஹேல்ஸ் (1) ஏமாற்றினார். ஜொனி பேர்ஸ்டோவ் (39), ஜோ ரூட் (27) பெரிய அளவில் சோபிக்கவில்லை. பின் இணைந்த அணித் தலைவர் ஒய்ன் மோர்கன், ஜோஸ் பட்லர் ஜோடி பொறுப்பாக ஆடியது.

இவ் இணை 5ஆவது விக்கெட்டுக்காக 65 ஓட்டங்களைப் பகிர்ந்திருந்தபோது, ஹேசல்வுட் 'வேகத்தில்' மோரகன் (41) வெளியேறினார். மிட்சல் மார்ஷ்பந்தில்மொயீன் அலி (6) போல்டானார்.

**பட்லர் அபாரம்**

அடுத்து வந்த கிறிஸ் வோக்ஸ், பட்லருடன் இணைந்து அதிரடியாக ஓட்டங்கள் குவித்தார். மிட்சல் ஸ்ரார்க் வீசிய கடைசி ஓவரில், தொடர்ச்சியாக ஒரு பவுண்டரி, ஒரு சிக்ஸர் அடித்த வோகஸ் 35 பந்துகளில் அரை சதம் கடந்தார். கம்மின்ஸ் வீசிய 49ஆவது ஓவரில், 2 சிக்ஸர், ஒரு பவுண்டரி விளாசிய பட்லர், ஸ்ரார்க் வீசிய கடைசி பந்தில் 2 ஓட்டங்கள் எடுத்து சதமடித்தார்.

இங்கிலாந்து அணி 50 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 302 ஓட்டங்கள் குவித்தது. பட்லர (100), வோக்ஸ் (53) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் அவுஸ்திரேலியா சார்பில் ஹேசல்வுட் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

**பின்ச் அரைசதம்**

சவாலான இலக்கை விரட்டிய அவுஸ்திரேலிய அணிக்கு டேவிட் வோர்னர் (8) ஏமாற்றினார். கமரூன் வைட் (17) நிலைக்கவில்லை. அபாரமாக ஆடிய ஆரோன் பின்ஞ் (62) அரைசதம் கடந்தார். பொறுப்பாக ஆடிய அணித் தலைவர் ஸ்ரீவ் ஸ்மித் (45), மிட்சல் மார்ஷ் (55), ஸ்டாய்னிஸ் (56) ஓரளவு கைகொடுத்தனர்.

அவுஸ்திரேலிய அணி 50 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 286 ஓட்டங்கள் எடுத்து 16 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

ரிம் பெய்ன் (31), கம்மின்ஸ் (1) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பில் மார்க் வூட், கிறிஸ் வோக்ஸ், அடில் ரஷித ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இவ்வெற்றி மூலம் இங்கிலாந்து அணி 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 3-0 எனக் கைப்பற்றி, முன்னிலை வகிக்கிறது.

போட்டியின் ஆட்டநாயகன விருதை இங்கிலாந்தின் பட்லர் வென்றார்.

இரு அணிகளுக்கும்இடையிலான 4ஆவது ஒரு நாள் போட்டிஎதிர்வரும்26ஆம்திகதி அடிலெய்டில் நடக்கிறது.

**ஆஷஸ் பதிலடி**

சமீபத்தில் முடிந்த, 5 போட்டிகள் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடரை, அவுஸ்திரேலிய அணி 4-0 எனக் கைப்பற்றி கிண்ணம் வென்றது. இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் முதல் மூன்று போட்டிகளில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி, 3-0 என தொடரை கைப்பற்றி முன்னிலை வகிக்கிறது.

**களத்தடுப்பு மோசம்**


நேற்று அவுஸ்திரேலியாவின் களத்தடுப்பு மோசமாக இருந்தது. 4 பிடி மற்றும் 2 'ரன்அவுட்' வாய்ப்புகளை வீணடித்தது. இது, தோல்விக்கு வித்திட்டது. மொயீன் அலி ஒரு ஓட்டம் எடுத்திருந்த போது கமரூன் வைட் பிடி வாய்ப்பை நழுவவிட்டார். ஆட்டத்தின் 21ஆவது ஓவரில் 6 ஓட்டங்கள் எடுத்திருந்த மோர்கன் கொடுத்த 'கேட்ச் அன்ட் பவுல்' விக்கெட் வாய்ப்பை மிட்சல் ஸ்டார்க் கோட்டைவிட்டார். பின், சாம்பா வீசிய 27ஆவது ஓவரில் 18 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் மோர்கன் கொடுத்த பிடியை' ஸ்டீவ் ஸ்மித் வீணடித்தார். இதனை பயனபடுத்திக் கொண்ட மோரகன் 41 ஓட்டங்கள் எடுத்தார்.

**ஸ்மித் 'பிடி' சர்ச்சை**

இங்கிலாந்தின் மார்க் வூட் வீசிய 34ஆவது ஓவரின் கடைசி பந்தை அவுஸ்திரேலிய அணித் தலைவர் ஸ்டீவ் ஸ்மித் அடித்தார். தாழ்வாக வந்த பந்தை விக்கெட் காப்பாளர் பட்லர் பிடித்தார். அப்போது பந்தை தரையில் பட்டதாக நினைத்த ஸ்மித், 'பெவிலியன்' திரும்பாமல் நின்று கொண்டிருந்தார். இதுகுறித்து மூன்றாவது நடுவரிடம் முறையிடப்பட்டது. 'டிவி நடுவர் இலங்கையின் குமார் தர்மசேன, பலமுறை 'ரிப்ளே' பார்த்து, பந்து தரையில் படவில்லை என கூறி, ஆட்டமிழப்பு வழங்கினார். அப்போது, 45 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் ஸ்மித் வெளியேறினார். இது, போட்டியில் திருப்பமாக அமைந்தது.

அவுஸ்திரேலியன் ஓபன்

# காலிறுதியில் நடால், வோஸ்னியாக்கி



அவுஸ்திரேலியன் ஓபன் டென்னிஸ் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு ஸ்பெயினின் ரபெல் நடால், டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கி உள்ளிட்டோர் முன்னேறினர்.

அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில், நடப்பு ஆண்டின் முதலாவது கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடரான அவுஸ்திரேலிய ஓபன் நடக்கிறது.

இதன் ஆண்கள் ஒற்றையர் பிரிவு 4ஆவது சுற்றில், உலகின் 'நம்பர்-1' வீரரான ஸ்பெயினின் ரபெல் நடால், 26ஆவது இடத்தில் உள்ள ஆர்ஜென்டினாவின் டியாகோ ஸ்வார்ட்ஸ்மேன் மோதினர். முதல் செட்டை 6-3 எனக் கைப்பற்றிய நடால், 'டைபிரேக்கர்' வரை சென்ற இரண்டாவது செட்டை 6-7 எனக் கோட்டைவிட்டார். பின் எழுச்சி கண்ட இவர், அடுத்த இரண்டு செட்களை 6-3, 6-3 என தன்வசப் படுத்தினார். மூன்று மணி நேரம், 51 நிமிடம் வரை நீடித்த போட்டியின் முடிவில், நடால் 6-3, 6-7, 6-3, 6-3 என்ற கணக்கில் போராடி வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு 4வது சுற்றுப் போட்டியில் குரோஷியாவின் மரின் சிலிச் 6-7, 6-3, 7-6, 7-6 என்ற செட் கணக்கில் ஸ்பெயினின்பாப்லோகாரனோ பஸ்டாவை தோற்கடித்து, காலிறுதிக்கு தகுதி பெற்றார்.

**வோஸ்னியாக்கி அபாரம்**

பெண்கள் ஒற்றையர் பிரிவு 4ஆவது சுற்றுப் போட்டியில, டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கி, சுலோவாகியாவின் மக்டலினா ரிபரிகோவா மோதினர்.

ஒரு மணி நேரம் 3 நிமிடம் நீடித்த போட்டியில், அபாரமாக ஆடிய வோஸ்னியாக்கி 6-3, 6-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு 4ஆவது சுற்றுப் போட்டியில், ஸ்பெயினின் கார்லா சாரஸ் நவரோ 4-6, 6-4, 8-6 என்ற கணக் கில் எஸ்தோனியாவின் அனெட் கான்டவேட்டை வீழ்த்தி, காலிறுதிக்குள் நுழைந்தார்.

மற்றொரு போட்டியில், பெல்ஜியத்தின் எலிஸ் மெர்டன்ஸ் 7-6, 7-5 என குரோஷியாவின் பெட்ரா மாட்ரிக்கை தோற்கடித்து காலிறுதிக்கு தகுதி பெற்றார்.



திசர பெரேரா சகலதுறை பிரசன்னம்

# தனது நிலையை தக்கவைத்தது இலங்கை



திசர பெரேராவின் சகலதுறை பிரசன்னத்தால் சிம்பாப்வே அணிக்கு எதிரான முத்தரப்பு ஒரு நாள் தொடரின்4ஆவது லீக் போட்டியில் இலங்கை அணி 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

பங்களாதேஷ், இலங்கை, சிம்பாப்வே அணிகள் மோதும் முத்தரப்பு ஒரு நாள் தொடர் பங்களாதேஷில் நடக்கிறது.

இதன்4ஆவது லீக்போட்டி நேற்று மிர்பூரில் நடந்தது. இதில் இலங்கை - சிம்பாப்வே அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற சிம்பாப்வே அணி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

**திசர அபாரம்**

சிம்பாப்வே அணிக்கு 'வேகங்கள்' ஆரம்பத்திலேயே 'செக்' வைத்தன. திசர பெரேரா பந்துவீச்சில் மசகட்சா (20), சொலமன் (21), எர்வின் (2) சிக்கினர். சன்டகன் 'சுழலில்' சிக்கந்தர் (9), வோலர் (24) ஆட்டமிழந்தனர். தனி வீரராக போராடிய பிரண்டன் ரெய்லர் (58) அரை சதம் கடந்தார். நுவன் பிரதீப் பந்தில் அணித் தலைவர் கிரீமர் (34) ஆட்டமிழந்தார். சிம்பாப்வே அணி 44 ஓவர்களில் 198 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

பந்துவீச்சில் இலங்கை சார்பில் அதிகபட்சமாக திசர பெரேரா 4 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

**எளிய இலக்கு**

எளிய இலக்கை விட்டிய இலங்கை அணிக்கு தரங்க (17), டிக்வெல (7) ஏமாற்றினர். குசால் பெரேரா (49) அரை சத வாய்ப்பை இழந்தார். குசல் மெண்டிஸ் 36 ஓட்டங்கள் எடுத்தார். பொறுப்புத் தலைவர் சண்டிமல், திசர பெரேரா இணைந்து வெற்றியை உறுதி செய்தனர்.

முடிவில், இலங்கை அணி 44.5 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை (202 ஓட்டங்கள்) 5 விக்கெட்டுக்களால் அடைந்தது.

களத்தில் சண்டிமல் (38), திசர பெரேரா (39) இருந்தனர்.

இதன்மூலம், இத் தொடரில் இலங்கை அணி முதல் வெற்றியை பதிவு செய்தது.

# பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் இளைஞன் பலி!

# கதிர்காமத்தில் பதற்றம்!

## அதிரடிப்படை குவிப்பு; மக்கள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

கதிர்காமம் நகரில் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் இளைஞன் ஒருவர் உயிரிழந்த சம்பவத்திற்கு பின்னர் தொடர்ந்து அந்த பகுதியில் பொலிஸ் அதிரடிப் படையினர் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கதிர்காமம் பொலிஸ் நிலையம், வைத்தியசாலை மற்றும் அரசாங்க கட்டடங்களுக்கு விசேடமாக பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்ட பொலிஸ் உத்தியோகத்தர் இந்த மாதம் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு பொலிஸ் ஆணையை மீறி சென்ற மோட்டார் சைக்கிள் மீது பொலிஸாரால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில் கதிர்காமம் நகருக்கு வந்த பிரதேசவாசிகள் எதிர்ப்பில் ஈடுபட்டதோடு, பொலிஸ் நிலையம் மீது கல்வீச்சு தாக்குதலையும் மேற்கொண்டுள்ளனர்.

பின்னர் இதனை கட்டுப்படுத்துவதற்காக கண்ணீர் புகை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலதிகமாக பொலிஸ் அதிரடிப் படையினரும் பாதுகாப்பிற்காக பயன்படுத்தப்பட்டுள்ளனர்.

எனினும் நேற்றுக் காலை 9.30 மணியளவில் மீண்டும் கதிர்காமம் பொலிஸ் நிலையம் முன்கூடிய பிரதேசவாசிகள் எதிர்ப்பில் ஈடுபட்டனர்.

இதன்போது மக்கள் பொலிஸாருக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து டயர்களை எரித்துள்ளனர்.



நிலவும்பதற்றசூழ்நிலையை கருத்தில் கொண்டு தொடர்ந்து அந்த பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் காரியாலயம் தெரிவித்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் தங்காலைக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியின் கீழ் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த விசாரணைக்கு அமைவாக இதுவரை 20 பேரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதாக விசாரணைகளை மேற்கொள்ளும் அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-7)

## விசாரணைக்கு விசேட குழு-பூஜித

(கொழும்பு)

கதிர்காமத்தில், பொலிஸாரின் ஆணையை மீறி பயணித்த மோட்டார் சைக்கிள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணை செய்ய அப் பகுதிக்கு விசேட குழுவொன்றை அனுப்புமாறு, பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர உத்தரவிட்டுள்ளார்.



நேற்று முன்தினம் இரவு கதிர்காமத்தில், பொலிஸாரின் சமிக்ஞையையும் மீறி மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றதாகக் கூறி பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இளைஞன் ஒருவர் உயிரிழந்தார்.

இதனால் கோபமடைந்த அப்பகுதி மக்கள் பொலிஸ் நிலையம் மீது கல்வீசித் தாக்குதல் நடத்தினர். அதைத் தடுப்பதற்காக பொலிஸார் கண்ணீர்ப்புகை குண்டுகளைப் பிரயோகித்தனர். இதையடுத்து அங்கு பதற்ற நிலை உருவாகியுள்ளது.

இதனையடுத்தே குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்த விசேட குழு அனுப்பப்படுகிறது. (இ-7)

## பொங்கல் பிற்போடல்

(கரணவாய்)

சுழிபுரம் பறாளை விநாயகர் கோவிலில் இன்று நடைபெறவிருந்த பொங்கல் விழா தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது.

வடக்கு ஆளுநர் செயலகத்தின் ஏற்பாட்டில் தைப் பொங்கல் விழா கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. தவிர்க்க முடியாத காரணத்தினால் வேறு ஒரு தினத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

இந்நிகழ்வு நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என ஆளுநரின் செயலாளர் அறிவித்துள்ளார். (இ-60)

## ஊவா முதலமைச்சர் விவகாரம் ஊடகங்கள் சோடித்தவையாம்

### மேல் மாகாண முதலமைச்சர் இசுறு கூறுகிறார்



(கொழும்பு)

ஊவா முதலமைச்சர் அதிபரை அச்சுறுத்தி, மண்டியிட செய்ததாக கூறப்படும் செய்தி தவறானது எனவும் இது ஊடகங்களினால் சோடிக்கப்பட்ட ஒன்று என வும் மேல் மாகாண முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய தெரிவித்தார்.

ஊவா முதலமைச்சர் தன்னிடம் தொடர்பு கொண்டு நடந்த சம்பவத்தை தெளிவாகக் கூறினார். இந்தத் தேர்தலில் ஊவா முதலமைச்சரின் மனைவியும் போட்டியிடுகின்றார்.

இதற்கு முன்னர் இடம்பெற்றது போன்று இதுவும் ஊடகத்தினால் சோடிக்கப்பட்டது எனவும் முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய மேலும் தெரிவித்தார். (இ-7)

**மீனம்:** பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறும் நாள், புதியவர்களின் நட்பு கிடைக்கும், கற்பனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு, திட்டமிட்ட காரியத்தில் திசைதிருப்பங்கள் ஏற்படலாம்.

**மேடம்:** வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், வழக்கத்தைவிட கூடுதல் நேரம் பணிபுரியும் சூழ்நிலை ஏற்படலாம், வெளியூர்த் தொடர்புகள் ஏற்படலாம்.

**இடபம்:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், போசன சுகமுண்டு.

**மிதுனம்:** மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், அரசு வழியில் அனுகூலமுண்டு, தொழில் வளர்ச்சி கூடும் நாள், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கும்பம்:** ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த கவலைகள் தீரும், நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், வாக்கு மேன்மையுண்டு, கோரிக்கைகள் நிறைவேறும் நாள்.

| | | | |
|---|---|---|---|
| சந் | | | |
| | இராசிபலன் | | ராகு |
| சூரி.சுக் கேது | கிரகநிலை சந்திராட்ஷமம் உத்தரம் | | |
| சனி புத | செவ் | குரு. | |

**22.01.2018**

தை 09, திங்கட்கிழமை

சூரிய உதயம் காலை 06.35 மணிக்கு

பஞ்சமி பிற்பகல் 01.39 மணிவரை

உத்திரட்டாதி பின்னிரவு 5.19 மணிவரை

சுபநேரம் 12.35-2.05 மணிவரை

இராகுகாலம் 8.05-9.35 மணிவரை

சஷ்டி விரதம்

குறிப்பு: உத்தரம் நட்சத்திரத்தில் பிறந்தோர் இன்று நிதானத்துடன் நடந்து கொள்ள வேண்டிய நாள்.

வளவன்

**கடகம்:** மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு, உடல்நலன் சீராகும்.

**மகரம்:** சேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், இளைய சகோதர வழியில் இனிய செய்திகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.

**சிம்மம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், வேலைச்சுமை கூடும் நாள்.


**தனுசு:** பெரியோரின் ஆதரவு பெருகும் நாள், நம்பிக்கைகள் நடைபெறும் நாள், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**விருச்சிகம்:** சொல்லை செயலாக்கி காட்டுவீர்கள், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், மகிழ்ச்சி கூடும் நாள், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, வியாபார விருத்தியுண்டு.

**துலாம்:** நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சுப தகவல்கள் வந்து சேரலாம், தலைமைப் பதவிகள் உங்களைத் தேடி வரலாம், ஆரோக்கியமான நாள்.


**கன்னி:** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், போசன சுகமுண்டு.

# பருத்தித்துறை கடற்கரையில் ஒதுங்கிய மூங்கில் தெப்பம்









(கரணவாய்)

காணி ஒன்றிற்குள் வீடு அமைந்திருப்பது போன்று மூங் கிலால் செய்யப்பட்ட தெப்பம் ஒன்று பருத்தித்துறை சுப்பர் மடம் கடற்கரையில் ஒதுங் கியுள்ளது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இந்தத் தெப்பம் கரை ஒதுங்கியுள்ளது.

மூங்கிலால் செய்யப்பட்ட நிலப்பரப்பில் வேலி போன்று நான்கு பக்கமும் அடைக்கப்பட்டு அதற்குள் வீடு மாதிரியான உரு ஒன்று செய் யப்பட்டு பூச் செண்டுகள் வைக்கப்பட்டு அதற்குள் ஒரு பாத்திரம் வைக்கப்பட்டுள்ளது. இதைப் பார்ப்பதற்கு பெருமளவான மக்கள் கடற்கரை யில் கூடினர். (இ-7-19-60)



# முறி மோசடியால் ஏற்படும் விளைவை 2045ம் ஆண்டு வரை எதிர்கொள்ள வேண்டும்

## பந்துல எம்.பி. தெரிவிப்பு

இலங்கை மத்திய வங்கி பிணை முறி மோசடியினால் ஏற்படும் விளைவிற்கு எதிர் வரும் 2045 ஆம் ஆண்டு வரை முகம் கொடுக்க வேண் டிய நிலை ஏற்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரி வித்துள்ளார். ஸ்ரீலங்கா பொது ஜன முன்னணியின் கட்சி தலைமையகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெ ற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கை யி லேயே அவர் இதனைத் தெரி வித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

நிதிமோசடி காரணமாக கடந்த மூன்று வருடங்களில் 2 ஆயிரம் பில்லியன் ரூபா அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்பட்டுள்ளது. ஆனால் நிதிமோ சடி மூலம், பாரிய நட்டங்கள் ஏற்ப டவில்லை என்பதை ஐக் கிய தேசிய கட்சி யினர் நிரூபிக்க முயல்கின்ற னர்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பண்டாரிக்குள வெள்ள வடிகாலில் கழிவுநீர் தேக்கம்;தொற்றுநோய் அச்சம்





(யாழ்ப்பாணம்)

நல்லூர் சங்கிலியன் வீதி யில் அமைந்துள்ள பண்டா ரிக்குள வெள்ள வடிகாலில் கழிவு நீர் தேங்கி நிற்பத னால் அப்பகுதி மாசடைந்து தொற்றுநோய் பரவக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகவும் இந்நிலையை பலமுறை யாழ்.மாநகர சபைக்கு அப்ப குதி மக்களால் எழுத்துமூலம் அறிவித்தும் எவ்வித நடவடிக் கையும் எடுக்கவில்லை என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

நல்லூர் சங்கிலியன் வீதி யின் பண்டாரிக்குள வீதியில் அமைந்துள்ள பண்டாரிக் குளத்திற்கான வடிகால் வீதி யோரமாக அமைக்கப்பட்டுள் ளது. மழை காலத்தில் அவ் வடிகாலினூடாக வெள்ளநீர் வடிந்தோடி பண்டாரிக்குளத் தினை சென்றடையும். அவ் வடிகாலினுள் கழிவுநீரை செலுத்துவதனால் அப்பகுதி வாய்காலிற்குள் தேங்கி நிற் கும் கழிவு நீரினால் அப்பகுதி துர்நாற்றம் வீசுவதுடன் தொற்றுநோய்களும் ஏற்படக் கூடிய வாய்ப்புள்ளது. அத்து டன் கழிவுநீர் பண்டாரிக்குள த்திற்குள் சென்றடைவத னால் பண்டாரிக்குள நீர் மாசடைந்து அதனூடாக அப் பகுதி முழுமையாக மாசடை ந்து தொற்று நோய் ஏற்படும் அபாயமுள்ளது.

கடந்த மாத ங்களில் இக் கழிவு நீர் தொடர் பாக யாழ். மாநகரசபைக்கு எழுத்து மூலம் அப்பகுதி பொது மக்கள் முறையிட்ட போதும் அவ்வடிகால் இன்னமும் துப்புரவு செய்யப்படாதுள்ள துடன் எவ்வித நடவடிக்கை யும் எடுக்கப்படவில்லை. இவ்வாய்க்கால் தொடர்பாக மாநகரசபையினர், சுகாதா ரத் துறையினர், கிராம உத்தி யோகத்தர் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகி யோர் உடனடியாக விரை ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்து ள்ளனர். (இ-246)

# போக்குவரத்து குற்றங்களுக்கு அபராதத் தொகை அதிகரிப்பு

## வர்த்தமானி அறிவித்தல் வெளியீடு

(கொழும்பு)

கடந்த பாதீட்டின்போது முன்வைக்கப்பட்ட வீதி போக் குவரத்து அபராதம் தொடர் பான சீர்திருத்தம் குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அதிகரிக்கப்பட்ட அபராத தொகைகள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள அதே வேளை, அது குறித்த சீர்தி ருத்தங்கள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டதன் பின்னர் அமுலுக்கு வரும் என தெரி விக்கப்படுகிறது.

எவ்வாறாயினும் , புதிய அபராதத் தொகையை செயற் படுத்துவதற்காக கால அவகா சம் தேவைப்படுவதாக போக் குவரத்து சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் எல்.எப். பதிநாயக்க தெரிவித்தார்.

குறித்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள திருத்தங் களை எவ்வாறு செயற்படுத்து வது என்பது தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப் படவுள்ளதாக அவர் தெரி வித்தார். அதேபோல் , அரசக ரும மொழிகள் திணைக்க ளத்தின் ஊடாக அதனுடன் தொடர்புடைய படிவங்களி லும் திருத்தங்கள் மேற்கொள் ளப்பட வேண்டும்.

அதன்பின்னர் , உரிய முறையில் தயாரிக்கப்படும் படிவங்கள் நாடு பூராகவும் உள்ள பொலிஸ் நிலையங் களுக்கு விநியோகிக்கப்படும்.

அதன் பின்னரே , திருத் தம் மேற்கொள்ளப்பட்ட போக் குவரத்து அபராதத்தை செயற் படுத்த முடியும் என சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் சுட்டிக்கா ட்டினார்.

சீர்த்திருத்தம் மேற்கொள் ளப்பட்ட அபராத முறைக்க மைய ,அதிக வேகத்தில் பயணித்தல் - அபராதம் 3000 ரூபா வரை.

போக்குவரத்து விதி மீறல் களில் ஈடுபடல் - அபராதம் 500 ரூபா தொடக்கம் 1000 ரூபா வரை.

பிரதான வீதியில் நீண்ட நேரமாக வாகனமொன்றின் பின்னால் பயணித்தல் - அபராதம் 20 ரூபா தொட க்கம் 1000 ரூபா வரை.

ஆசனப் பட்டி அணியா மல் வாகனம் செலுத்துதல் - அபராதம் 500 ரூபாய் வரை யும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் போக்குவரத்து சட்டத் திருத்தத்தின்படி 33 போக்குவரத்து குற்றங்க ளுக்காக இவ்வாறு அபராதத் தொகை சீர்த்திருத்தப்பட்டு ள்ளது. (இ-7)

# போதையில் சாரத்தியம் முன்னாள் நீதிபதி கைது

## விளக்கமறியலில் வைக்க உத்தரவு

(கொழும்பு)

அநுராதபுரம்-வாரிய பொல பிரதான வீதியின் மினுவாங்கொடை பிரதேசத்தில் போதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் முன்னாள் மேல்நீதிமன்ற நீதிபதி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குருநாகல் மேல்நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதியே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதுடன், இவரை விளக்கமறியலில் வைக்குமாறு குருநாகல் பதில் நீதிவான் நீதிபதி ஜயபிரேம பீ. தென்னக்கோன் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

சந்தேகநபரான முன்னாள் நீதிபதி செலுத்திய வாகனம் நேற்று முன்தினம் விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த 35 வயதான பெண்ணும், அவரது 12 வயதான மகளும் படுகாயங்களுக்குள்ளாகியதாக வாரிய பொல பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

**வைத்தியம்**

தலைமுடி உதிர்தல், முள்ளந்தண்டு பிரச்சினை, பாரிசவாதம், சலரோகம், உடல்பருமன் குறைத்தல் அல்லது கூட்டுதல் (வயிறு/மார்பு/கை) ஆண்மைக் குறைபாடுகள், குழந்தையின்மை போன்றவற்றிற்கு சிகிச்சை வழங்கப்படும்.

(2470)

தொடர்பு: Shan's Helth Care,
255, K.K.S. Rd, Kokuvil. TP: 077 035 7307

# அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கு அரசாங்கத்திடம் திட்டங்கள் இல்லை

## ஜே.வி.பி. செயலாளர் ரில்வின் சில்வா விசனம்



(கொழும்பு)

அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்வதற்கு அரசாங்கத்திடம் எவ்வித திட்டங்களும் இல்லை என மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

வெலிகமவில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாட்டில் தொழிவாய்ப்புக்கள் இல்லை. பெருந்தோட்டத்துறை உள்ளிட்ட உள்நாட்டு உற்பத்தித் துறைகள் வீழ்ச்சியடைந்துள்ளன.

மறுபுறம் அத்தியாவசிய தேவைகளின் செலவுகள் அதிகரித்துள்ளன. இதற்கு அரசாங்கத்திடம் திட்டங்களில்லை. கடந்த 70 வருடங்களாக நாட்டை ஆண்ட அரசாங்கங்கள், வருவாய் ஈட்டுவதற்கான வழிமுறைகளை உருவாக்கவில்லை.

இந்த நிலையில், மக்கள் தொடர்ந்தும் கடன் ஆதரவில் வாழவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியுள்ளனர்" என மேலும் அவர் தெரிவித்தார். (இ-7)

## கனடாவில் கல்வி, தொழில் மற்றும் வாழ்வு

**கனேடிய முன்-பல்கலைக்கழக நிகழ்ச்சித் திட்டம்**

(ஒன்டாரியோ கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டது)

**உடனடி நேர்முகத் தேர்வு மற்றும் தெரிவு**

குறைந்த கல்வித் தகுதி: க.பொ.த சாதாரண தர அல்லது அதற்கு இணையானது.

வயதெல்லை: 17 வயது முதல் 30 வயது வரை
விசேட சலுகைகள்: IELTS தேவையில்லை/ உள்நாட்டு அறவீடுகள் இல்லை.
திகதி மற்றும் நேரம்: 23.01.2018/ காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை.

இடம்: கிறீன்கிராஸ் ஹொட்டல் (யாழ்ப்பாணம்)

மேலதிக விபரங்களுக்கு:
SIBM தனியார் கல்வி நிறுவனம்,
128. ஹைலெவல் வீதி, நுகேகொடை, இலங்கை
தொ.இல: 0113 370 397 e: study@sibm.edu.lk
w: www.sibm.edu.lk
(74)




1985ம் ஆண்டிலிருந்து இன்று வரையானதொரு
தனித்துவமிக்க பயிற்சி நிலையம்

யாழ். **கலாலயா** பயிற்சியகம்

விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

**மகளிருக்கான 4 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**

- *கேக் ஐசிங்* - றோயல், Parchment, Frosting, Fondant, Whipping Cream Icing, மாச்சீனி மலர்கள். (Sugar Flowers).
- *உணவு தயாரித்தல்* - உணவு வகைகள், 6 வகையான Cakes, Cup Cake மற்றும் பீஸா, சிற்றுண்டிகள் குளிர்பானங்கள், ஐஸ் கிறீம், புடிங் தயாரித்தல்.
- FACIALS *(முக அழகுக்கலை)* Pedicure, Manicure, Nail Art, கண் புருவம் சீராக்குதல் (Eye Brow Threading), தேவையற்ற முடிகளைஅகற்றுதல் (Waxing)
- *கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்* 40 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல், முடி சுருட்டுதல், Hair Colouring, முடி வெட்டுதல், Hair Perming.
- BRIDAL DRESSINGS *(மணப்பெண் அலங்காரங்கள்)* இந்து, கிறிஸ்தவ இஸ்லாம் மணப் பெண் அலங்காரமும் Modern, கூர்க்காஸ், சிங்கப்பூர் குஜராத்தி, மடிசார், சிங்கள முறையிலான சேலை அணியும் முறைகள். முறைகளும் பயிற்று விக்கப்படும்.

**பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**

- *பிளவுஸ், சாறி பிளவுஸ், சுரிதார்,* மற்றும் ஆடைகள் தைக்கும் சான்றிதழ் அற்ற கிழமை நாள் தையல் பயிற்சிகள்.

**பயிற்சிகள் யாவும் பலவருட அனுபவமிக்க எமது ஆசிரியைகளினால் சிறந்த முறையில் பயிற்றுவிக்கப்படும்!**

கிழமை நாள் மற்றும் சனி, ஞாயிறு பிரிவுகள் 31-01-2018 புதன்கிழமை
(தைப்பூச நாளில்) ஆரம்பமகின்றது
நேரம் 10.00மணி

மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம். -இயக்குநர்-

## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்:மிருகசீரிடம்<br>கி.பா:85 செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/தாதி<br>தொ.இ: B/2708 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/7460 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>தகைமை/தொழில்:திட்டபொறியியல்<br>தொ.இ: B/7301 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: சூரி செவ் 11 இல்<br>தகைமை/தொழில்: பட்டதாரி<br>தொ.இ: G/7465 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா:26 செவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/7305 | பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி<br>கி.பா: 53<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L/ஆசிரியர்<br>தொ.இ: G/7469 |
| பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 48 செவ் 8 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: BSc/அரசதொழில் | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 5 சூரிசெவ் 10 இல்<br>உயரம்: 158cm<br>தகைமை/தொழில்: BSc/அரசதொழில்<br>எதிர்பார்ப்பு: பெண் விவாகரத்தானவர் |


கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# இரும்புப் பொருட்களை எடுப்பதற்காக மூட்டப்பட்ட தீயே குப்பை மேட்டில் பரவியது

## மன்னார் நகரசபை செயலாளர் தெரிவிப்பு

(பனிக்கன்குளம்)

மன்னார் பொது மயானத்திற்கு பின் பகுதியில் குவித்து வைக்கப்பட்டிருந்த குப்பை மீது தீப்பரவல் ஏற்பட்டமையினால் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை மன்னார்-தலைமன்னார் பிரதான வீதியூடான போக்குவரத்து நீண்டநேரம் பாதிக்கப்பட்டதோடு, அப்பகுதி மக்கள் பல்வேறு அசௌரியங்களுக்கு முகம் கொடுத்திருந்தனர்.



மன்னார்-தலைமன்னார் பிரதான வீதியில் உள்ள மன்னார் பொது மயானத்திற்கு பின் பகுதியில் மன்னார் நகரில் சேகரிக்கப்படுகின்ற கழிவுப்பொருட்கள் மன்னார் நகர சபையினால் தினம் தோறும் கொட்டப்படுகின்றன.

இந்த நிலையில் குறித்த கழிவுப்பொருட்களான குப்பையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை திடீர் என தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

இதன் போது அங்கு குவிக்கப்பட்டிருந்த குப்பைகள் எரிய தொடங்கியது. இதனால் அப்பகுதி பாரிய புகை மண்டலமாக காணப்பட்டது.

இதனால் குறித்த வீதியூடான போக்குவரத்து நீண்ட நேரமாக தாமதம் அடைந்ததுடன் அப்பகுதியில் வசித்து வரும் மக்கள் மூச்சுத்திணறலுக்கு உள்ளாகியதோடு, பல்வேறு அசௌரியங்களுக்கும் முகம் கொடுத்துள்ளனர்.

குறிப்பாக அப்பகுதியில் வசித்து வரும் சிறுவர்கள், வயோதிபர்கள் மற்றும் கர்ப்பிணிகள் என அனைவரும் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக மன்னார் நகர சபையின் செயலாளரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் உடனடியாக பவுசர் மூலம் நீர் கொண்டு செல்லப்பட்டு தீ அணைக்கப்பட்டது.

குறித்த குப்பைகளில் காணப்பட்ட இரும்பு பொருட்களை எடுக்க சில சிறுவர்கள் முயற்சி செய்ததாகவும், இதன் போது அவர்கள் பற்ற வைத்த தீயே குப்பைமேட்டில் தீ பரவியதற்கான காரணம் என நகர சபை செயலாளர் தெரிவித்துள்ளார். (2-281)

# தமிழில் பொலிஸ் கீதம்



(வவுனியா)

வடக்கு, கிழக்கு மக்களுக்கு விளங்கும் வகையில் பொலிஸ் கீதமும் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட கீதம் நேற்று முன்தினம் வவுனியாவில் இடம் பெற்ற நிகழ்வின் போது பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தரவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த கீதத்தின் மொழி பெயர்ப்பு இசையமைப்பாளர் கந்தப்பு ஜயந்தனினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

151 வருட கால பழைமையுள்ள பொலிஸ் வரலாற்றில் முதன் முறையாக பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தரவின் வழிகாட்டலின் பேரில் பொலிஸ் கீதம் தமிழில் இசைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-7-250)




# வள்ளிபுனத்தில் வசதியற்ற குடும்பத்திற்கு பொலிஸார் வீடு அமைத்து கையளிப்பு





(பனிக்கன்குளம்)


அடிப்படை வசதிகளின்றி தற்காலிக கூடாரத்தில் வாழ்ந்த குடும்பம் ஒன்றிற்கு பொலிஸார் புதிய வீடு ஒன்றை கட்டி வழங்கியுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திற்குட்பட்ட வள்ளிபுனம் கிராமத்தில் தற்காலிக கொட்டிலில் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் வசித்து வந்த வயோதிபக் குடும்பம் ஒன்றிற்கும் இவர்களது பெண் பிள்ளை கணவனை பிரிந்து இரண்டு பிள்ளைகளுடன் வாழும் குடும்பத்தின் வறுமை நிலையைக்கருத்தில்கொண்டு புதுக்குடியிருப்பு பொலிஸார் வீடு ஒன்றினை அமைத்துக் கொடுக்க தீர்மானித்துள்ளதற்கு அமைவாக வீடு ஒன்றினை அமைத்து கொடுத்துள்ளார்கள்.

இந்த வீடு கையளிக்கும் நிகழ்வு நேற்று முற்பகல் 10 மணிக்கு நடைபெற்றுள்ளது. இதன்போது இந்த வீட்டினை பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தரவினால் நாடா வெட்டி திறந்துவைக்கப்பட்டுள்ளதுடன் வீட்டுக்கான திறப்பினையும் குடும்பத்தினரிடம் கையளித்துள்ளார்.

இதன்போது குறித்த கிராமத்தில் வறுமையில் வாழும் மக்கள் சிலருக்கு உலர் உணவுப்பொருட்களையும் வழங்கி வைத்துள்ளார். (2-281)

# மன்னார் நானாட்டான் ம.வித்தியாலய மாணவன் தேசிய மட்டத்தில் சாதனை



கல்வி அமைச்சின் அனுசணையில் அகில இலங்கை ரீதியில் சுகாதார அமைச்சு மற்றும் இலங்கை நீரிழிவு சம்மேளனம் ஆகியவை இணைந்து நடத்திய மாணவர்களுக்கிடையிலான கட்டுரை போட்டியில் மன்னார் நானாட்டான் ம.வி. மாணவன் ச.பிரியதர்சன் குரூஸ் அகில இலங்கை ரீதியில் 3ஆம் இடத்தை பெற்று தேசிய மட்டத்தில் சாதனை படைத்துள்ளார்.

குறித்த மாணவனுக்கு விருது வழங்கும் வைபவமானது நேற்று முன்தினம் சனிக்கிழமை கொழும்பு தாமரை தடாக திரையரங்கில் சுகாதார அமைச்சர் ராஜித சேனரட்ன தலைமையில் நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் வைத்திய நிபுணர்களும் கலந்து கொண்டு இம் மாணவனுக்கு விருது, சான்றிதழ் மற்றும் பணப்பரிசில் ஆகியவற்றை வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது. (2-281)

# மோட்டார் சைக்கிளில் கசிப்பு எடுத்துச் சென்றவர் கைது

(மல்லாவி)

வட்டக்கச்சி இராமநாதபுரம் பொலிஸ் காவலரண் பிரிவுக்குட்பட்ட இராமநாதபுரம் சம்புக் குளம் பகுதியில் 16 லீற்றர் கசிப்பை விற்பனை செய்யும் நோக்கோடு மோட்டார் சைக்கிளில் உருமறைப்புச் செய்யப்பட்ட நிலையில் கொண்டு சென்ற சந்தேக நபர்கள் இரண்டு பேரைக் கைது செய்துள்ளதாக வட்டக்கச்சி இராமநாதபுரம் பொலிஸ் காவலரண் பிரிவுப் பொலிஸ் பொறுப்பதிகாரி எம்.எம்.டி. என்.சதுரங்கா தெவித்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வட்டக்கச்சி இராமநாதபுரம் பொலிஸ் காவலரண் பிரிவுப் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலையடுத்து இராமநாதபுரம் சம்புக்குளம் பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்றில் உருமறைப்புச் செய்யப்பட்டு கடத்திக் கொண்டு சென்ற 16 லீற்றர் கசிப்பையும் மற்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றையும் கைப்பற்றியுள்ளதுடன் சந்தேகத்தின் அடிப்படையில் அதனைக் கொண்டு சென்ற நபர்கள் இரண்டு பேரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்களையும் கைதான சந்தேக நபர்களையும் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் மேலதிக விசாரணைகளுக்காகவும் அதன் பின்னரான நீதிமன்ற நடவடிக்கைகளுக்குமாக ஒப்படைத்துள்ளதாக வட்டக்கச்சி இராமநாதபுரம் பொலிஸ் காவலரண் பிரிவுப் பொறுப்பதிகாரி எம்.எம்.டி.என்.சதுரங்கா தெவித்துள்ளார். (2-15)

# காணிகளை வழங்காவிடின் உயிரைத் துறக்க விடுங்கள்

## கேப்பாப்பிலவு மக்கள் ஆதங்கம்

(பனிக்கன்குளம்)

அகதி வாழ்க்கையை பார்க்கிலும் கடுமையான வாழ்க்கையை வாழ்வதாகக் கூறும் கேப்பாப்பிலவு மக்கள், ஒரு பகுதிகள் விடுவிக்கப்படும். அதில் எந்தவொரு பலனும் இல்லையென விசனம் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் தமது காணிகளை அரசாங்கம் விடுவிக்காவிடின் தங்களின் உயிரை மாய்த்து விடுமாறு அரசிடம் கேப்பாப்பிலவு நிலமீட்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்துள்ளனர்.

ஒரு பகுதி காணிகள் விடுவிக்கப்பட்டும் அதில் எந்தவொரு பலனும் இல்லை என அவர்கள் விசனம்தெரிவித்துள்ளனர்.

கேப்பாப்பிலவு மக்களுக்கு சொந்தமான காணிகளில் படையினர் அபகரித்துள்ள காணிகளில் இருந்து 133.4 ஏக்கர் காணிகள் கடந்த 28 ஆம் திகதி விடுவிக்கப்பட்டது.

இதன்போது கேப்பாப்பிலவு பகுதியில் 111.5 ஏக்கர் காணிகளும் சீனியாமோட்டை பகுதியில் 21.84 ஏக்கர் காணிகளுமாக மொத்தமாக 133.34 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டதுடன் குறித்த காணிகளுக்குள் கடந்த முதலாம் ஆம் திகதி மக்கள் குடியேறியிருந்தனர்.

104 குடும்பங்களுக்கு சொந்தமான 181 ஏக்கர் காணிகளை விடுவிக்கும் வரை தமது போராட்டம் தொடருமென தெரிவித்து கடந்த வருடம் மார்ச் மாதம் முதலாம் திகதி ஆரம்பித்த நில மீட்புப் போராட்டம் பனி, மழைக்கு மத்தியில் இன்று 328 ஆவது நாளாகவும் தொடர்கின்றது.

இந்த நிலையில் புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழர்கள் அனைவரும் தங்களது நில மீட்புப் போராட்டம் தொடர்பில் இலங்கை அரசிற்கு அழுத்தம் கொடுக்குமாறு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள கேப்பாப்பிலவு மக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

அத்துடன் அரச பாடசாலை, மண்டபங்கள் என மக்கள் பயன்பாட்டிற்குரிய அனைத்தும் விடுவிக்கப்படாத பகுதிகளில் காணப்படுவதால் மக்கள் தமது காணிகளில் குடியேறிய பின்பும் பல கஷ்டங்களை எதிர்நோக்குவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். (2-281)

## நேபாள இராணுவத்தளபதி முல்லைத்தீவிற்கு விஜயம்

(பனிக்கன்குளம்)

நேபாள இராணுவத் தளபதி ஜெனரல் ராஜேந்திர செகேட்றி நேற்று முன்தினம் காலை முல்லைத்தீவு கேப்பாப்பிலவு பாதுகாப்புப் படை தலைமையகத்துக்கு வருகை தந்திருந்தார்.

உலங்குவானூர்தி மூலம் வருகைதந்த நேபாள இராணுவத் தளபதி ஜெனரல்ராஜேந்திர செகேட்றிவை முல்லைத்தீவு பாதுகாப்புப் படைத்தளபதி மேஜர் ஜெனரல் துஷ்யந்த ராஜகுரு வரவேற்றதோடு இராணுவ அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது இராணுவ தளபதிகளுக்கிடையில் நினைவுச் சின்னங்கள் பரிமாறப்பட்டதோடு இராணுவ கட்டமைப்புக்கள், செயற்பாடுகள் தொடர்பில் கருத்துக்கள் பரிமாறப்பட்டன. (2-281)

# வவுனியாவில் பல்கலைக்கழக அனுமதிக்கான கருத்தரங்கு





(குருமன்காடு)

பல்கலைக்கழக அனுமதிக்கான தமிழ் மொழிமூல வழிகாட்டல் கருத்தரங்கு யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

வவுனியா வளாக ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று இடம்பெற்ற இக் கருத்தரங்கில் உயர்தரத்தில் சித்தியடைந்த மாணவர்கள் பல்கலைக்கழகங்களைத்தெரிவு செய்தல், பாடங்களை இனங்காணல் தொடர்பான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன.

வவுனியா வளாக முதல்வர் மங்களேஸ்வரன், சிரேஷ்ட உதவிப்பதிவாளர் ஆர்.ஜெயக்குமார், வவுனியா வளாக விரிவுரையாளர் ரி.கார்த்தீஸ்வரன், இரசாயனவியல் ஆசிரியர் ஏ.எஸ்.பரந்தாமன் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டு மாணவர்களுக்கு வழிகாட்டல்களை வழங்கினர்.

விண்ணப்பிக்கும் முறையே அவர்களது பல்கலைக்கழக அனுமதியைத் தீர்மானிக்கின்றது, சில மாணவர்கள் தவறாக விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதால் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காமல் போன சந்தர்ப்பங்களும் உள்ளதாக இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது. (2-250)

# கலைஞர்களின் விபரத்திரட்டு நூலுக்கான விபரங்கள் கோரல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த கலைஞர்களின் கலைப்பணியை ஆவணப்படுத்தும் வகையில் புதுக்குடியிருப்பு யோகாப் பயிற்சிக்கல்லூரியின் கலை இலக்கியப் பெருமன்றத்தினால் முல்லைத்தீவு மாவட்டக் கலைஞர் விபரத்திரட்டு நூலுக்கான விபரங்கள் கோரப்படுகின்றன.

இலக்கியம், இசை (சங்கீதம்), வில்லிசை, நாதஸ்வரம், தவில், மிருதங்கம், ஆர்மோனியம், வயலின், ஏனைய இசைக் கருவிகள் நாடகம், (நாடகம்,நாட்டுக்கூத்து, இசை நாடகம்),நடனம், கட்புலக்கலை (சிற்பம்,ஓவியம்), கைவினைக்கலை (ஒப்பனை), தொழில்நுட்பக் கலைகள், (கட்டடக் கலை, சினிமா) பாரம்பரியக் கலைகள், யோகாசனம், புகைப்படப்பிடிப்பு, ஊடகம், கராத்தே, சிலம்பாட்டம், வர்மக்கலை,சோதிடம், சொற்பொழிவு ஆகிய கலைகளைச் சேர்ந்த மூத்த கலைஞர்கள், இளம் கலைஞர்கள் யாவரும் தங்களின் விபரங்களை அனுப்ப முடியும்.

கலைஞர்களின் முழுப்பெயர், விலாசம், மாவட்டம் , துறை, தொலைபேசி இலக்கம், கடவுச்சீட்டு அளவுடைய இரு புகைபடங்கள் (புகைப்படத்தின் பின்னால், பெயர், எழுதப்பட்டிருக்க வேண்டும்) உள்ளடங்கலாகத் தமது கலைப்பணியின் விபரத்தை ஏ-4 தாளில் மூன்று பக்கங்களுக்கு மேற்படாமல் எதிர்வரும் மார்ச் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் ஜெயம் ஜெகன் இயக்குநர், கலை இலக்கியப் பெருமன்றம், யோகாப்பயிற்சிக் கல்லூரி, மல்லிகைத்தீவு, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு என்ற முகவரி க்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட் டுள்ளது.

இது தொடர்பில் மேலதிகத் தகவல்களைப் பெற விரும்புபவர்கள்-077 518 5713 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை விடுத்துப் பெற்றுக் கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (2)

# 18 மணித்தியாலங்களில் சட்டவிரோத செயலில் ஈடுபட்ட நான்கு பேர் சந்தேகத்தில் கைது

## உபகரணங்களும் கைப்பற்று

(மல்லாவி )

தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் கடந்த 18 மணி நேர காலப்பகுதியில் இரு வெவ்வேறு சம்பவங்களின் போது 90 லீற்றர் கசிப்பு மற்றும் கசிப்புக் கோடா 6, லீற்றரையும் கைப்பற்றியதுடன் கசிப்புக் காச்சுவதற்குப் பயன்படுத்திய உபகரணங்களுடன் சந்தேக நபர்கள்4 பேரைக் கைது செய்துள்ளதாக கிளிநொச்சி/ முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 4மணிக்கும் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30. மணிக்கும் இடையேயான காலப்பகுதியில்நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில்மேலும்தெரிய வருவதாவது, போதைப் பொருள் மற்றும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் படைப்பிரிவுப் பொலிஸார் பிரதிப் பொலிஸ்மாஅதிபர் மகேஷ் வெலிகன்னவின் விசேட உத்தரவுக்கு அமைய தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் வகையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் விசேட ஊர்சுற்றுக் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த போது கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து கல்மடு முலிகைக்குளம் பகுதியில் வைத்து 50 லீற்றர் கசிப்புடன் 2 சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளனர்.

இந் நிலையில், நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30, மணியளவில் தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள கட்டைக்காடு இரட்டை பனைக்குளம் காட்டுப் பகுதியில் சட்ட விரோதமான முறையில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையத்தை சுற்றி வளைத்து நிர்மூலமாக்கியதுடன், கசிப்பு 40லீற்றரையும் கசிப்புக் கோடா 60 லீற்றரையும் கைப்பற்றியதுடன் காய்ச்சுவதற்குப் பயன்படுத்திய உபகரணங் களையும் கைப்பற்றிய நிலையில் சம்பவ இடத்தில் வைத்து 2சந்தேக நபர்களையும்கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்களையும் கைதான 4 சந்தேக நபர்களையும் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் மேலதிக விசாரணை களுக்காகவும்,அதன் பின்னரான நீதிமன்ற நடவடிக்கைகளுக்குமாக ஒப்படைத்துள்ளதாக கிளிநொச்சி/முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# சமூகத்திற்கு உகந்த அரசியல் தலைவர்களை உருவாக்குவோம்

## அறிவூட்டல் செயலமர்வு

(பனிக்கன்குளம்)


வவுனியாவில் சமூகத்திற்கு உகந்த அரசியல் தலைவர்களை உருவாக்குவோம் எனும் அறிவூட்டல் செயலமர்வு நடைபெற்றது.

இளைஞர் காப்பகம் தன்னார்வத் தொண்டர் அமைப்பு, தேர்தல் வன்முறை கண்காணிப்பு நிலையம், வவுனியா மாவட்ட தேர்தல்கள் ஆணையாளர் அலுவலகம், அன்பிற்கும் நட்புக்குமான வலையமைப்பு ஆகியவற்றின் உதவியுடன் நேற்று முன்தினம் உக்கிளாங்குளம் கனறா முன்பள்ளி மண்டபத்தில் சமூகத்திற்கு உகந்த அரசியல் தலைவர்களை உருவாக்குவோம் எனும் தொனிப்பொருளில் அறிவூட்டல் செயலமர்வு இடம்பெற்றது.

இவ் அறிவூட்டல் செயலமர்வில் உள்ளூராட்சித் தேர்தல் பற்றிய தெளிவான பார்வை பெறவும் சமூகநலன் முன்னேற்றத்தை கருத்திற்கொண்டு இச் செயலமர்வு வன்முறையற்ற அமைதியான தேர்தலையும் எம் சமூகத்தின் நலனையும் இலக்காகக் கொண்டு இடம்பெற்றது.

வவுனியா வேப்பங்குளம் தூய சூசையப்பர் ஆலய பங்குத்தந்தை தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் கலந்துகொண்டிருந்தனர். (2-281)

# குளிர்பானப் போத்தலினுள் கழிவுகள்



(குருமன்காடு)

வவுனியாவில் குளிர்பானம் ஒன்றிற்குள் இருந்து கழிவுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நேற்று இடம்பெற்ற திருமண நிகழ்வு ஒன்றில் வந்திருந்தவர்களுக்கு குளிர்பானம் வழங்கும் போது இளைஞர்கள் இதை அவதானித்துள்ளனர்.அடைக்கப்பட்ட குளிர்பானப் போத்தல் ஒன்றிற்குள் குறித்த கழிவுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. ஒரு பிரபல நிறுவனத்திலிருந்து அடைக்கப்பட்டு குளிர் பானம் விற்பனைக்கு விடப்பட்டுள்ளது. இவ்வாறு இருக்கும்போது கழிவுப் பொருட்கள் எவ்வாறு உட்செல்ல முடியும்?

குளிர்பானம் அடைக்கும் போத்தல் சுத்தப்படுத்தப்படவில்லை என சந்தேகம் எழுகின்றதுடன் இவ்வாறானவர்களுக்கு எதிராக நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத் தினூடாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அங்கு வந்திருந்தவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (2-250)




# மின்சாரம் தடைப்படும்

கிளிநொச்சி உருத்திரபுரம் சிவநகர் பகுதிகளுக்கு நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் பி.ப. 5 மணி வரை மின்சார விநியோகம் தடைப்படுமென கிளிநொச்சி மின்சார சபையினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (2-254)

# மாணவர்களுக்கு கல்வி ஊக்குவிப்பும் வாழ்வாதார உதவிகள் வழங்கலும்




(கண்டாவளை)

கிளிநொச்சியில் இலங்கைப் பொறியியலாளர்களால் ஒழுங்குபடுத்தப்பட்ட உறவுச்சோலை மறுவாழ்வுக்கழகத்தின் செயற்பாட்டை உலகத்தமிழ் மக்களுக்குத் தெரியப்படுத்தும் நிகழ்வும் வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வும் மாணவர்களுக்கான கல்வி ஊக்குவிப்பு வழங்கும் நிகழ்வும் கிளிநொச்சியில் நடைபெற்றுள்ளது.

இலங்கை தமிழ் பொறியியலாளர்களின் ஒழுங்குபடுத்தலில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வு கிளிநொச்சி கூட்டுறவு சபை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழகத்தினுடைய ஓய்வுநிலை பேராசிரியர் வி.பி. சிவநாதன், யாழ்.மாவட்ட வைத்தியசாலையினுடைய பணிப்பாளர் வைத்திய கலாநிதி சத்தியமூர்த்தி,கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய பிரதமகுரு ஜெகதீஸ்வர சர்மா, டொன் பொஸ்கோ நிறுவனத்தினுடைய பொறுப்பதிகாரி மெற்றில்டா மற்றும் பொறியியலாளர்கள் கலந்து கொண்ட நிகழ்வில் பெற்றோரை இழந்த பிள்ளைகளுக்கான கல்வி ஊக்குவிப்பு மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகளும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-315)



சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் அறுவடை மற்றும் பொங்கல் நிகழ்வு நேற்று முன்தினம் கிளிநொச்சி வட்டக்கச்சி பண்ணையில் நடைபெற்றது. சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சந்திரட்ண பல்லேகம பிரதம விருந்தினராக கலந்துகொண்டு சம்பிரதாயபூர்வமாக நெல்அறுவடையையும் மற்றும் பொங்கல் நிகழ்வையும் ஆரம்பித்து வைத்தார். இந்த நிகழ்வில் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் கிளிநொச்சி முல்லைத்தீவு கட்டளை அதிகாரி கேணல் ரட்ணப்பிரிய, கிளிநொச்சி பொறுப்பதிகாரி மேஜர் சாகர மற்றும் மதகுமார்கள், சிவில் பாதுகாப்புத் திணைக்கள பணியாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். (படங்கள்: பரந்தன் செய்தியாளர்)

## வவுனியா பண்டாரிக்குளம் குளக்கட்டுப்பகுதியில் குப்பை வீசிய நபரை பொதுமக்கள் மடக்கிப்பிடிப்பு



(பனிக்கன்குளம்)

வவுனியாவில் குளக் கட்டுப்பகுதியில் குப்பை வீசிய நபர் பொதுமக்களி னால் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக் கப்பட்டார்.

வவுனியா பண்டாரி குளம் குளக்கட்டுப்பகுதியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் குப்பை கொட்டுவதற்குச் சென்ற நபரை அங்குள்ள பொது மக்கள் மடக்கிப்பிடித்து பொலி ஸாரிடம் ஒப்படைத்துள்ள னர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதா வது,

வவுனியா பண்டாரி குளம் குளக்கட்டுப்பகுதியில் குளத்தை அண்டிய பகுதி யில் மீன் கழிவுகளை பொதி செய்து மோட்டார் சைக்கி ளில் எடுத்து வந்த சுந்தர புரம் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரை அப்பகுதியில் நின்றி ருந்த பொதுமக்கள் சிலர் துர த்திப்பிடித்து விசாரணை மேற்கொண்டபோது குறித்த மீன் கழிவுகள் தோணிக் கல் பகுதியில் மீன் வியாபா ரம் மேற்கொள்ளும் வியா பாரியினுடையது எனவும், அவரே இக்கழிவுகளை கொண்டு வீசுமாறும் அத ற்கு கூலி தருவதாகத் தெரி வித்திருந்தார் என்று அந்நபர் கூறினார். இதையடுத்து பண்டாரிக்குளம் பொலிஸா ருக்கு தகவல் வழங்கப்பட்டு பொலிஸார் சம்பவம் நடை பெற்ற பகுதிக்குச் சென்று கழிவுகளை வீசிய நபரை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றதுடன் மீன் வியாபாரம் மேற்கொ ண்ட நபரையும் பொலிஸ் நிலையத்திற்கு வருமாறு அழைத்துள்ளனர்.

குறித்த பகுதியில் பிள்ளை யார் ஆலயம் உள்ளதுடன் வீதியில் மக்கள் நடமாட்டம் அதிகம் காணப்படுகின்ற துடன் நேற்றுமுன்தினம் இப்பகுதியில் பெண் ஒருவரு டைய தங்கச் சங்கிலியை அறுத்துக்கொண்டு சிலர் மோட்டார் சைக்கிளில் தலை மறைவாகியுள்ளதாகவும் இச் சம்பவம்குறித்து பொலிஸ்நிலை யத்தில் முறையிட்டுள்ளதாக வும் அப்பகுதி மக்கள் தெரி வித்துள்ளனர். (2-281)

## சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பதற்காக தயாரிக்கப்பட்ட வீடியோ வெளியீடு



(பனிக்கன்குளம்)

மன்னார் மாவட்டத்தில் சுற்றுலாத்துறையை ஊக் குவிக்கும் வகையில் தயா ரிக்கப்பட்ட வீடியோ காட்சியின் டிரெய்லர் வீடியோ அண்மை யில் மன்னார் ஆஹாஸ் ஹோட்டலில் வெளியீடு செய்து வைக்கப்பட்டுள்ளது.

உலக கனேடிய பல்கலைக் கழக சேவை (WUSC) நிறுவனத்தினால் தயாரிக் கப்பட்ட சுற்றுலாத்தளத்தில் போட்டித்தன்மையை மேம் படுத்தும் வகையில் மூன்று மொழிகளிலும் குறித்த வீடியோ காட்சி தயாரிக்கப்பட்டுள் ளது.

உலக கனேடிய பல்கலைக் கழக சேவை நிறுவனத்தி னர் பிலிப்பைன்ஸ் நாட்டிற் கான விஜயம் ஒன்றை மேற் கொண்டிருந்த போது குறித்த விஜயத்தின் வெளிப்பாடாக குறித்த வீடியோ காட்சி தயா ரிக்கப்பட்டுள்ளது.

இந்த வீடியோ காட்சி யானது சுற்றுலாத்துறையில் உள்ள போட்டித்தன்மையை மேம்படுத்தும் வகையி லும், மாவட்டத்தின் பிரபல் யங்களை வெளிப்படுத்தும் வகையிலும் அமைந்துள் ளது.


தயாரிக்கப்பட்ட குறித்த வீடியோ காட்சியின் 20 வினாடிகள் அடங்கிய டிரெய் லர் வீடியோ காட்சியை உலக கனேடிய பல்கலைக் கழக சேவை நிறுவனம், மன்னார் மாவட்ட வர்த்தக சம்மேளனத்துடன் இணை ந்து, மடு பிரதேசச் செயலாளர் எப்.சி.சத்தியசோதி முன் னிலையில் வெளியீடு செய்து வைத்துள்ளார்.

இதன் முழுமையான வெளியீடு எதிர்வரும் மார்ச் மாதம் தேசிய மட்ட ரீதியில் வெளியீடு செய்து வைக்கப் படவுள்ளது.

குறித்த வெளியீட்டு நிக ழ்வில் உலக கனேடிய பல் கலைக்கழக சேவை நிறுவன அதிகாரிகள், மன்னார் மாவ ட்ட வர்த்தக சம்மேளன அதிகாரிகள் மற்றும் சுற் றுலாத்துறையினர் உட்பட பலர்கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-281)



## கடைத் தொகுதியின் கட்டுமானப் பணிகள் பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட்டு நடைபெறுகிறது



(கண்டாவளை)

முல்லைத்தீவு பேருந்து நிலையத்திற்கு அண்மித்த பகுதியில் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் முன் னெடுக்கப்பட்டு வரும் கட்டு மானப்பணிகள் திறந்த வெளியில் பாதுகாப்பற்ற முறையில் முன்னெடுக்கப் பட்டு வருவதாக வெளியான செய்தியையடுத்து வேலிகள் அமைக்கப்பட்டு பாதுகாப்பு முறைகள் பின்பற்றப்படுகின் றன.

முல்லைத்தீவு நகரத்தில் பேருந்து நிலையத்திற்கு அருகில் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் அமைக்கப்பட்டு வரும் நவீன கடைத்தொகுதியின் கட்டுமா னப்பணிகள் பாதுகாப்பான முறையில் முன்னெடுக்கப் படவில்லை என்று தெரிவிக் கப்பட்டதுடன் குறித்த கட்டு மானப்பணிகள் ஒப்பந்தக் காரர்களின் பெயர் பலகை பாதுகாப்பு வேலிகள் கட்டு மானப் பணியாளர்களுக் கான பாதுகாப்பு கவசங்கள் ஆகியவை இன்றியும் ஆபத்தான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருவ தாக செய்திகள் வெளியாகியி ருந் தன.

இதனைச்சுற்றி பாது காப்பு வேலிகள் அமைக்கப் பட்டு பாதுகாப்பு நடைமுறை கள் பேணப்பட்டு வருகின் றமை குறிப்பிடத்தக் கது. (2-315)

## இயக்கச்சியில் சட்டவிரோதமாக மணல் அகழ்வு

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட இய க்கச்சிப் பகுதியில் சட்ட விரோதமான முறையில் மணல் அகழும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக பிர தேச மக்கள் குற்றஞ்சாட்டியு ள்ளனர்.

இயக்கச்சி கோவில் வயல், சங்கத்தர் வயல் வடக்குப் பகுதிகளில் இரவு வேளைக ளில் உழவு இயந்திரம் மூலம் மணல் அகழப்பட்டு அங்கி ருந்து அதிகாலை வேளையில் டிப்பர் ரக வாகனங்களுக்கு மணல் மாற்றப்பட்டு ஏ-9 வீதி யூடாக கொண்டு செல்லப்படு வதாகவும் இவ்வாறு குறித்த பிரதேசத்தில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் மணல் அகழ்வினால்கடல்நீர்கிராமங் களுக்குள் உட்புகும் அபாயம் இருப்பதாகவும்பிரதேச மக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இதுவிடயம் தொடர்பில் சம் பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத் திற்கொண்டு சட்டவிரோதமணல் அகழ்வைக்கட்டுப்படுத்த உடன் நடவடிக்கையெடுக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-10-64)

## பரந்தன்-முல்லைத்தீவு வீதியில் அமைக்கப்பட்ட பாலம் சேதம்



(கண்டாவளை)

கிளிநொச்சி தருமபுரம் கட்டைக்காடு வீதியில் ஆயிரம் கிராமியப்பாலங்களை அபிவி ருத்தி செய்யும் திட்டத்தின்கீழ் கடந்த ஆண்டு அமைக்கப்பட்ட பாலம் உரிய கட்டுமானங்கள் மேற்கொள்ளப்படாது சேதம டைந்து காணப்படுகின்றது.

கிளிநொச்சி பரந்தன் முல்லைத்தீவு (ஏ-35) வீதி யிலிருந்து கட்டைக்காடு, கல்மடுநகர் ஆகிய பகுதிக ளுக்குசெல்லும் வீதியில் சேத மடைந்த பாலத்திற்கு பதிலாக ஆயிரம் கிராமியப்பாலங் களை அபிவிருத்தி செய்கின்ற திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டு புதிதாக நிர்மாணிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு விடப் பட்ட குறித்த பாலத்தின் இரு பக் கங்களிலும் பாரிய வெடிப்புக் கள் ஏற்பட்டு பாலம் சேதம டைந்து காணப்படுகின்றது.

இவ்வாறு குறித்த பாலம் அமைக்கப்பட்டு மூன்று மாத ங்களுக்குள் இவ்வாறு சேத மடைந்து காணப்படுவது தொடர்பில் பல்வேறு தரப்புக்க ளும் விசனம் வெளியிட்டுள் ளனர். (2-315)

## சிறுவர் இலக்கிய நூல்கள் வெளியீடு

(கிளிநொச்சி)

சு.ஸ்ரீகுமரன் (இயல்வா ணன்) எழுதிய பாக்கியம் பாட்டியின் விண்வெளிப் பயணம், செல்லையா தாத் தாவும் செல்லக் குழந்தைக ளும் ஆகிய இரு சிறுவர் இல க்கிய நூல்களின் வெளியீ ட்டு விழா நாளை செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2 மணி க்கு கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் நடைபெற உள் ளது.

கிளிநொச்சி வலய தமிழ்ப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி பிறேமா மதுரநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ் வில் வரவேற்புரையை இராம நாதபுரம் அ.த. க.பாடசாலை அதிபர் சு.சுதாஸ்கரன், வாழ் த்துரையை இளைப்பாறிய வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல், வெளியீட்டு ரையை கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தி. ஜோன் குயின்ரஸ், மதிப்பீட் டுரைகளை காவேரி கலா மன்ற இயக்குநர் வணபிதா ரி.எஸ்.யோசுவா அடிகள், கிளிநொச்சி மகா வித்தியா லய ஆசிரியர் ந.குகபரன் ஆகியோரும் நிகழ்த்துவார் கள். நூல்களை கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தி. ஜோன் குயின்ரஸ் வெளி யிட்டுவைக்க, முதற் பிரதியை கே.பி.கே. கொன்ஸ்ரக்சன் நிறு வன உரிமையாளர் கே. பகீர தன் பெற்றுக்கொள்வார். நூலா சிரியர் பதிலுரை ஆற்று வார் (2)

# ஜனாதிபதி மைத்திரியின் கூற்று பதவியில் நீடிப்பதற்கான அறிகுறி

## ஜே.வி.பி.எம்.பி. சுனில் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

ஊழல் மோசடியாளர்களை நரகத்திற்கு அனுப்பிய பிறகு தான் பதவியில் இருந்து வெளியேறுவேன் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறுரைத்துள்ளார். இதன்மூலம் தான் தொடர்ந்தும் பதவியில் இருப்பேன் என்பதை அவர் மறைமுகமாக வெளிப்படுத்தியுள்ளார் என ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன் நெத்தி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் அதிகாரங்களைப் பயன்படுத்தி குற்றம் இழைத்தவர்களுக்கு தண்டனை வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். மொட்டை வாளை சுழற்றிக்கொண்டு இருப்பதைவிட, பிணைமுறி மோசடிவிசாரணை ஆணைக் குழுவின் அறிக்கையை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தி திருடர்களுக்குத் தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.நாட்டிற்கு ஏற்பட்ட இழப்பீடு மீட்டெடுக்கப்பட்டதா? திருடர்கள் சிறையில் அடைக்கப்பட்டனரா? என்று கேட்க விரும்புகின்றோம். ஒப்ரேஷன் 1 வெற்றியளிக்காத நிலையில் அடுத்தகட்ட நடவடிக்கை எதற்கு? செயல் வடிவம் எதுவுமின்றி பொது மேடைகளில் வீரவசனம் பேசுவதால் எவ்வித பயனும் மக்களுக்கு இல்லை. திருடர்களுக்கு எதிராக போராட்டத்தை ஆரம்பிக்கலாம் என அவர் மேலும் தெரிவித்தார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (இ-7)

## ஐக்கிய தேசிய கட்சி தனி அரசாங்கம் உருவாக்குவதில் தவறில்லை -எஸ்.பி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியினர் தனியான அரசாங்கம் ஒன்றை உருவாக்க முயற்சிப்பதில் தவறுகள் இல்லை என அமைச்சர் எஸ்.பி திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கேகாலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போது அவர்இதனைத் தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"முழு உலகமும் இலங்கைக்கு எதிராக இருந்ததன் காரணமாகவே தேசிய அரசாங்கம் உருவாக்கப்பட்டது. அதன் இலக்கு எட்டப்படாத நிலையில், பிளவுபடும் நிலை தோன்றியுள்ளது.

அரசாங்கத்தை பிளவுபடுத்துவதன் மூலம் எதிர்ப்பார்க்கப்படுவது என்னவென்றும்



எஸ்.பி.திஸாநாயக்க கேள்வி யெழுப்பினார். (இ-7)

## வட்மோர் தோட்ட காட்டுப்பகுதியில் வலது கால் பாதம் கண்டுபிடிப்பு!


(கொழும்பு)

மஸ்கெலியா பொலிஸ் பிரிவிற்குட்பட் வட்மோர் தோட்ட காட்டு பகுதியில் வலது காலடி ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்தனர். இந்த அதிசய சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனார்.

அத்துடன் இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை எற்படுத்தியுள்ளது.

வட்மோர் தோட்ட பொது மக்களால் இந்த வலது காலடி இனங்காணப்பட்ட நிலையில் உடனடியாக பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

இந்த கால் அடிபாதம் யாருடையது என்பதனை கண்டுபிடிப்பதற்காக மஸ்கெ



லியா பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதோடு வட்மோர் தோட்ட மக்கள் குறித்த கால் பாதத்திற்கு மஞ்சள் பூசி பூஜை வழிபாட்டில் ஈடுபட்டு வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மஸ்கெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## அதிபரை மண்டியிட வைத்தது தொடர்பில் அறிக்கை கோருகிறார் கல்வி அமைச்சர்



(கொழும்பு)

ஊவா மாகாண முதலமைச்சர், அதிபர் ஒருவரை மண்டியிட வைத்த விவகாரம் தொடர்பில் அறிக்கையொன்றை கோரியுள்ளதாக கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

அதிகாரத்திற்கு கட்டுப்படாத பதுளை பாடசாலை அதிபரை மண்டியிட வைத்தமை குறித்து பாரிய சர்ச்சை எழுந்துள்ள நிலையில், இவ் விடயம் குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

"13 ஆம் திருத்தத்தின் பிரகாரம் மாகாண பாடசாலைகள் குறித்து நேரடியாக நடவடிக்கை எடுக்க தமக்கு அதிகாரம் இல்லாத காரணத்தினால் தனக்கான அதிகாரங்களுக்கு உட்பட்டு நடவடிக்கை மேற்கொள்ள எதிர்ப்பார்த்துள்ளேன்" எனவும் கல்வியமைச்சர் தெரிவித்தார்.

ஊவா மாகாண முதலமைச்சர், தனக்கு வேண்டப்பட்டவர் ஒருவரின் மகளுக்கு பதுளை பாடசாலையில் அனுமதி கோரி சிபாரிசு கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார்.

எனினும் பாடசாலையின் அதிபர் அந்தச் சிபாரிசுக் கடிதத்தினை நிராகரித்துள்ளதோடு, பாடசாலை அனுமதியினையும் மறுத்து தான் கல்வி அமைச்சுக்கு கட்டுப்பட்டே பணியாற்றுவதாகவும், அரசியல்வாதிகளின் தேவைகளை பூர்த்தி செய்ய பணியாற்றவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தை அறிந்த முதலமைச்சர் சம்பந்தப்பட்ட அதிபரை தன் வீட்டுக்கு அழைத்துவந்து அவரை தன் முன் பலவந்தமாக மண்டியிட்டு மன்னிப்பு கோர வைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## எந்தக் கட்சிக்கும் எனது ஆதரவில்லை

### திஸ்ஸ அத்தநாயக்க கூறுகிறார்




(கொழும்பு)

அடுத்த ஜனாதிபதித் தேர்தல் இன்னும் 18 மாதங்களில் நடைபெறவுள்ளதாகவும் இதன்போது தான் அரசியலுக்கு வரப்போவதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இதுவரையில் எந்தக் கட்சிக்கு ஆதரவு வழங்குவது என்பது குறித்து தீர்மானம் எடுக்கவில்லை. எதிர்வரும் தேர்தலில் போட்டியிடவுள்ள ஜனாதிபதி வேட்பாளரின் கொள்கையைப் பார்த்து தீர்மானத்துக்கு வருவேன். எனது தீர்மானத்தைப் பொறுத்து என் பின்னால் உள்ள மக்களும் தீர்மானிப்பார்கள் எனவும் அவர் தெரிவித்தார். கொழும்பு ஊடகமொன்றுக்கு அவர் வழங்கிய செவ்வியிலேயே இதனைக் கூறியுள்ளார்.(இ-7)

# பாரதம்

## பிளாஸ்ரிக் ஆலையில் தீ 17 பேர் உயிரிழப்பு!



(டில்லி)

டில்லியில் உள்ள பவானா தொழிற்பேட்டையில் இயங்கி வரும் பிளாஸ்ரிக் ஆலை ஒன்றில் நேற்றுமுன தினம் ஏற்பட்ட தீ விபத்தில் 17 பேர் உயிரிழந்த நிலையில் சம்மந்தப்பட்ட ஆலை உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

டில்லியில் அமைந்துள்ளது பவானா தொழிற்பேட்டை. இங்கு பல்வேறு நிறுவனங்கள் செயற்பட்டு வருகின்றன. இங்கு அமைந்துள்ள பிளாஸ்ரிக் பொருட்கள் தயாரிப்பு ஆலையின் கிடங்கில் நேற்று முன்தினம் மாலை திடீரென தீ விபத்து ஏற்பட்டது.

10இற்கும் மேற்பட்ட, தீயணைப்பு வாகனங்கள் மூலம் தீ முழுவதுமாக அணைக்கப்பட்டது. இந்த விபத்தில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 17 ஆக உயர்ந்துள்ளது. தீக்காயங்களுடன் பலர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தீ விபத்து குறித்து விசாரணை நடத்த மாநில அரசு உத்தரவிட்டுள்ள நிலையில், சம்மந்தப்பட்ட ஆலை உரிமையார் மனோஜ் ஜெயின் மீது வழக்குப்பதிவு செய்த பொலிஸார் அவரை கைது செய்தனர். (இ-7)

## 2 ஜி விழக்கில் மேல்முறையீடு செய்ய சி.பி.ஐ.க்கு சட்ட அமைச்சகம் அனுமதி

(டில்லி)

2ஜி வழக்கின் தீர்ப்பு தொடர்பாக டில்லி உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய சி.பி.ஐ.க்கு, மத்திய சட்ட அமைச்சகம் அனுமதி அளித்துள்ளது.

2ஜி ஊழல் புகார்கள் தொடர்பாக சி.பி.ஐ. மற்றும் அமலாக்கத்துறை தொடர்ந்த வழக்குகளை டில்லி சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றம் விசாரித்து வந்தது. இந்த வழக்கை டில்லி சி.பி.ஐ. நீதிமன்ற நீதிபதி ஓபி ஷைனி விசாரித்து வந்தார். இந்த வழக்கு தொடர்பான விசாரணை 2017ஆம் ஆண்டு தொடக்கத்தில் முடிவடைந்தது. இருப்பினும் தீர்ப்பு திகதி அறிவிப்பு தொடர்ந்து ஆறு முறை ஒத்திவைக்கப்பட்டது.



நாட்டின் மிகப்பெரிய ஊழல் வழக்காக கருதப்படும் இந்த வழக்கின் தீர்ப்பு கடந்த டிசெம்பர் 21ஆம் திகதி அறிவிக்கப்பட்டது. வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட முக்கிய குற்றவாளிகளான முன்னாள் அமைச்சர் ஆ.ராசா, கனிமொழி உள்ளிட்ட குற்றம்சாட்டப்பட்ட 14 பேரையும் விடுதலை செய்து நீதிபதி ஓ.பி.ஷைனி உத்தரவிட்டார்.

குற்றம்சாட்டுகளை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க சி.பி.ஐ. தவறிவிட்டதால் அனைவரும் விடுதலை செய்யப்படுவதாகவும் ஓ.பி.ஷைனி தெரிவித்தார். இதனை எதிர்த்து சி.பி.ஐ. சார்பில் மேல்முறையீடு செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. அதன்படி, மேல்முறையீடு செய்ய மத்திய சட்ட அமைச்சகத்திடம் சி.பி.ஐ. அனுமதி கோரியது.

இந்நிலையில், 2ஜி வழக்கின் தீர்ப்பு தொடர்பாக டில்லி உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய மத்திய சட்ட அமைச்சகம் நேற்று சி.பி.ஐ.க்கு அனுமதி அளித்துள்ளது. இதனால், அடுத்த சில நாட்களில் 2ஜி வழக்கில் சி.பி.ஐ. சார்பில் மேல்முறையீடு செய்யப்பட உள்ளது உறுதியாகியுள்ளது.

2ஜி ஊழல் குற்றச்சாட்டு பற்றி முன்னாள் அமைச்சர் ஆ.ராசா எழுதிய ஆங்கில நூல் (2G Saga Unfolds) நேற்று மாலை வெளியானது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பிரேசில் நாட்டில் அதிசயம்; 22 ஆண்டுகளாக மணல் கோட்டையில் வாழும் மன்னர்

(ரியோடி ஜெனிரோ)

பிரேசில் நாட்டில் மன்னர் ஒருவர் கடற்கரையோரம் பகுதியில் மணல் கோட்டை அமைத்து 22 ஆண்டுகளாக வாழ்ந்து வருகிறார்.

பிரேசில் தலைநகர் ரியோடி ஜெனிரோவில் பாராடா திஜுகா பகுதியை சேர்ந்தவர் மார்சியோ மிஷயல் மடோலியாஸ். இவர் இங்கு மன்னராக இருக்கிறார்.

ஆனால் இவர் பாரிய அரண்மனையில் வசிக்கவில்லை. மாறாக மணல் கோட்டையில் வசிக்கிறார். மணல் சிற்பங்கள் செய்வதில் வல்லவரான இவர் சிறு




வயதில் இருந்தே கடற்கரையில் வாழ்ந்து வந்தார்.

எனவே இவருக்கு வேறு இடத்துக்கு செல்ல மனமில்லை. கடற்கரையோரம் வசிக்க வேண்டுமானால் அதிக அளவு வீட்டு வாடகை கொடுக்க வேண்டியிருந்தது. எனவே அவரே தனக்காக அரண்மனையை கட்ட முடிவு செய்தார். மணல் சிற்பங்கள் செய்யும் திறன் படைத்த அவர் அழகான மணல் அரண்மனையை கட்டினார்.

அதில் கடந்த 22 ஆண்டுகளாக வாழ்ந்து வருகிறார். அது இடிந்து விழாமல் இருக்க அவ்வப்போது அரண்மனையின் மீது தண்ணீர் தெளித்து கொள்கிறார்.

இந்த மணல் கோட்டையை காண பலர் அங்கு வருகின்றனர். அவருடன் புகைப்படம் எடுத்துக் கொள்கின்றனர். அவர் தலையில் கிரீடமும் செங்கோலும் வைத்துள்ளார். அவரை அனைவரும் மன்னர் என்றே அழைக்கின்றனர். இருந்தாலும் மணல் கோட்டையும், சில புத்தகங்கள் மட்டுமே இவரது சொத்தாகவும் உள்ளது. (இ-7)

## துருக்கி விமான தாக்குதலில் 9



(டமாஸ்கஸ்)

சிரியாவின் ஆப்ரின் பகுதியில் துருக்கி விமானப் படையினர் நடத்திய தாக்குதலில் 6 பொதுமக்கள் உட்பட 9 பேர் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்தின் ஆட்சியை பதவியை விட்டு இறக்கும் நோக்கத்தில் கடந்தஆறாண்டுகளாக அங்குள்ள சில போராளிக் குழுக்கள் ஆயுத மேந்திய போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அவர்களை ஒடுக்குவதற்காக ஜனாதிபதி தலைமையிலான இராணுவப்படைகள் ஆவேசத் தாக்குதல் நடத்துகின்றன.

இதற்கு உதவியாக ரஷ்யா மற்றும் துருக்கி நாட்டு போர் விமானங்களும் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றன. இந்நிலையில். குர்திஸ்தானின் ஆப்ரின் நகருக்கு அருகாமை

## துருக்கியில் பேருந்து 11 பேர் பலி; 44 பே



(அங்காரா)

துருக்கியில் பயணிகள் சென்ற பேருந்து விபத்துக்குள்ளானதில் 11 பேர் பலியாகியதோடு, 44 பேர் காயமடைந்தனர்.

மத்திய துருக்கியில் உள்ள எஸ்கிசேஹிர் மாகாணத்திற்கு உட்பட்ட பகுதியில் புர்சா என்ற நகரம் அமைந்துள்ளது. இந்த நகரில் உள்ள உளுதாக் ஸ்கீ ரிசார்ட்டில் விடுமுறையை களிப்பதற்காக சில குடும்பத்தை சேர்ந்தவர்கள் பேருந்தில் சென்று கொண்டிருந்தனர்.

அந்த பயணிகள் சென்ற பேருந்து சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரத்தில் இருந்த மரங்கள் மீது மோது விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் 11 பேர் பலியாகியதோடு, 44 பேர் காயமடைந்தனர்.



இதுகுறித்து துருக்கி அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கையில், துருக்கி தலைநகர் அங்காராவிலிருந்து நேற்றுக்காலை மேற்குப் பகுதியிலுள்ள புர்சா நகருக்கு பயணிகளுடன் சென்ற பேருந்து விபத்துக்குள்ளான தில் 11 பேர் பலியாகினர். மேலும் 44 பேர் காயமடைந்தனர்.

பேருந்தில் பயணம் செய்தவர்கள் பெரும்பாலும் பெண்கள் மற்றும் குழந்தைகள் என்றும் தெரிவிக்கப்பட்

# வெளிநாடு

## னப்படை 9பேர் பலி



ராளிக் பாராட் ஜனாதி ப்படை ன்றன. மற்றும் களும் 6 வரு லிஸ்தா ாமை

யில் உள்ள பகுதிகளில் அமெரிக்க ஆதர்வுடன் செயற்பட்டு வரும் குர் திஸ் போராளிகளை குறிவைத்து, துருக்கி போர் விமானங்கள் நேற்று முன்தினம் மாலை நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதலில் ஆறு பொது மக்கள் மற்றும் 3 குர்திஸ்தான் போராளிகள் உயிரிழந்துள்ளதாகவும், சுமார் 13 பேர் படுகாயம் அடைந்துள்ளதாகவும் குர் திஸ்தான் அமைப்பின் செய்தித் தொடர் பாளர் தெரிவித்துள்ளார். (இ-7)

## ந்து விபத்தில் பேர் காயம்!





ரிகள் நக்கி நேற் ள்ள சென்ற ல் 11 பேர் ர்கள் றும் ப்பட்

டுள்ளது.

விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. இந்த விபத்து குறித்து பொலிஸார் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். துருக்கியில் வீதி விபத் துகள் ஏற்படுவது அண்மைக் காலமாக அதிகரித்து வருகிறது. 2016இல் மட்டும் துருக்கில் வீதி விபத்தில் 7,000 பேர் பலி யாகியதோடு, 3 லட்சத்துக்கும் அதிகமா னோர் காயமடைந்தனர் என்பது குறிப் பிடத்தக்கது. (இ-7)

# ட்ரம்ப் நிர்வாகம் ஸ்தம்பிதம்

(வோஷிங்டன்)


அமெரிக்க ஜனாதிபதி யாக பதவியேற்று ஓராண் டுகளை நிறைவு செய்துள்ள டொனால்ட் ட்ரம்ப், அரசு அலுவல்கள் முடங்கியுள்ள நிலையில், இணையத்தில் கிண்டலுக்கு உள்ளாகியுள் ளார்..

குடியரசு கட்சியைச் சேர் ந்த டொனால்ட் ட்ரம்ப் அமெ ரிக்க ஜனாதிபதியாக பதவி யேற்று ஓராண்டுகள் நிறை வடைந்துள்ளன. அரசு பணி களை கவனிக்க நிதியளி க்கும் செலவின மசோதா செனட் சபையில் நிறை வேறாததால், அரசு அலு வலகங்கள் மூடப்பட்டன. அத்தியாவசிய துறைகள் மட் டுமே இயங்கி வருகின் றன.

பிரதிநிதிகள் சபையில் நிறைவேறிய இந்த மசோதா, செனட் சபையில் 60 வாக் குகள் பெற வேண்டும் என்ற நிலையில், 49 வாக்குகளை மட்டுமே பெற்றது.

ஆளும் குடியரசு கட்சியை சேர்ந்த 5 உறுப்பினர்கள் மசோதாவுக்கு எதிர்த்து வாக் களித்தனர்.

எல்லை பாதுகாப்பு மற் றும் மெக்சிக்கோ சுவருக்கு நிதி, சிறுவயதில் குடியேறிய வர்களுக்கு பாதுகாப்பு ஆகி



யவை அந்த ஐந்து எம்.பி.க் களின் கோரிக்கைகளாக உள்ளது. செலவின மசோ தாவை நிறைவேற்றுவதில் எதிர்க் கட்சி (ஜனநாயக கட்சி) அரசியல் நாடகம் நடத்து வதாக குடியரசு கட்சியின் செனட் தலைவர் குற்றம் சாட்டியுள்ளார்.

ஆனால், மேற்கண்ட விவகாரங்களில் சமரச பேச்சு வார்த்தை நடத்த ஜனாதிபதி ட்ரம்ப் முன்வரவில்லை என ஜனநாயக கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

டொனால்ட் ட்ரம்ப் பதவி யேற்ற முதலாம் ஆண்டு நிறைவை ஆளும் கட்சியி னர் வெகு சிறப்பாக கொண் டாட திட்டமிட்டிருந்த நிலை யில் அமெரிக்க அரசு அலுவ லகங்கள் கதவடைப்பு செய்யப் படும் நிலை உருவாகியுள் ளதால், ட்ரம்ப் அதிருப்தி அடை ந்துள்ளார். (இ-7)

## ஐ.நா விசேட பிரதிநிதி யெயாங்கீலீ ரோஹிஞ்யா அகதிகள் சந்திப்பு

(டாக்கா)

ரோஹிங்கியா அகதிக ளின் மீள்குடியேற்றத் திட் டத்துக்கு மத்தியில், மியன் மாருக்கான ஐ.நா.வின் விசேட பிரதிநிதி யெயாங்கீ லீ (Yanghee Lee), பங் களாதேஷில் தஞ்சம் கோரி யுள்ள ரோஹிஞ்யா அகதி களை சந்தித்துக் கலந்துரை யாடியுள்ளார்.

தமது மீள்குடியேற்றம் தொடர்பாக, ரோஹிஞ்யா அக திகள் முன்வைத்த கோரிக் கையைத் தொடர்ந்து, ஐ.நா. வின் விசேட பிரதிநிதி, பங் களாதேஷின் கொக்ஸ் பஸா ரிலுள்ள ரோஹிஞ்யா அகதி களின் முகாமுக்கு நேற்று முன் தினம் சனிக்கிழமை சென்று ள்ளார். இதன்போது, ஐ.நா. வின் விசேட பிரதிநிதியிடம், ரோஹிஞ்யா அகதிகள் பல் வேறு கோரிக்கைகளை முன் வைத்துள்ளனர்.

தமது சொந்த இடத்துக்கு திரும்புவதற்கு முன்னராக, தமது பாதுகாப்புக்கு உத்தர வாதமளிக்கும் வகையில், மியன்மார் அரசாங்கத்திட மிருந்து பாதுகாப்பு அட்டைகள் தமக்கு வழங்கப்பட வேண் டும். ரோஹிஞ்யா முஸ்லிம் களுக்கு எதிரான இன அழி ப்பு மற்றும் படுகொலை தொடர் பாக ஐ.நா. நீதி பெற்றுத்தர வேண்டும். மியன்மார் சிறை யிலுள்ள ரோஹிஞ்யா முஸ் லிம்களை விடுவிக்கும் நோக் கில், தமது மாநிலத்தில் ஐ.நா. பாதுகாப்புச் சபை அலுவல கம் திறக்கப்பட வேண்டும். ஆகிய கோரிக்கைகளை இவர்கள் முன்வைத்துள்ளனர்.

மியன்மாரின் ராஹினி மாநிலத்தில் கடந்த 2017 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாத இறுதியில் நிலவிய வன்முறை காரணமாக, அயல் நாடான பங்களாதேஷில் ரோஹிஞ்யா முஸ்லிம்கள் சுமார் 6 இலட்ச த்து 50 ஆயிரத்து 500 பேர் தஞ்சம் கோரியுள்ளனர்.

இந்த அகதிகளை அவர்க ளின் சொந்த இடங்களுக்கு திருப்பியனுப்பும் நோக்கில், மியன்மார்மற்றும்பங்களா தேஷ் அரசாங்கங்களுக்கிடையில் கடந்த வருட இறுதியில் புரிந் துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத் தப்பட்டது. இந் நிலையில், இந்த அகதிகளை மீள்குடி யேற்றும் திட்டம் இந்த வரு டத்தில் முன்னெடுக்கப்பட வுள்ள நிலையில், ரோஹிஞ்யா அகதிகள் மேற்படி கோரிக் கைகளை முன்வைத்துள்ள னர். (இ-7)

## சர்ச்சைக்குரிய பகுதியில் கப்பல் பயணம்



### அமெரிக்காவுக்கு சீனா பகிரங்க எச்சரிக்கை

(பீஜிங்)

சீன கடல் எல்லைக்குள் எங்கள் அனுமதி இல்லா மல், அமெரிக்க போர்க்கப் பல் சென்றது. இது சீனாவின் இறையாண்மையை மீறிய செயல் என அமெரிக்கா வுக்கு சீனா எச்சரிக்கை விடுத் துள்ளது.

தெற்கு சீன கடலை சீனா சொந்தம் கொண்டாடி வரு கிறது. ஆனால், வேறு சில நாடுகளும் அதற்கு உரிமை கொண்டாடுவதால், அது சர்ச்சைக்குரிய பகுதியாக இருந்து வருகிறது.

இந் நிலையில், தெற்கு சீன கடலில் உள்ள குவாங் யான் என்ற மணல் திட்டு பகுதி அருகே அமெரிக்க போர்க்கப்பல் கடந்து சென் றது.

இதற்கு சீனா கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. இது குறித்துசீன வெளியுறவு அமைச் சக செய்தித் தொடர்பாளர் லு காங் தெரிவிக்கையில், "சீன கடல் எல்லைக்குள் எங்கள் அனுமதி இல்லாமல், அமெ ரிக்க போர்க்கப்பல் சென்றது, சீனாவின் இறையாண் மையை மீறிய செயல். சீன கப்பல்களுக்கும், ஊழியர் களுக்கும் கூட அச்சுறுத் தலாக அமைந்துள்ளது.

இது எங்களுக்கு அதிருப்தி அளிக்கிறது. இதேநிலை நீடித்தால், இறையாண்மை யை பாதுகாக்க தேவையான நடவடிக்கைகள்எடுக்கவேண்டி இருக்கும் என பகிரங்க எச்ச ரிக்கை விடுத்தார். (இ-7)

# தென்கொரியாவுடனான பேச்சு இரத்து வடகொரியா ஜனாதிபதி திடீர் முடிவு

(சியோல்)

தென்கொரியாவுடனான பேச்சு வார்த்தையை சற்றும் எதிர்பாராத வகையில் வட கொரியாவில் ஜனாதிபதி கிம்யாங் உன் இரத்து செய்து விட்டார்என நேற்று முன்தினம் தகவல் வெளியாகியுள்ளது.

தென்கொரியாவின் பியாங் சாங் நகரில் குளிர்கால ஒலிம்பிக் போட்டி அடுத்த மாதம் 9ஆம் திகதி தொடங் குகிறது. இதில்கலந்து கொள்ள வடகொரியா விருப்பம் தெரி வித்தது. இதையடுத்து நேரடி பேச்சு வார்த்தை நடத்த அந்த நாட்டுக்கு தென் கொரியா அழைப்பு விடுத்தது.

அதன்பேரில்கடந்த 9 ஆம் திக்தி இரு நாட்டு எல்லைப் பகுதியில் அமைந்து உள்ள பான்முன்ஜோம் கிராமத் தில் பேச்சுவார்த்தைநடந்தது.

வடகொரியாவின் சார் பில் ரி சன் ஜிவோன் தலை மையிலான குழுவும், தென் கொரியா தரப்பில் சோமயூங் கியோன் தலைமையிலான குழுவும் பேச்சு நடத்தின.

இந்த பேச்சுவார்த்தை யின்போது, குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க தனது குழுவை அனுப்பி வைக்க வடகொரியா ஒப்புக்கொண்டது.

இதையடுத்து இரு நாடு களும் அந்த போட்டியின் போது ஒரே கொடியின் கீழ் அணிவகுக்கவும், ஐஸ் ஹா க்கி போட்டியில் இரு நாடு களின் ஒன்றிணைந்த அணி யை அமைத்து போட்டியில் பங்கேற்கச்செய்வது என்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

இதையடுத்து இரு நாடு களும் தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தும், ஒரு இணக்கமான சூழல் உரு வாகும். கொரிய தீபகற்ப த்தில் பதற்றம் தணியும் என்ற எதிர்பார்ப்பு சர்வதேச அளவில் உருவானது.

ஆனால் இந்த நிலையில் வார இறுதியில் நடக்கவிரு ந்த பேச்சு வார்த்தையை சற்றும் எதிர்பாராத வகை யில் வடகொரியாவின் ஜனா திபதி கிம் ஜாங் உன் இரத்து செய்து விட்டார் என நேற்று முன்தினம் தகவல் வெளி யானது. இதற்கான உறுதி



யான காரணம் என்ன என்று தெரியவில்லை என யோன ஹாப் செய்தி நிறுவனம் கூறியுள்ளது. (இ-7)

# ஜனாதிபதி–பிரதமருக்கு இடையிலான யுத்தம் வெளிப்பட ஆரம்பித்துள்ளது

## மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அடுத்த வருடம் பதவிக் காலம் முடிந்து வீடு செல்லப் போகிறார் என்பதை மறந்து கருத்துத் தெரிவித்து வருவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மாலை கெலிஓயா பிரதேசத்தில் இடம்பெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார்.

எம்மை நரகத்துக்கு அழைத்துச் செல்வதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார். எம்மை நரகத்துக்கு அனுப்பும் வரையில் ஜனாதிபதி பதவியிலிருந்து செல்வதில்லையெனவும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் பனிப்போர் ஒன்று நடைபெறுகின்றது. தற்பொழுது இந்த யுத்தம் வெளிப்பட ஆரம்பித்துள்ளது. இந்த நாட்டின் மக்கள் தேர்தல் ஒன்று வரும் வரையில் பார்த்துள்ளனர். யானையைத் தோல்வியடையச் செய்ய, கையைத் தோல்வியடையச் செய்ய, வெற்றிலையைத் தோல்வியடையச் செய்ய எதிர்வரும் 10 ஆம் திகதி மக்கள் தீர்மானிக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு சகோதரர்கள் இருவர் படுகொலை!

(கொழும்பு)

காலி, போத்தல, வக்வெல்ல பிரதேசத்தில் இருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு நேற்று முன்தினம் காலை படுகொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

75 வயதுடைய ஆண் ஒருவர் மற்றும் அவரின் 65 வயது சகோதரி ஆகிய இருவருமே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளதாகவும் வீட்டின் வாசல் அருகே சகோதரனின் சடலமும் வீட்டின் பின்புறத்தில் சகோதரியின் சடலமும் காணப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை போத்தல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)



# இலங்கை -இந்தியா இடையே விசேட விமான சேவை ஆரம்பம்



(கொழும்பு)

இலங்கை - இந்திய நாடுகளுக்கிடையிலான விசேட விமான சேவையொன்று நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் முதலாவது விமானம் சென்னை விமான நிலையத்திலிருந்து கட்டுநாயக்க நோக்கி நேற்று முன்தினம் காலை 8 மணிக்கு வந்தடைந்துள்ளது.

"இன்டிகோ" என அழைக்கப்படும் இந்த விமான சேவை ஒரு நாளைக்கு மூன்று முறை இரு நாடுகளுக்கிடையில் போக்குவரத்தை வழங்கவுள்ளது.

இந்தியாவின் சென்னை, பெங்களூர் ஆகிய நகர்களிலிருந்து கொழும்பு கட்டுநாயக்க நோக்கி இடம்பெறவுள்ளது.

மிகவும் கட்டணம் குறைந்த விமான சேவையாக இது கருதப்படுகிறது. (இ-7)

# அதிபரை அச்சுறுத்தியமைக்கு சுதந்திரக்கட்சி கடும் கண்டனம்

(கொழும்பு)

பாடசாலை அதிபரை தனது வீட்டுக்கு அழைத்து அச்சுறுத்திய ஊவா மாகாண முதலமைச்சரின் நடவடிக்கையை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மிக வன்மையாக கண்டிப்பதாக தெரிவித்துள்ளது.

ஊவா மாகாண முதலமைச்சர் சாமர சம்பத் தஸநாயக்க, பதுளை மகளிர் தமிழ் பாடசாலை அதிபரை அச்சுறுத்திய சம்பவம் குறித்து கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த இதனைத் தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை தற்போது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவும் ஆரம்பித்துள்ளது.



இலங்கை ஆசிரியர் சங்கம் இச்சம்பவத்தை மிக வன்மையாக கண்டித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

### அழுத்தமாகச் சொல்லலாமா?

என் நண்பர் ஒருவர் சிபாரிசு என்றாலே வெறுக்கும் நபரிடம் போய் ஒரு விடயத்தை அழகாக முடித்துக் கொண்டு வந்தார்.

"எப்படி சார் இது சாத்தியமாச்சு!" என்று கேட்டேன் . ''பேசுற விதமாகப் பேசினா காரியம் தானா நடக்குது'' என்றார் சாதாரணமாக.

"அதுதான் எப்படி என்று கேட்கிறேன் '' என்றேன்.

எடுத்தவுடன் "உங்களுக்கு சிபாரிசுன்னா கட்டோடு பிடிக்காது என்பது தெரியும். இருந்தாலும் ரொம்ப வற்புறுத்தினதால உங்களிடம் சிபாரிசு பண்றதா சொல்லிட்டேன். அல்லதோ உங்களிடம் சொல்றதில்லைன் னு முடிவு பண்ணிட்டேன்" என்று ஆரம்பித்தேன்.

''சும்மா சொல்லுங்க'' என்றார். இது போதுமே எனக்கு! அவர் சுபாவம் தெரியும் எனக்கு. அழுத்திச் சொன்னா அவரிடம் காரியம் நடக்காது. மேம்போக்கா சொன்னாத்தான் காதிலேயே வாங்கிக்குவாரு அவரு என்றார்.

இதிலிருந்து பெறப்படும் நீதி–எதையும் அழுத்திச் சொன்னால் காரியம் நடக்காது என்பதல்ல.

அழுத்திச் சொல்ல வேண்டிய இடங்கள், அழுத்திச் சொல்லக்கூடாத இடங்கள் என்று இரு பிரிவு உண்டு .

நம்மைச் சார்ந்து இருக்கிற எவரிடமும் அழுத்திச் சொல்ல வேண்டியதில்லை. லேசாகச் சொன்னாலே போதும் அது எடுபடும்.

நமக்கு நெருக்கமில்லாத இடங்களிலும் நாம் அழுத்திச் சொல்லக்கூடாது.அப்படிச் செய்தால் ''என்ன இவரு! இப்படித்தான் அறிமுகம். அதுக்குள்ள இவ்வளவு வற்புறுத்துறாரே'' என்று எண்ணத் தோன்றும். அது எரிச்சலாக மாறும். காரியத்தைக் கெடுத்துக் குட்டிச்சுவராக்கி விடும்.

அதிக நெருக்கமில்லாத நிலையிலும் ஒருவர் நன்கு சிரித்தும் கலகலப்பாகவும் பேசிப் பழகினால் அங்கே அழுத்திச் சொல்லலாம் சிடு மூஞ்சிகளிடம் இந்த வேலை வேண்டாம். ஓரளவு நெருக்கமும் இருந்து அதே நேரத்தில் கரியம் நடக்குமா நடக்காதா என்கிற ஐயப்பாடு அதிகமாயிருந்தால் அங்கே அழுத்திச் சொல்லலாம்.

சிலர் விடயத்தில் அழுத்திச் சொன்னால் எடுபடுமா மெலோட்டமாகச் சொன்னால் எடுபடுமா என்பதே பிடிபடாது. அப்பேது ஓர் உலகத் தத்துவத்தைப் பின்பற்றுவது நல்லது.

அதாவது நம் எதிர்பார்ப்புகள் ஆர்வம் பிடிவாதம் இடைவிடாத முயற்சி உறுதிப்பாடுகள் இவையனைத்தையும் எப்படியாவது அவருக்குப் புரிய வைத்து விட வேண்டும். இவற்றைப் புலப்படுத்தி விட முடியுமானால் முடியாது என்று பலர் கணித்த விடயங்கள் ஜாம்ஜாம் என்று முடியும்!

**லேனா தமிழ்வாணன்**


# தமிழர் தாயகத்தைத் தம்வசமாக்க

# பலவந்தமாக சிங்களக் குடியேற்றங்கள்

## அரசின் சதித்திட்டங்களை அம்பலப்படுத்திய வடக்கு முதலமைச்சர்

(யாழ்ப்பாணம்)

**தமிழர் தாயகத்தைத் தம்வசமாக்க பலவந்தமாகக் கொண்டுவரப்பட்டு சிங்களவர்கள் குடியேற்றப்பட்டனர் எனவும் எமது பாரம்பரியத்தை அழிக்கவென்று திட்டமிட்டு இயற்றப்படுகின்ற இத்தகைய நடவடிக்கைக்கு அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்கி வருவதாகவும் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் விமர்சித்துள்ளார்.**



வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் வாரம் ஒரு கேள்விக்கு பதிலளித்து வருகின்றார்.

இதற்கமைய இவ்வாரம் கொழும்பில் இருந்து கிடைத்திருக்கும் கேள்விக்குப் பதில் தரப்படுகின்றது.

கேள்வி:- தமிழ்க் கட்சிகள், ஏன் நீங்களும் கூட, வட மாகாணத்தில் சிங்கள மக்கள் குடிகொள்ளப் பார்க்கின்றார்கள், எமது பாரம்பரியம் அழியப் போகின்றது என்றெல்லாம் குரல் எழுப்புகின்றீர்கள். தமிழராகிய நாம் பெருவாரியாக கொழும்பில் குடியிருக்கின்றோமே அது சிங்களப் பாரம்பரியத்தை அழிப்பதாக அர்த்தம் கொள்ள முடியாதா? நீங்கள் உங்கள் கூக்குரல்களால் கொழும்பில் வசிக்கும் எம்மையெல்லாம் அவதிக்குள்ளாக்கின்றீர்கள் என்பதை ஏன் புரிந்து கொள்ள மாட்டீர்கள்?

பதில்:- நியாயமான கேள்வி! ஆனால் புரிந்துணர்வற்றது. ஒரு காலத்தில் அதுவும் என் சீவிய காலத்தில் தமிழ் மக்கள் நாடு பூராகவும் பரந்து வாழ்ந்தார்கள். காணிகள் வைத்திருந்தார்கள், கடைகள் வைத்திருந்தார்கள், கோயில்கள் கட்டி வழிபட்டு வாழ்ந்தார்கள். இது வெள்ளையர் ஆண்ட காலத்திலும் சிங்களம் மட்டும் சட்டம் 1956 ஆம் ஆண்டில் வரும் வரையிலும் இருந்த நிலை.

1958ஆம்ஆண்டு இனக்கலவரம் எம்முள் பலரை தெற்கிலிருந்து விரட்டியது. அதன்பின் 1961,1977, 1983 என்று பல கலவரங்கள் தெற்கில் இருந்த தமிழ் மக்களை இருந்த இடம் தெரியாமல் விரட்டின. காணி பூமிகளை, ஆதனங்களை எல்லாம் பறிகொடுத்துவிட்டு எம்மவர் தெற்கைவிட்டு நீங்கினார்கள். தமிழ் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த பிரதேசங்கள் வடக்குக் கிழக்கே என்பதை அரசாங்கமே ஏற்றுக் கொண்டு கப்பல்கள் மூலம் தெற்கில் வாழ்ந்த தமிழ் மக்களை வடக்குக் கிழக்கு நோக்கி அனுப்பி வைத்தனர். கொழும்பில் வாழ்ந்து வந்த என் தந்தையாரின் தம்பியார் எரிந்துகொண்டிருந்த தமது வீட்டை விட்டு விட்டு உடுத்த உடுப்புடன் குடும்பத்துடன் வெளியேறி மூன்று நான்கு நாட்களின் பின் கப்பலில் வந்து மானிப்பாயில் உறவினர்களின் வீட்டில் தஞ்சம் புகுந்தார். இப்படி எத்தனையோ ஆயிரம் பேர்! பலர் வெளிநாடுகள் சென்றார்கள். எனவே தென்னாட்டில் வாழ்ந்த தமிழர்கள் தொடர்ந்து அடித்து விரட்டப்பட்டனர். அதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். அடுத்தது.

கொழும்பு ஒரு சிங்கள நகர் அல்ல. அது பல் இன, பல் சமய, பன்மொழி பேசும் மக்கள் வாழும் நகரம். நாட்டின் தலைநகரம். பாதுகாப்புக் கருதி முன்னரும், யுத்தத்தின் போதும், அதன் பின்னரும் கூட வட கிழக்குத் தமிழ் மக்கள் கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் காணிகள் வாங்கி வீடு கட்டி வந்திருப்பது தமது தேவைகளின் நிமித்தம் பலவித சொந்தக் காரணங்களின் நிமித்தமே. அவர்கள் தமது சொந்தப் பணத்தில், இல்லையென்றால் வங்கிகளிலோ வேறெங்கிருந்தோ கடன் எடுத்தே வீடுகள் கட்டினார்கள். ஆகவே கொழும்பு நகரமானது, டச்சுக்காரர் காலத்தில் இருந்து, ஆங்கிலேயர் காலத்தில் இருந்து சிங்கள நகர் அல்ல. பல்லின மக்களின் வாழ்விடம். அங்கு தமிழ் மக்கள் பாதுகாப்பு, கல்வி,சீதோஷ்ண நிலை, வேலைத்தள அண்மை போன்ற பல்வித தனிப்பட்ட காரணங்களுக்காகத் தமது சொந்தப் பணத்தில் வீடுகட்டி குடியிருந்து வந்தார்கள். ஆனால் அவ்வாறு வாழ்ந்து வந்த தமிழர்கள் அரசாங்க அனுசரணையுடன் 1958 இலும் 1983 இலும் அடித்துத் துரத்தப்பட்டார்கள் என்பதை நாம் மறக்கக் கூடாது.

கேள்வி:- ஆனால் வடகிழக்கு மாகாண சிங்களக் குடியேற்றங்கள் அப்படிப்பட்டதா?

பதில்:- 1971-972 அளவில்நான் திருகோணமலை சென்.ஜோசப் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றிய அருட்தந்தை சம்பாவை (இத்தாலியர்) பார்க்கப் போயிருந்தேன். நான் சென்ற நேரத்தில் சிறிமாவோ அம்மையார் காலத்தில் புதிதாகத் திறக்கப்பட்ட திருகோணமலையை அடுத்த சிங்களக் குடியேற்றங்களில் ஒன்றைப் பார்வையிட அவர் ஆயத்தமாகிக் கொண்டிருந்தார். அங்குள்ள கத்தோலிக்க மக்கள் சிலர் உதவி கேட்டு அவருக்குத் தெரியப்படுத்தியதால் அவர்களுக்கு உதவிபுரிய ஆயத்தமாகிக் கொண்டிருந்தார். நான் போகவும் "ஏன் நீங்களும் வாருங்களேன்" என்றார். சென்றேன். அங்கு பல சிங்களக் குடியேற்ற மக்கள் மிகுந்த கஷ்டமான சூழ்நிலையில் வாழ்ந்து வருவதைக் கண்டேன். போஸ்ட்மாஸ்டர் என்று தன்னை அடையாளப்படுத்திய சிங்கள அன்பர் ஒருவர் என்னுடன் சிங்களத்தில் அளவளாவினார். என் பெயரைக் கேட்கவில்லை. என் பேச்சுச் சிங்களத்தில் தமிழர் சிங்களம் பேசும் சாயல் தெரியவில்லை போலும்!

என்னை சிங்களவர் என்றே எண்ணி கிட்டத்தட்டப் பின்வருமாறு கூறினார். "சேர்! நீங்கள் கொழும்பில் இருந்து வருகின்றீர்கள். எங்களை மாத்தறையில் இருந்து எமது அரசியல் வாதிகள் பலாத்காரமாக இங்கு குடியிருக்க அழைத்து வந்துள்ளார்கள். எமக்கு பலதையும் தருவதாக ஆசை காட்டியே இங்கு கொண்டு வந்தார்கள். ஆனால் அவர்கள் அதைச் செய்யவில்லை. கிணறு வெட்டவில்லை, வீடுகள் கட்டித் தரவில்லை, உணவுப் பொருட்கள் அனுப்பவில்லை. நுளம்பு மருந்து அடிக்கவில்லை. சும்மா இந்த வரண்ட காட்டுக்குள் கொண்டுவந்து விட்டு விட்டுப் போய்விட்டார்கள். வெயிலைப் பாருங்கள். மரஞ்செடி கொடி எல்லாம் கருகி இருப்பதைப் பாருங்கள். தண்ணீர் கொண்டுவர பல மைல்கள் செல்ல வேண்டும். தமிழர்கள் இடங்களை நாங்கள் ஆக்கிரமிக்க வேண்டும்என்று கூறித்தான் கொண்டு வந்தார்கள். நாமும் சிங்கள இனத்துக்கு சேவை செய்யப்போகின்றோம் என்று இங்கு வந்தோம். எமக்குக் கொடுத்த வாக்குறுதிப்படி எதனையுமே வழங்கவில்லை. என்னை போஸ்ட்மாஸ்டர் வேலை செய்யச் சொல்லியுள்ளார்கள். ஆனால் அதற்கான வசதியைச் செய்து தரவில்லை. நீங்கள் கொழும்பு தானே? இதையெல்லாம் போய் அவர்களுக்குச் சொல்கின்றீர்களா?" என்று கேட்டார். தொடர்ந்து பேசியவை இத் தருணத்தில் தேவையில்லாதபடியால் கூறாது விடுகின்றேன்.

ஆனால் நான் தெரியப்படுத்தும் விடயம் என்னவென்றால் சிங்கள மக்கள் தாங்களாக தன்னிச்சையாக வடகிழக்குக்கு வரவில்லை. கல்வி தேடி வரவில்லை. தமக்கான காணிதேடிக்கூட வரவில்லை. சீதோஷ்ணம் நாடி வரவில்லை. அரசியல் வாதிகளின் பலாத்காரத்தின் நிமித்தம் வந்தார்கள். அல்லது ஆசை காட்டியதால் வந்தார்கள். அரசாங்க அனுசரணைகள் கிடைக்கும் என்ற ஆவலினால் உந்தப்பட்டு வந்தார்கள். அவர்கள் அப்படியிருந்தும் கஷ்டப்பட்டு தொடர் ந்திருந்ததால் இன்று ஜெயந்திபுர, அசோகபுர, சிரிமாபுர என்றெல்லாம் புரங்கள் வளர்ந்துவிட்டன. இவ்வாறு தான் சிங்களக் குடியேற்றங்கள் ஆரம்பித்தன.

சில காலத்தின் பின்னர் அரசாங்க அனுசரணைகள் அவர்களுக்குக் கிடைத்ததாக அறியவந்தேன். அருட்தந்தை சம்பா போன்றவர்களின் தொடர்பாடலினால் அவை பெறப்பட்டன என்று அறிந்தேன். அவர் மனிதாபிமான அடிப்படையில் அவற்றைப் பெற்றுக் கொடுத்தார்.

ஆகவே உங்களிடம் நான் கேட்பது தமிழர்கள் தெற்கில் வந்து வசிப்பதற்கும் சிங்களவர்கள் வடக்கில் வந்து வசிப்பதற்கும் இடையில் ஒரு வித்தியாசத்தை உங்களால் உணர முடிகின்றதா என்பதையே? தமிழர்கள் தமது சொந்தப் பணத்தில் நாட்டின் தலைநகரத்தில் வீடு வாங்கி அல்லது வீடு கட்டி வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களின் இடமாற்றங்களுக்குப் பல பிரத்தியேகக் காரணங்கள் இருந்தன, இருக்கின்றன. ஆனால் சிங்களவர்கள் ஆசை காட்டியோ அல்லது பலவந்தத்தின் பேரிலோ அரசாங்கத்தால் அல்லது சிங்கள அரசியல் வாதிகளால் கொண்டுவரப்பட்டு தமிழ் மக்கள் காலாதிகாலமாக வாழ்ந்த இடங்களில் திட்டமிட்டு குடியேற்றப்பட்டு அரச அனுசரணையுடன் படையினர் பாதுகாப்புடன் வாழ்ந்து வருகின்றார்கள். ஒன்று தனிப்பட்டவர் குடியிருப்பு. மற்றையது திட்டமிட்ட அரச குடியேற்றம். முன்னையோர் அரச அனுசரணை எதுவுமின்றி சொந்தப் பணத்தில் கொழும்பில் வாழ வந்தவர்கள். மற்றையோர் திட்டமிட்டு தமிழர் தாயகத்தைத் தம்வசமாக்க பலவந்தமாகக் கொண்டுவரப்பட்டு குடியேற்றப்பட்டவர்கள்.

ஆகவே பின்னையோரின் குடியேற்றம் எமது பாரம்பரியத்தை அழிக்கவென்று திட்டமிட்டு இயற்றப்படுகின்ற செயற்பாடு. எம்மை நாட்டின் பல பாகங்களிலும் இருந்து விரட்டி அடித்து விட்டு காலாதிகாலமாக நாம் வாழ்ந்து வரும் இடங்களையும் கையகப்படுத்த அரசாங்கத்தால் நிகழ்த்தப்பட்டுவரும் நடவடிக்கை. எம்முள் 10 இலட்சத்துக்கு மேற்பட்டவரை நாட்டில் இருந்து விரட்டியாகி விட்டது. தொடர்ந்து எமது பூர்வீக நிலங்கள் என்று இதுவரை அடையாளப்படுத்தப்பட்டு வந்த எமது நிலங்களை ஆக்கிரமிக்கும் செயலே இந்த அரச குடியேற்றம். இதை எம் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். தன்னிச்சைக்கும் தான்தோன்றியான அரசியலிடைக்கும் இருக்கும் வேற்றுமையை அறிந்து கொள்ள வேண்டும்.

கேள்வி:-இன்று நடைபெறும் குடியேற்ற நிகழ்வுகள் பற்றி ஒரு வார்த்தை?

பதில்:- வவுனியாவில் கொக்கச்சான் குளம் என்ற பாரம்பரியமாகத் தமிழர் வாழ்ந்து வந்த ஒரு கிராமம் இருந்தது. அங்கு சில சிங்களக் குடும்பங்களும் அண்மைக் காலங்களில் வாழ்ந்து வந்தனர். அவர்கள் யாவரும் விவசாயிகள். போர்க் காலத்தின் போது தமிழ் மக்கள் இராணுவத்தினரால் விரட்டியடிக்கப்பட்டனர். சிங்களக் குடும்பங்கள் விடுதலைப்புலிகளால் விரட்டியடிக்கப்பட்டனர். போர் முடிந்த பின் மிக அண்மையில் சிங்கள மக்கள் அங்கு இராணுவத்தினரால் மீள் குடியேற்றப்பட்டுள்ளனர். சுமார் ஆயிரம் சிங்களக் குடும்பங்கள் அம்பாந்தோட்டையில் இருந்து அங்கு கொண்டுவந்து இராணுவத்தினரால் குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் விரட்டியடித்த குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் என்று கூறமுடியாது. எவ்வாறெனினும் வெளிப்படைத் தன்மையுடன் அவர்களின் உறவு முறை எதுவும் ஆராயப்படவில்லை.

திடீரென கோக்கச்சான் குளம் கொளபஸ்ஃவவ என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மேலும் சிங்கள மக்கள் கொண்டுவரப்பட்டுக்கொண்டே இருக்கின்றார்கள். சுமார் 1000 சிங்களக் குடும்பங்கள்

16ஆம் பக்கம் பார்க்க

# அதிபரை மண்டியிட வைத்த ஊவா முதலமைச்சர் மீது பாரபட்சமின்றி விசாரணை

## பொலிஸ்மா அதிபருக்கு ஜனாதிபதி பணிப்பு

(கொழும்பு)

ஊவா மாகாண முதலமைச்சர் சாமர சம்பத் தசநாயக்கவால் பதுளை மாவட்ட பாடசாலை பெண் அதிபர் துன்புறுத்தப்பட்டதாக கூறப்படும் சம்பவம் குறித்து பாரபட்சமின்றி விசாரணைகளை துரிதமாக மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் பொலிஸ்மா அதிபருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.



விசாரணைகள் நிறைவுறும் வரை ஊவா மாகாண கல்வி நடவடிக்கைகளை ஊவா மாகாண ஆளுநரின் கீழ் கொண்டுவருமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளதாக ஜனாபதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

உரிய விசாரணையின் பின்னர் குற்றவாளிகளுக்கு எதிராக சட்டநடவடிக்கையை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி, பொலிஸ்மா அதிபருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதேவேளை,ஊவாமாகாண முதலமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க தமது அதிகாரத்தின் கீழ் இருந்த கல்வி அமைச்சு பொறுப்பில் இருந்து விலகியுள்ளார்.

பாடசாலை அதிபர் ஒருவரை மண்டியிட வைத்தமை தொடர்பில் மேற்கொள்ளப்படும் விசாரணைகள் நிறைவடையும்வரை தாம் அந்தப் பதவியில் இருந்து விலகுவதாக சாமர சம்பத் தசநாயக்க தெரிவித்துள்ளார்.


பதவி விலகல் தொடர்பான கடிதத்தை ஆளுநரிடம் வழங்கியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பாடசாலை அதிபரை, ஊவா மாகாண முதலமைச்சர் மண்டியிட வைத்த சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட பாடசாலை அதிபர் பதுளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

நேற்று முற்பகல் 11 மணியளவில் அவர் முறைப்பாட்டை பதிவுசெய்துள்ளளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மாகாணசபை முறைமை இலங்கைக்கு தேவையில்லை

## அதாவுல்லா கூறுகிறார்



(கொழும்பு)

மாகாணசபை முறைமை இலங்கைக்கு தேவையில்லை என்பதனை நிலைநாட்டவே இம்முறை குதிரைச் சின்னத்தில் போட்டியிடுகின்றோம் என முன்னாள் உள்ளூராட்சி அமைச்சர் அதாவுல்லா தெரிவித்துள்ளார்.

மருதமுனையில் நேற்று முன்தினம் இரவு சனிக்கிழமை நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத்தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இந்த நாட்டிலே வாழ்கின்ற அனைத்து சமூகங்களும் ஒரு மேடையில் கூடியிருந்து எங்களுக்கான யாப்பை எழுத முடியாமல் நோர்வே, இந்தியா போன்ற நாடுகளில் உள்ளவர்கள்தங்களது தேவைகளுக்காக யாப்பெழுதிக்கொடுக்க முடியாது.

அதனை தற்போதைய முஸ்லிம் அரசியல் தலைவர்கள் தெரிந்து கொண்டு தங்களது அரசியலை செய்து வருகின்றார்கள். எமது கட்சி ஒன்றைக்கூற முற்படுகின்றது.

இனிமேல் எந்த பாகுபாடுகள், மனக்கிலேசங்களும் இல்லாமல் தமிழர்கள், முஸ்லிங்கள், சிங்களவர்கள் ஆகிய மூன்று இனத்தவரும் சேர்ந்து எங்களுக்கு அமைவான யாப்பினை நாங்களே எழுத முற்படுவோம் என்பதனை அறைகூவலாக விடுக்கின்றேன். ,

தற்போது இலங்கை அரசியலில் வடக்கு-கிழக்கை இணைப்பதற்கு முடிவெடுத்து விட்டார்கள். ஜனாதிபதி முறைமையை இல்லாமல் செய்வதற்கும் ரணில் விக்கிரமசிங்க முடிவெடுத்து விட்டார்.

ஆனால் சர்வஜன வாக்கெடுப்பொன்று போனால் நிச்சயம் தோற்று விடுவார்கள். இது தொடர்பாக சம்பந்தனுக்கும், சுமத்திரனுக்கும் எனக்கு கிடைக்கும் நேரத்தில் நிறையவே புத்திமதிகள் சொல்லியிருக்கிறேன்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தமிழர் தாயகத்தைத் தம்வசமாக்க...

வெகு விரைவில் குடியேற்றப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

மணலாறு என்று முன்னர் காலாதிகாலமாக எம்மால் அழைக்கப்பட்டுவந்த இடம்தான் தற்போதைய ஃவலிஓயா. முல்லைத்தீவைச் சேர்ந்த இந்த இடத்தில் தமிழ் மக்கள் பேர்மிட் பெற்று அல்லது உரித்தாவணங்கள் பெற்று வாழ்ந்து வந்தார்கள். போரின்போது அவர்கள் இடம்பெயர நேரிட்டது. பலர் தென்னிந்தியா சென்றிருந்தார்கள். திரும்பி வந்து பார்த்தால் அவர்களின் காணிகளுக்கு அரசாங்கம் புதிய உரித்துப் பத்திரங்களை வழங்கி 3000 இற்கும் மேலான குடும்பங்கள் அங்கு குடியிருந்ததைக் காண முடிந்தது. இப்போது அது சிங்களக் கிராமமாக மாறிவிட்டது. சுமார் 2500 ஏக்கர் காணியை இவர்கள் பிடித்துள்ளார்கள்.

அனுமதிப்பத்திரங்கள் இருந்த மக்களின் காணிகளை பிறருக்கு அரசாங்கம் கையளிக்கும் போது அவற்றிற்கு அனுமதிப்பத்திரங்கள் ஏற்கனவே வழங்கியிருந்ததை அறியாமலா சிங்கள மக்களுக்கு அவற்றைக் கொடுத்தது? இவை திட்டமிட்ட செயல்களின் வெளிப்பாடுகள் அல்லவா? இனப்பரவலை மாற்ற எடுக்கும் முயற்சிகள் அல்லவா? இது சம்பந்தமாக அண்மையில் இயற்றப்பட்டு வரும் திட்டம் தான் திவுல்ஓயாத் திட்டம். அது பற்றிய முழு விபரங்களை எதிர் பார்த்திருக்கின்றேன்.

இன்னும் பல இடங்கள் சிங்கள ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றன. முள்ளிக்குளம் மன்னாரில் இருக்கும் ஒரு கிராமம். அதனைக் கடற்படையினர் கையகப்படுத்தி அங்கிருந்தவர்களை விரட்டிவிட்டு கடற்படையினரின் குடும்பங்களுக்குக் கொடுத்துள்ளார்கள். அங்கு வாழ்ந்த 2000 இற்கு மேற்பட்ட குடும்பங்கள்காடுகளுக்குள் குடிசை அமைத்து வாழ்ந்து வருகின்றனர் என்று தெரியவருகின்றது.

மேலும் மன்னார் மதவாச்சி வீதியில் ஆங்காங்கே சிங்களக் குடும்பங்கள் கொண்டுவரப்பட்டு குடியிருத்தப்பட்டுள்ளனர். மடுரோட்டில் நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்களும் முருங்கனில் சுமார் ஐம்பது குடும்பங்களும் மீள்குடியேற்றம் என்ற பெயரில் குடியமர்த்தப்பட்டுள்ளார்கள். முன்னர் இருந்தவர்களின் வாரிசுகள் என்கின்றது அரசாங்கம். இந்தக் குடும்பத்தினர் அவர்களுடன் எவ்வாறு உறவு முறை கொண்டாடுகின்றார்கள் என்பது புரியாத புதிராக இருக்கின்றது. சில வருடங்களுக்கு முன்னர் வன்னியில் காணி தேவையெனில் உடனே மனுச் செய்க என்ற ஒரு சிங்கள விளம்பரம் நாட்டின் பல பாகங்களிலும் ஒரு தொலைபேசி இலக்கத்துடன் பிரபல்யமாய் இருந்தது. ஒரு பௌத்த பிக்கு கொடுத்த விளம்பரம் அது என்று கூறப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் வந்தவர்களோ இவர்கள் என்பதை நான் அறியேன். ஆனால் தகுந்த சட்ட ஏற்பாடுகளின் அடிப்படையில் அவர்கள் வந்தவர்கள் அல்ல.

மேலும் யாழ்ப்பாணம் நாவற்குழியில் 120 சிங்களக் குடும்பங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு படையினரும், தெற்கில் இருந்துவந்த பௌத்த பிக்குமாரும் உதவிகள் அளித்து வருகின்றனர்.

முல்லைத்தீவு தண்ணீர் முறிப்புக் குளத்திலும் சிங்களக் குடியேற்றம் நடைபெற்று வருகிறது. இவற்றைவிட பாலைதீவு, இரணைதீவு ஆகியன முற்றாகப் படையினர் வசம். முல்லைத்தீவில் 650 ஏக்கர் காணியைக் கடற்படை நிரந்தரமாகக் கேட்கின்றது. மன்னாரை அண்டிய தீவுகளும் அவர்கள் கைவசம். அவற்றை வைத்துப் பணம் உழைக்கின்றது கடற்படை.

போர் முடிந்த இடத்தில் 450 ஏக்கர் காணி ஏற்கனவே இராணுவத்தினர் கைவசம். மேலும் எமது சுற்றுலா மையங்கள் மத்தியின் கைவசம். சுற்றுலா உணவகங்கள் விடுதிகள் தென்னவர் கைகளில். A9 பாதையில் கடைகள் பல தென்னவர் கைகளில்.

ஆகவே சிங்களப் பாரம்பரியம் அழிவு நிலையில் உள்ளதா? தமிழர் பாரம்பரியம் அழிவு நிலையில் உள்ளதா? நீங்களே கூறுங்கள். மேலும் விபரங்கள் வேண்டும் என்றால் என்னால் உங்களுக்கு அனுப்ப முடியும்.

அடுத்து நீங்கள் உங்கள் பாதுகாப்புப் பற்றி கரிசனை எழுப்புகின்றீர்கள். இந்தியா சென்று திரும்பியவர்கள் தாம் வாழ்ந்து வந்த மணலாறு காணிக்குச் சென்ற போது அங்கு வேற்று இன மக்கள் குடியிருந்ததைப் பார்த்த போது அவர்களுக்கு ஏற்பட்ட மனோநிலையைச் சிந்தித்தீர்களா? முள்ளிக்குளத்தில் கடற்படையினர் தமது கிராமம் முழுவதையுமே கையகப்படுத்தி தம்மைக் காடுகளில் தஞ்சம் புக வைத்த போது அவர்களின் வேதனையை நீங்கள் சிந்தித்தீர்களா? பௌத்தர்கள் இல்லாத இடத்தில் பௌத்த கோயில்கள் கட்டப்பட்டு படையினர் அனுசரணையுடன் தங்கள் காணிகளில் குடியிருக்கும் புத்த பிக்குகளை அவற்றின் சொந்தக்காரர்கள் காணும் போது அக் காணிச் சொந்தக்காரர்களுக்கு ஏற்படும் மன வேதனையை உணர்ந்தீர்களா? எத்தனையோ மன வேதனைகளை எமது மக்கள் அனுபவித்து வருகின்றார்கள்.

ஆனால் உங்களுக்கு நடக்கக் கூடும் என்று நீங்கள் அச்சப்படும் விடயங்கள் பெரிதாகிவிட்டன. இன்னுமொரு 58 அல்லது 83 கொழும்பில் நடக்க வாய்ப்பில்லை. எமது பிரச்சினைகள் இப்பொழுது உலகுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. நடந்தால் அவை பற்றி நடவடிக்கை எடுக்க பன்னாடுகள் காத்திருக்கின்றன. எமது நாட்டின் பொருளாதாரம் மிகக் கேவலமான நிலையில் இருக்கின்றது.

ஆகவே அரசாங்கம் இன்னொரு 58 ஐயோ 83 ஐயோ வரவிடாது. கலவரங்களை அடக்கப் போதுமான இராணுவம் இப்போது தயார் நிலையில் உள்ளது. உங்களின் பயம் நியாயமற்ற பயம். ஆனால் எமது வடகிழக்கு மக்களின் அல்லல்களும் அல்லாடல்களும் அவர்களால் அனுபவிக்கப்பட்டு வரும் இன்றைய நிலை. தயவு செய்து சுயநலத்துடன் சிந்தித்து நடந்துகொள்வதைத் தவிப்பீர்களாக! நாம் எமது நிலங்கள், மொழி, கலாசாரம், பாரம்பரியம், மதஸ்தலங்கள் பறிபோகப் போகின்றன என்று படபடத்துக் கொண்டிருக்கின்றோம். நீங்கள் உங்கள் தற்போதைய சொகுசு நிலை நீடிக்குமா என்ற எண்ணத்தில் இருக்கின்றீர்கள். உண்மையை உணர்ந்து கொள்ளப்பாருங்கள்! பாரிய இன அழிப்பொன்று வடக்குக் கிழக்கில் நடைபெற்று வருவதைப் புரிந்து கொள்ளுங்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# நாடு கடந்த தமிழீழ அரசின் அரசவை அமர்வுகளை கண்காணிக்கிறதாம் இலங்கைத் தூதரகம்

(கொழும்பு)

கனடாவில் நடந்து வரும், நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவை அமர்வுகளை கனடாவிலுள்ள இலங்கைத் தூதரகம் உன்னிப்பாக கண்காணித்து வருகிறது என்று கொழும்பு ஆங்கில வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.


நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் இரண்டாவது அரசவையின் 8 ஆவது கூட்டத்தொடர், கனடாவின் ரொரண்டோ நகரில், இம்மாதம் 19ஆம் திகதி ஆரம்பமாகி நடந்து வருகிறது.

இந்தக் கூட்டத் தொடர் குறித்து, கனேடிய வெளிவிவகார அமைச்சிடம், இலங்கை வெளிவிவகார அமைச்சு அதிகாரபூர்வமாக எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளதா? என்பது குறித்து இதுவரை தகவல் வெளியிடப்படவில்லை.

எனினும், இலங்கையில் தனிநாட்டுக் கொள்கையை ஊக்குவிக்கும், நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவை அமர்வு, கனடாவில் நடந்து வரும் நிலையில், அங்குள்ள இலங்கைத் தூதரகம் அதனை உன்னிப்பாக கண்காணித்து வருவதாக அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன என்று கொழும்பு ஆங்கில வார இதழ் தெரிவித்துள்ளது. (இ-7)

# சோரம் போகாமலும் தடம்புரளாமலும் மு.கா.பயணிக்கிறது

## நஷீர் அஹமட் விளக்கம்



(ஏறாவூர்)

தேசியக் கட்சிகள் எவற்றுக்கும் சோரம்போகாமலும் ஸ்தாபகர் அஷ்ரப் வகுத்த வியூகத்திலேயே தடம்புரளாமலும் தனித்துவம் பேணி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி பயணிக்கிறது என அக்கட்சியின் பிரதித் தலைவரும், கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான செய்னுலாப்தீன் நஷீர் அஹமட் தெரிவித்தார்.

ஏறாவூர் புன்னைக்குடாவில் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஐக்கிய தேசியக் கட்சி சார்பாகப் போட்டியிடும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரக் கூட்டம் இடம்பெற்றது.

அங்கு கலந்து கொண்டு உரையாற்றிய அவர், "ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இதயமாக இருக்கின்ற பகுதிகளிலும் கூட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்ந்து போட்டியிடுகின்றது. ஏனையோர் எமது கட்சி சோரம் போய் விட்டதாகக் கருகின்ற விடயத்தை அரசியல் வியூ கத்தின் ஒரு பகுதியாகவும் சாணக்கியத்தின் கருப் பொரு ளாகவும் அரசியல் விற்பன்ன ர்கள் கருதுகிறார்கள்.

எமது சமகாலத் தலைமைத்துவம் இந்த நுட்பங்களை நன்கு அறிந்து உள்ளூராட்சித் தேர்தல் களத்தில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்துள்ளது. முடிவுகள் அறிவிக்கப்படுகின்ற போது நாட்டிலுள்ள 70 சதவீதமான உள்ளூராட்சி சபைகளின் அடுத்து வரும் ஆட்சியை ஐக்கிய தேசியக் கட்சியே கைப்பற்றும். அப்போது நாம் அந்த ஆட்சியில் இருப்போம்.

இந்த கள நிலவரங்களைப் புரிந்து கொள்ளாமல் நாம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு விலை போய் விட்டோம் என குழப்பங்களை உண்டு பண்ணப்பார்ப்பது அவர்களுக்கே முட்டாள்தனமாக அமையும். எங்கெங்கெல்லாம் நாம் ஆட்சியைக் கைப்பற்றுவோம் என்பது தெளிவான விடயம். அந்தப் பயத்தில் எதிராளிகள் கொக்கரிக்கிறார்கள்.

சின்னாபின்னப்பட்டுப் போயுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து பிரயோசனமில்லை. அதனால் தான் நாம் ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஆட்சியமைக்க கூட்டுச் சேர்ந்துள்ளோம்" என நஷீர் அஹமட் மேலும் தெரிவித்தார். (இ-7)

## சாரதி மீது தாக்குதல்

# தனியார் பேருந்து ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பு போராட்டம்

(கொழும்பு)

கண்டி, அமுனுகம வீதியில் பயணிக்கும் தனியார் பேருந்து ஊழியர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

டொறிங்டன் பிரதேசத்தில் வைத்து பேருந்து சாரதி ஒருவர் தாக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து குறித்த பணிப் புறக்கணிப்பு நேற்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தாக்குதலுக்கு உள்ளான சாரதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை கைது செய்யப்பட்ட நபருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மற்றுமொரு நபரை தேடும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளதாக பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளவர்கள் கூறியுள்ளனர்.

இருப்பினும் தாக்குதலுக்குள்ளான சாரதி, வீதியில் உள்ள சிலரை அச்சுறுத்திய நிலையில் பேருந்தை செலுத்தியுள்ளதாக தெரிய வருகிறது. (இ-7)

# இழப்பீடு



(கொழும்பு)

திவுலப்பிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில் அண்மையில் ஏற்பட்ட சூறாவளியால் பாதிக்கப்பட்ட வீட்டு உரிமையாளர்களுக்கு 52 இலட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட தொகை இழப்பீடு வழங்க ப்பட்டுள்ளது. திவுலப்பிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில் ஏற்பட்ட சூறா வளியால் பாதிக் கப்பட்ட 544 வீட்டு உரிமையாளர்களு க்கு 52 இலட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட தொகை வழங்கப்பட்டதாக இடர் முகாமைத்துவ அமைச்சு தெரிவித்துள்ளது. (இ-7)

# சட்டவிரோத சிகரெட் வர்த்தகர் கைதானார்

(கொழும்பு)

வெளிநாட்டு சிகரெட்டுகளை சட்ட விரோதமாக இலங்கைக்குள் கடத்தி வர முயன்ற இலங்கையர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்றுக் காலை கைது செய்யப்பட்டார்.

குறித்த நபர் குருநாகலையைச் சேர்ந்த வர்த்தகர் என்று தெரியவந்துள்ளது. அவர் வசமிருந்த 23 ஆயிரத்து 889 சிகரெட்டுகளை சுங்கத் துறையினர் பறிமுதல் செய்தனர். பறிமுதல் செய்யப்பட்ட சிகரெட்டுகளின் பெறுமதி சுமார் பன்னிரண்டு இலட்சம் ரூபா என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட வர்த்தகர், நியமிக்கப்பட்ட 2 இலட்சம் ரூபா பிணைத் தொகையைச் செலுத்தி பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1308

Search for people, places and things | Nagendram Home

### சாரங்கா


டேய் மச்சி... நீ வட்ஸ் அப்ல இருக்கியா... பேஸ்புக்கில இருக்கியா



மூடிட்டு போடா... நானே கஷ்டத்துல இருக்கேன்... வந்துட்டான்

### வினோத்


மனைவி: வேலைக்காரி வராததால வீடே சரியில்ல பாருங்க



கணவன்: அவ வராததால உனக்கு வீடுதான் சரியில்ல எனக்கு மனசே சரியில்ல

### வேணுகா

எல்லாரும் குழந்தை தொழிலாளர் குற்றம்னு சொல்லுறாங்க



ஆனா எங்க டீச்சர் மட்டும் ஹோம் வேர்க் பண்ணுன்னு சொல்லி சாவடிக்கிறாங்க

### ரம்யா

அப்பா... அப்பா... அம்மா கோவிச்சிக்கிட்டு போறாங்க



போனா போகட்டும்... தமிழ்நாட்டுக்கு ஒரு சின்னம்மா கிடைக்கும் போது உனக்கு ஒரு சின்னம்மா கிடைக்காதா மகனே

### கல்யாண்

தண்ணீர் பஞ்சம் வரும் அபாயம்!



பாங்ல நின்னது பத்தாதுன்னு வோட்டர் டாங்லயும் நிக்கனுமா! படுத்துறீங்களேடா எங்கள...

### தேவ்

எந்த புக்கப் பார்த்தாலும் தூக்கம் தூக்கமா வருது..




இந்த பேஸ்புக்க பார்த்தா மட்டும் கருமம் தூக்கமே வரமாட்டேங்குது

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இலங்கையில் அதிசய பாம்பு!

## வியப்பில் மக்கள்



(கொழும்பு)

இலங்கையில் அதிசய மிக்க பாம்பு ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

தோப்பூர் நீணாக்கேணிப் பிரதேசத்தில் அபூர்வமான நாகபாம்பு ஒன்று ஊர் மக்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எனினும் அச்சம் காரணமாக அதனை அடித்து கொன்றுள்ளனர்.

இந்த பாம்பு விசித்திரம் நிறைந்து காணப்படுவதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

மிகவும் நீளமான நாகபாம்பு மனித முகத்தை கொண்டுள்ளமை பலருக்கும் வியப்பை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறான பாம்பு இனம் இலங்கையில் இதுவரை கண்டுபிடிக்கவில்லை என அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளர்.

இது தொடர்பான புகைப் படங்கள் சமூக வலைத் தளங்களில் வெகுவாக பரவி வருகின்றன. (இ-7)

# போதைப் பொருளை ஒழிப்போம்

## ஆறுமுகன் தொண்டமான் உறுதி



(ஹற்றன்)

நாட்டில் உள்ள நகரங்களில் இன்று ஹற்றன் நகரம் போதைப்பொருட்கள் விற்பனையாகும் ஒரு முக்கிய நகரமாக மாறியுள்ளது. இதனால் எமது பிள்ளைகளின் எதிர்காலம் கேள்விக்குறிக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது.

வருகின்ற உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றிபெற்ற உடனேயே ஹற்றனிலிலுள்ள போதைப் பொருட்களை ஒழித்து ஒரு தூய்மையான நகரமாக மாற்றியமைப் போம் என நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளருமான ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்தார்.

ஹற்றன் டிக்கோயா நகர சபைக்கு ஆரியகம தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர்களை வாக்காளர்களுக்கு அறிமுகப்படுத்தும் நிகழ்வு ஹற்றன் தும்புறுகிரிய வீதியிலுள்ள வீடு ஒன்றில நேற்று முன்தினம் நடைபெற்றது. இக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (இ-7)

# சபாநாயகர் தலைமையில்

# பிணைமுறி மீதான விவாதம் குறித்து கட்சித் தலைவர்கள் கூட்டம் இன்று

(கொழும்பு)

மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழுவின் அறிக்கை மீதான விவாதம் குறித்து தீர்மானிக்க பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்களின் கூட்டம் சபாநாயகர் கருஜெயசூரிய தலைமையில் இன்று 22 ஆம் திகதி கூடுகின்றது. இதற்கும் மேலதிகமாக எதிர்வரும் பாராளுமன்ற நிலையி யற் கட்டளை மறு சீரமைக்கும் சட்டமூலம் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஒழுக்க நெறிக் கோவை தொடர்பான சட்ட மூலத்தின் இறுதி விவாதம் ஆகியன இடம்பெறலாமெனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# ஆய்வு நடத்த சென்ற பொலிஸார் அதிர்ச்சி!

(கொழும்பு)

கஞ்சா பயிரிடப்பட்டிருந்த பகுதியைச் சுற்றிவளைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த பொலிஸாரை காட்டு யானைகள் தாக்கியதில் இருவர் கடும் காயங்களுக்கு உள்ளாகினர்.

கஞ்சா பயிரிடப்பட்டிருப்பதாகக் கிடைத்த தகவலின் பேரில், லுனுகம்வெஹர பகுதியில் ஆய்வு நடத்த பொலிஸார் சென்றிருந்தனர்.

குறித்த கஞ்சா தோட்டத்தை நேற்றுக்காலை ஆய்வு செய்து கொண்டிருக்கும் போது, திடீரென அங்கு காட்டுயானைகள் நுழைந்தன.

இதனால் அதிர்ச்சியுற்ற பொலிஸார், தம்வசமிருந்த ஆயுதங்களைக் கைவிட்டு விட்டு உயிர்தப்ப முயன்றனர். எனினும் அதற்குள் காட்டு யானைகள் தாக்கியதில் இருவர் கடுமையான காயங்களுக்குள்ளாகினர்.

காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர் (இ-7)

# யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவ சர்வதேச மாநாடு (மாசி 23ம் திகதி-27ம் திகதி வரை)

உலகம் தோன்றிய காலத்தில் உன்னத நாகரிகத்துடன் வாழ்ந்த தமிழ் இனம் தங்களுடைய மொழி, கலை, பண்பாடு முதலியவற்றைப் போற்றி வளர்த்தது. இதனை நவீன ஆராய்ச்சியாளர்களும் ஏற்றுக் கொள்கின்றனர்.

எமது நாட்டிலும் அயன வலய நாடுகளினதும் பருவ கால சூழ்நிலைக்கு ஏற்பவும் இங்கு உண்டான நோய்களைப் போக்கவும் இங்குள்ள மூலிகை முதலியவற்றைக் கொண்ட சிகிச்சைகளையும் உள்ளடக்கியது சித்த வைத்தியம் ஆகும். சித்த மருந்துகள் வேத காலத்திற்கு முற்பட்டவை. மற்றும் திறன் மிகுந்தவையாகும். உடல், உள நோய்களை நீக்குவதும் இனிவராமல் காப்பதும் அவற்றைத் தடுப்பதும் சித்த மருத்துவம் ஆகும்.

தொன்மைமிக்க சித்த மருத்துவமானது தனது வளர்ச்சியில் இடையில் ஒரு தொய்வு ஏற்பட்டு தற்போது மீண்டும் ஒரு அங்கீகாரம் உலகளாவிய ரீதியில் வழங்கப்பட்டுள்ள இச் சந்தர்ப்பத்தில் இம் மாநாடானது நடைபெறுவது இதன் வளர்ச்சிக்கு மேலும் வலுவூட்டுவதாக கருதுகின்றேன்.

முதன் முதலாக சித்த மருத்துவ அலகால் சர்வதேச மாநாடு நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. இம் மாநாடானது (Minisity of Ayush,New Delhi India) உடன் இணைந்த எமது வடமாகாண சுதேச மருத்துவ திணைக்களம், கைதடி சித்த மருத்துவ போதனா வைத்தியசாலை என்பனவும் ஒன்றிணைந்து சர்வதேச மாநாடு, பயிற்சிப்பட்டறை, கண்காட்சி என்பனவற்றை நடத்தவுள்ளன.

எமது சித்த மருத்துவத் துறையானது. யாழ்.பல்கலைக்கழகத்தின் கீழ் 34 வருடங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டு பின் அது அலகாக மாற்றப்பட்டு செயற்பட்டு வருகிறது. தற்போது பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் எமது சித்த மருத்துவ அலகானது யாழ். பல்கலைக்கழகத்தின் கீழ் சித்த மருத்துவ நிறுவனமாக இயங்குவதற்கான அங்கீகா ரம் கிடைக்கப் பெற்ற இச் சந்தர்ப்பத்தில் சர்வதேச மாநாடு நடத்தப்படுவது சித்த மருத்துவத்திற்கு உலகளாவிய ரீதியில் நல்லதோர் அங்கீகாரம் கிடைப்பதற்கும் வழி சமைக்கும்.

இலங்கையில் சித்த மருத்துவமானது 34 வருடங்களாக யாழ். பல்கலைக்கழகத்திலும் அண்மைக்காலமாக கிழக்குப் பல்கலைக்கழகத்திலும் சித்த மருத்துவ அலகாக இயங்கி வருகின்றது.

ஆனால் இந்தியாவில் சித்த மருத்துவமானது பன்மடங்காக இயங்கி வருகின்றது. ஆனால் இந்தியாவில் சித்த மருத்துவமானது பன்மடங்காக வளர்ச்சியடைந்துள்ளது. தற்போது மலேசியா போன்ற சர்வதேச நாடுகளிலும் சித்த மருத்துவமானது நன்கு வளர்ச்சியடைந்துள்ளதை அங்கு நடைபெறும் மாநாடுகளின் மூலம் அறியக் கூடியதாகவுள்ளது.

அந்த வகையில் இச் சர்வதேச மாநாட்டில் இந்தியாவில் இருந்து வருகை தரும் வளவாளர்கள் , ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பேராசிரியர்கள் பங்கேற்பதன் மூலம் சித்த மருத்துவத்தின் வளர்ச்சியானது இலங் கையிலும் உறுதி செய்யப்படுகிறது.

சித்த மருத்துவ அலகின் தலைவர் என்ற வகையில் சித்த மருத்துவ மாநாடு எமது அலகில் நடத்த இருப்பது சித்த மருத்துவம் சார்ந்த வைத்தியர்கள், விரிவுரையாளர்கள், சித்த மருத்துவம் பயிலும் மாண வர்கள் மற்றும் பாரம்பரிய வைத்தியர்களுக்கும் பயனுள்ளதாக அமையும் என்பதைக் கூற விரும்புகின் றேன்.

இது தனியே மாநாடாக மட்டுமல்லாமல் வட தென் இந்தியாவிலிருந்து வருகை தரும் பல பேராசிரியர்கள் மற்றும் வளவாளர்களினால் சித்த மருத்துவத்திற்கே உரித்தான வர்மச் சிகிச்சை, யோகக்கலை, நாடிப் பரீட்சை மற்றும் பிரத்தியேக சித்த மருத்துவ சிகிச்சை முறைகள் போன்ற பல தலைப்புக்களின் கீழ் 3 நாட்கள் பயிற்சிப் பட்டறையானது வருகின்ற மாசி மாதம் 23,24, 25 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிப் பட்டறையில் பங்கேற்பதன் மூலம் சிறந்த பலனைப் பெற்றுக்கொள்ளலாம். இப்பயிற்சிப் பட்டறையைத் தொடர்ந்து 26,27 ஆம் திகதிகளில் சர்வதேச மாநாடு நடைபெற வுள்ளது. இம் மாநாட்டில் சித்த மருத்துவம் சார்ந்த வளவாளர்கள் மற்றும் சித்த மருத்துவ ஆராய்சியாளர் களினால் பல்வேறு வகையான ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

இவ் ஆய்வுகளின் பரிமாறல் இலங்கையில் சித்த மருத்துவ வளர்ச்சிக்கு மேலும் படிகற்களாக அமையும்.

இச் சர்வதேச மாநாட்டில் மாசி மாதம் 23-27ஆம் திகதி வரை சித்த மருத்துவக் கண்காட்சியானது அரசாங்க சித்த மருத்துவ வைத்தியர்கள், சித்த மருத்துவம் பயிலும் மாணவர்கள் இலங்கை மற்றும் இந்தியாவின் இயற்கை சித்த மருந்து உற்பத்தி நிலையங் கள் (Herbal Pharmacutcals) வடக்கு சுதேச மருத்துவத் திணைக்களம் ஆகியோர்களின் பங்களிப்புடன் நடத்தப்படவுள்ளது. இக் கண்காட்சியில் பல செயன்முறை ரீதியாக மருத்துவ விளக்கங்கள் (Herbal Products) பொது மக்கள் பயன்படக்கூடிய விதத்தில் வழங்கப்படவுள்ளது.

இக்கண்காட்சியில் 500 இற்கு மேற்பட்ட மூலிகைகள் இனங் காண்பதற்குரிய பல வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு இவற்றின் பரம்பலை வீடு மற்றும் பாடசாலைத் தோட்டங்களிலும் விஸ்தரிக்கும் நோக்கில் மூலிகை நாற்றுக்கள் விற்பனை செய்யப்பட வுள்ளன.

அத்தோடு சித்த மருத்துவ வளவாளர்கள் மற்றும் சித்த மருத்துவ மாணவர்களால் குழந்தை, மகளிர் மருத்துவம் பற்றிய விளக்கங்கள் தொற்றா நோய்களின் தடுப்பு முறைகள், உணவு முறைகள், சித்த மருத்துவ சிகிச்சை முறைகள் பற்றிய விளக்கத்தைப் பெற்றுக் கொள்வதோடு பாடசாலை மாணவர்கள், விவசாயிகள், பொதுமக்கள் இவ் 5 நாட்களில் சித்த மருத்துவம் சார்ந்த அனைத்து விளக்கங்களையும் ஒரே குடையின் கீழ் பெற்றுக் கொள்ளலாம் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

கடந்த வருடம் சித்த மருத்துவ அலகில் தேசிய மாநாடும் கண்காட்சியும் நடைபெற்றதன் மூலம் பல ஆய்வாளர்கள் சித்த மருத்துவ வைத்தியர்கள், பாடசாலை மாணவர்கள், பொது மக்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர் என்பதை இச் சந்தர்ப்பத்தில் நினைவு கூற விரும்புகின்றேன்.

வட தென் இந்தியா மற்றும் மலேசியா போன்ற சர்வதேச நாடுகளில் இருந்து வரும் வளவாளர்களினால் சித்த மருத்துவம் பற்றிய விளக்கம் கொடுக்கப்படவுள்ளதால் அவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துவதன் மூலம் தமது பட்ட மேற்படிப்பை மேற் கொள்வதற்கான புலமைப்பரிலை



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்களும் அமையும் என நினைக்கின்றேன். ஆகவே இவ் அரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளுமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கின்றேன்.

இச்சந்தர்ப்பத்தில் இம் மாநாட்டை இந்தியாவுடன் இணைந்து நடத்துவதற்கு சகல ஒத்துழைப்புக்களையும் வழங்கிய யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் இந்தியத்துணைத்தூதுவர் (யாழ்ப்பாணம்) ஆகியோருக்கும் சகல வழிகளிலும் இம்மாநாட்டை முன்னெடுத்து செல்வதற்கு நெறிப்படுத்தியவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ் சர்வதேச மாநாடு ஆரம்பிக்கும் மாசி மாதம் 23 ஆம் திகதி வரை சிறப்பு கட்டுரைகள் அவ்வப்போது பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

# இ-கற்றல் (E- LEARNING)

அண்மைக் கர்லங்களில் சமூக ஊடகங்கள் (social media) பல்வேறு துறைக்ளிலும் செல்வாக்குச் செலுத்தி வருகின்றன. கற்பித்தல்- கற்றல் செயற்பாட்டிலும் அவற்றின் பங்கு கணிசமானதே. தற்காலத்து மாணவர்கள் எத்தனையோ வகையான எண்ணிமத் தொடர்பிலான (Digital based) கற்றல் முறைகளை சமூகத்தில் தமது கற்றல் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தி வருகின்றார்கள். இலத்திரனியல் நுட்பம் சார்ந்த இணைப்புக்களை அடிப்படையாகக் கொண்ட கற்றல் முறையினை இ-கற்றல் என்கின்றார்கள். இக்கற்றல் "சகபாடிக் கற்றல்" (peer Learning) என்ற பொறிமுறைக்கு மட்டுமன்றி சமூகக் கற்றல் மற்றும் கூட்டாகக் கற்றல் ஆகியவற்றுக்கும் துணைபோகின்றது.

நவீன கற்றல், கற்பித்தல் முறைகள் பலவுள. அவற்றில் பாடசாலை மாணவர்களை மையமாக வைத்துப் பல கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் உள்ளன. வெறுமனே புத்தகக் கல்வி மட்டும் அறிவைத் தராது. வாண்மைக் கற்றலும், அனுபவக் கற்றலும் மாணவர்களை ஒருபடி உயர்த்தவே செய்கின்றன. இ-கற்றல் முறையானது பல்வேறு வகைப்பட்ட வலைப் பின்னல் இணைப்புக்கள் ஊடாக பயணிக்கச் செய்வதன் மூலமான கற்றலை தருகிறது. ஆசிரியர்-மாணவர் என்ற இரு வழி உறவினைத் தாண்டி சமூக உறவு என்ற கட்டமைப்பு உருவாகுவதன் மூலம், சமூகமயமாக்கல் மற்றும் கலவைக் கற்றல் (Blended Learning) என்பனவும், பலவழி உறவும் பேணப்படுகின்றது. இலத்திறனியல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி, பல்வேறு வகையான இணைப்புக்களை வழங்குவதுடன் கற்றலுக்கும் திறவுகோலாக அமைகின்றது.

இங்கு இணையம் என்ற மனிதன் அல்லாத தொடர்பு முக்கியம் பெறுகின்றது மட்டுமன்றிச் சமகால அறிவு, ஆற்றல், திறன்களின் வளர்ச்சியோடு பயணிக்கச் செய்வதன் ஊடாக கற்றல் நிகழ்கிறது. ஊடகக் கற்கை என்கின்ற பாடம் தொகுதிப் பாடங்களில் வது தொகுதியாக தரம் 10 மற்றும் 11 வகுப்புக்களில் அறிமுகமாகியுள்ளமை இந்த எண்ணக் கருவிற்கு வலுச்சேர்க்கவே.



கல்வித் தரிசனம்

இ-கற்றல் ஒரு சமூகக் கற்றலை மையமாக வைத்துக் கொண்டது. நவீன சாதனங்களாக சமூக வலைத் தளங்கள், மென்பொருட்கள் மற்றும் சமூக ஊடகங்கள் மூலமான பன்மைநிலைத் தொடர்புகளுக்கு வழிகாட்டுவதுடன், பல்வேறு வகையின் திறன்களையும் ஆற்றல்களையும் குழுவாகச் சேர்ந்து மேம்படுத்த உதவுகின்றது.

இ-கற்றல் ஒருவரை தானாகவே எந்த நேரத்திலும் எந்த வேளையிலும் எந்த இடத்திலும் இணைய வைப்பதுடன் பல்வேறு வகையான Online சந்தர்ப்பங்களையும் பெற்றுக் கொடுத்து ஊக்கப்படுத்தப் படுகிறது. இக்கற்றலோடு தொடர்புபடுத்தி பல்வேறு வகையான அமைப்புக்கள் மற்றும் கம்பனிகள் ஊக்கமளிக்கின்றன. இலத்திரனியல் கற்கை நெறிகள், இலத்திரனியல் கற்றல் சந்தர்ப்பங்கள் , இலத்திரனியல் கற்றல் வளங்கள் மற்றும் ஆராய்ச்சிகள், இலத்திரனியல் கற்றல் நுட்பங்கள், இலத்திரனியல் கற்றல் மேடைகள் என்றவாறு பல்வேறு வகையான வளர்ச்சிகளை இக்கற்றல் கொண்டமைந்தது சிறப்பானதே. இது தனிப்பட்ட ஒரு மாணவருடைய அக்கறை, விருப்பு, வெறுப்பு என்பவற்றின் அடிப்படையில் இணைப்பு உருவாக்கங்கள் மூலம் இடம்பெறுகின்றது.

ஒரு மாணவன் எந்த அளவு ஊக்கம் கொள்கிறானோ அந்த அளவு அறிவை அவன் இ-கற்றலில் பெறுகிறான்.

வகுப்பறை கற்றல் போல நெருக்குவாரங்கள் குறைவாக இருப்பதும் இதன் அண்மைய வளர்ச்சிக்கு ஒரு காரணம் எனலாம். பலவகையான விருப்புத் தெரிவுகள் கிடைப்பதன் காரணமாக தனி மனிதன், சூழல், சமூகம் என்றவாறு விரிவடையச் செய்து கற்றல் நிகழ்த்தப்படுகிறது.

இலத்திரனியல் கற்றல் முறையானது பல்வேறு பரிமாணங்களில் இடம்பெறுகின்றது. தொழில் செய்தவாறே கற்றல், பகுதி நேர கற்றல், இடைவிலகிய பின்னர் கற்றல், வாழ்நாள் முழுவதும் கற்றல் மற்றும் கற்றவற்றுக்கு மேலாக கற்றல் போன்ற பலவற்றிற்குஇ-கற்றல் துணை போகிறது. அவை பல்வேறு வகையான கற்றல் பொதிகளை ( Learning Packages) வழங்குவதால் இடைவிலகும் தன்மையை (Dropout) குறைகின்றன.

இந்த 21 ஆம் நூற்றாண்டின் அதி துரித வளர்ச்சிக்கு ஏற்றவாறு எம்மை தயார்படுத்தவும் அதனூடே பயணம் செய்யவும் வழி ஏற்படுத்தப்படுகிறது. அவை பாலர் வகுப்புத் தொடக்கம் பல்கலை வரை மட்டுமன்றி அதற்கு அப்பாலும் தேடல் என்ற எண்ணக் கருவை வளர்த்து ஆய்வுக்குட்படுத்தி கல்விச் சிகரத்தை தொட வைக்கின்றன. இ-கற்றலில் உள்ள மென்பொருட்கள், அவற்றின் பாவனை, கவர்ச்சித் தன்மை, வேகம், நேரச்சுருக்கம் போன்ற பல்வேறு நன்மைகள் துணை புரிந்து சாதனையாளர்களைப் படைக்க வைக்கிறது.

கூட்டாக கற்றல் மற்றும் இணைந்து கற்றல் என்பன உளவியலில் அடிப்படையில் தரத்தை ஒட்டியதாய் அமைகின்றன. குழுக்களின் நியமங்களும், பயிற்சிகள் மற்றும் கலந்துரையாடல்கள் என்பன இ-கற்றலில் பெரிதும் எதிர்பார்க்கப்படுகின்றன.

அவை ஊற்றிணைந்த கற்றல் (Peer learning) மற்றும் பின்னூட்டல் ஆகியவற்றுக்கு உறுதுணையாய் அமைந்து விடுகின்றது. புதிய தொழில்நுட்பத்தின் பொறிமுறையாக விளங்கும் இலத்திரனியல் கற்றல் புதிய நூற்றாண்டின் புரட்சிக்ரமான கற்றல் வடிவமே என்பது எள்ளளவும் ஐயமில்லை.

எஸ். மயூரன் (M.A)
ஆசிரியர்
சென்.ஜோன்ஸ் கல்லூரி

## மகிந்தவுடன் மைத்திரி மகள் நீண்டநேரம் கலந்துரையாடல்





(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மகளின் சந்திப்பு தொடர்பில் பரவலாக பேசப்பட்டு வருகிறது.

பொலநறுவை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறிபால கம்லத்தின் மகள் ரஞ்சா, டெங்கு நோயினால் பாதிக்கப்பட்ட நிலையில் மரணமடைந்தார்.

அவரின் இறுதிக் கிரியை நடவடிக்கைகள் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் பல்வேறு மட்ட அரசியல் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக பொலநறுவை சென்றிருந்தார்.

விசேட ஹெலிப்கொப்டர் மூலம் சென்றிருந்த மகிந்த, ரஞ்சனாவின் இறுதிச் சடங்கு நிகழ்வில் பங்கேற்றார். இதன்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மகள் சத்திரிக்கா சிறிசேனவுடன், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நீண்ட நேர கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளார்.

இதன்போது ஜனாதிபதியின் சகோதரரும் உடனிருந்தார். சந்திப்பு தொடர்பான புகைப்படங்கள் சமூக வலைத் தளங்களில் வெளியாகியுள்ளது.

கடந்த காலங்களில் ஊழல் மோசடியில் ஈடுபட்டவர்களை தண்டிக்கப் போவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எச்சரித்துள்ளார்.

இதற்கான ஒப்ரேஷன்-2 நடவடிக்கை ஆரம்பித்துள்ளதாகவும் இதிலிருந்து மோசடியாளர்கள் தப்பித்துக் கொள்ள முடியாது என ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறான நிலையில், மகிந்த - சத்துரிக்கா சிறிசேனவின் சந்திப்பு தொடர்பில் கொழும்பு அரசியல் மட்டத்தில் அதிகம் பேசப்பட்டு வருகின்றன. (இ-7)

## சிவனொளிபாத மலையை தரிசிக்கச் சென்றவர்கள் கேரள கஞ்சாவுடன் கைது



(கொழும்பு)

சிவனொளி பாத மலைக்கு யாத்திரை மேற்கொண்ட 22 பேர் கேரள கஞ்சா போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன் தினம் சனிக்கிழமை மாலை 4 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை விசேட குற்றத்தடுப்புப் பிரிவினர் மேற் கொண்ட சுற்றிவளைப்பு தேடுதல் நட வடிக்கையில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.


இவர்களிடமிருந்து 57,000 மில்லிகிராம் கஞ்சா கைப்பற்றப் பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர்கள் அவிசாவளை, பாதுக்க மற்றும் ஹங்வெல்ல உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளை சேர்ந்தவர்களாவர்.

பொலிஸ் தடுப்பில் வைக்கப் பட்டுள்ள சந்தேகநபர்களை, விசாரணையின் பின்னர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமென பொலிஸார் தெரிவித்தனர்.

சிவனொளிபாத மலைக்கு யாத்திரைக்குச் செல்லும் பலர், இவ்வாறு கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களை எடுத்துச் செல்கின்றமை தொடர்பில் தொடர்ந்தும் கைது செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சிறுவர் அரங்கம்

## ஒற்றுமை



ஒரு வயல் வரப்பில் மூன்று கொக்குகள் ஒற்றுமையாக வாழ்ந்து கொண்டிருந்தன. எங்கு சென்றாலும், ஒற்றுமையுடன் சென்றன. இரை தேடச் சென்றாலும் கிடைத்த இரையை கூடி பகிர்ந்து உணவு உண்டு வாழ்ந்து வந்தன. இந்த ஒற்றுமை மற்ற விலங்கினத்துக்கும், பறவைகளுக்கும் பொறாமையாக கூட இருந்தது.

நரி ஒன்று அந்த மூன்று கொக்குகளையும் பிரித்தே தீருவேன் என்று சபதமிட்டபடி களம் இறங்கியது. ஒருநாள் மூன்று கொக்குகளும் வயல் வரப்பில் இரை தேடிக்கொண்டிருந்தன. நரி தன் சூழ்ச்சியை பயன்படுத்த திட்டமிட்டது.

அதன்படி முதலில் மூன்று கொக்குகளிடமும் நட்பை ஏற்படுத்திக் கொண்டது. சிறிது நாட்கள் சென்ற பிறகு, தனிமையில் இருந்த ஒரு கொக்கிடம் சென்றது. "கொக்கு நண்பரே! இவ்வளவு அழகாக இருக்கும் நீங்கள், அவலட்சணத்தின் ஒட்டு மொத்த உருவமாக திகழும் உங்கள் நண்பர் கொக்குகளுடன் எப்படி நட்பு பாராட்ட முடிகிறது? உங்கள் அழகுக்கும் அந்தஸ்துக்கும் இது ஏற்ற காரியமா?" என்று கேட்டது.

இதனை கேட்ட கொக்கிற்கு நரி சொன்னது உண்மையோ என்ற சந்தேகம் ஏற்பட, "என்ன செய்வது! எல்லாம் என் நேரம்" என்றது. வந்த காரியம் முடிந்த திருப்தியில் உடனே நரி அவ்விடம் விட்டு சென்றது. நரி இப்போது இரண்டாவது கொக்கிடம் சென்றது. "கொக்கு நண்பரே எப்படி உள்ளீர்?" என வினவியது நரி.

"நலம் நரி நண்பரே", என்று பதிலுக்கு கூறியது கொக்கு. இரண்டாவது கொக்குவிடம் இப்போது தன் சூழ்ச்சியை தொடங்கியது நரி. "கொக்கு நண்பரே! நீர் எவ்வளவு அறிவு உடையவர். எந்த குளத்தில் எவ்வளவு மீன்கள் உள்ளன என்பதை உம் அறிவால் கண்டு பிடித்து விடக் கூடியவர் நீர். அவ்வளவு அறிவு உடைய நீர் ஒன்றும் தெரியாத உங்கள் நண்பர் கொக்குகளுடன் நட்பு கொள்வதா?" என்று சூழ்ச்சியை கிளப்பிவிட்டது. நரி கூறிய வார்த்தைகளால் இரண்டாவது கொக்கிற்குள் சிந்தனை எட்டிப்பார்க்க நரி தான் வந்த வேலை முடிந்த திருப்தியில் கிளம்பிப் போனது.

இதோடு நில்லாமல் மூன்றாவது கொக்குவிடம் சென்றது நரி. வழியில் மூன்றாவது கொக்கிடம், "கொக்கு நண்பரே! நீங்கள் எவ்வளவு வீரம் படைத்தவர். இரை பிடிப்பதிலும்! பறப்பதிலும், எவ்வளவு வீரம் படைத்தவர். இவ்வளவு வீரம் உடைய ஒன்றுக்கும் உதவாத உமது மற்ற 2 நண்பர் கொக்குகளுடன் சுற்றித் திரிந்ததில் உமது வீரமே உமக்கு மறந்திருக்குமே" என்று கொக்கிடம் கேட்டது.

நரியின் சூழ்ச்சியால் அந்த மூன்று கொக்குகளுக்குள் நாளடைவில் பகைமையும், யார் பெரியவன் என்ற சண்டையும் ஏற்பட்டது. ஒன்றுடன் ஒன்று சண்டை போட்டுக் கொண்டன. இதனால் ஒற்றுமையுடன் இருந்த மூன்று கொக்குகள் தனித்தனியே பிரிந்தன.

நடந்ததை கவலையுடன் பார்த்துக் கொண்டிருந்த கிளி ஒன்று, மூன்று கொக்குகளையும் சந்தித்து நரியின் சதித் திட்டத்தை சொல்லி முடித்தது. அடப்பாவி! எங்கள் ஒற்றுமைக்கு உலை வைத்து விட்டானே! நல்ல நட்பை இழந்தோமே! என்று வருந்தின.

"முன்பின் தெரியாதவர் வந்து திடீரென தேவையில்லாமல் புகழ்ந்தால் அதற்கு மயங்கி விடக் கூடாது. அப்படி மயங்கும் பலவீனம் ஒருவருக்குள் இருந்தால் அவரை மற்றவர்கள் விரைவில் தங்கள் வசப்படுத்திவிட முடியும். உங்கள் மூவர் விடயத்தில் அதுதான் நடந்தது.

இனியாவது இப்படி திடீர் புகழ்ச்சிக்கு மயங்காதீர்கள்" என்று அறிவுறுத்தியது கிளி. அதற்கு பின் மூன்று கொக்குகளும் மறுபடியும் நட்புடன் இருந்து வந்தன.

## 22.01.2018 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1840-பிரித்தானிய குடியேற்றவாதிகள் நியூசிலாந்தை அடைந்தனர்.
- 1863-ரஷ்யாவின் ஆக்கிரமிப்புக்கு எதிராக போலந்து, லித்துவேனியா, பெலரஸ் ஆகிய நாடுகளில் கிளர்ச்சி வெடித்தது.
- 1889- கொலம்பியா கிராமபோன் வாசிங்டனில் தயாரிக்கப்பட்டது.
- 1899- ஆறு அவுஸ்திரேலிய காலனிகளின் தலைவர்கள் கூட்டமைப்பு பற்றி விவாதிக்க மெல்பேர்னில் கூடினர்.
- 1901- 64 ஆண்டுகள் ஆட்சியில் இருந்த விக்டோரியா மகாராணி தனது 81வது அகவையில் காலமானதை அடுத்து அவரது மூத்த மகன் ஏழாம் எட்வேர்ட் பிரித்தானியாவின் மன்னரானார்.
- 1905- சென் பீட்டர்ஸ்பேர்க்கில் சார் மன்னருக்கெதிராக தொழிலாளர்களின் எழுச்சி முறியடிக்கப்பட்டது.
- 1906- பிரிட்டிஷ் கொலம்பியாவின் வான்கூவர் தீவில் வலென்சியா என்ற பயணிகள் கப்பல் பாறைகளுடன் மோதியதில் 130 பேர் கொல்லப்பட்டனர்.
- 1941- இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய இராச்சியம் லிபியாவின் டோப்ருக் நகரை நாசிப் படைகளிடம் இருந்து கைப்பற்றியது.
- 1942- இரண்டாம் உலகப் போர்: சிங்கப்பூர் செண்பக விநாயகர் கோயில் ஜப்பானியரின் குண்டு வீச்சினால் பெரும் சேதமுற்றது.
- 1964- கென்னத் கவுண்டா வடக்கு றொடீசியாவின் முதலாவது அரசுத்தலைவரானார்.
- 1973- நைஜீரியாவின் கானோ விமான நிலையத்தில் போயிங் விமானம் ஒன்று வீழ்ந்து வெடித்ததில் 176 பேர் கொல்லப்பட்டனர்.
- 1992- சாயீரின் தேசிய வானொலி நிலையத்தை தீவிரவாதிகள் கைப்பற்றி அரசை பதவி விலகும்படி அறிவித்தனர்.
- 1999- இந்தியாவின் ஒரிசா மாநிலத்தில் ஆஸ்திரேலிய கிறிஸ்தவ மதப் போதகர் கிரஹாம் ஸ்டைன்ஸ் என்பவரும் அவரது இரு மகன்களும் இந்துத் தீவிரவாதிகளால் உயிருடன் எரிக்கப்பட்டனர்.
- 2003- பயணியர் 10 விண்கலத்துடன் கடைசித் தொடர்பு மேற்கொள்ளப்பட்டது.
- 2004- ஆர்க்குட் தொடங்கப்பட்டது.

### பிறப்புகள்

- 1561- பிரான்சிஸ் பேக்கன், ஆங்கிலேய மெய்யியலாளர், அரசியல்வாதி (இ. 1626)
- 1711- யொகான் பிலிப் பப்ரிசியஸ், செருமனிய மதப் போதகர், தமிழறிஞர் (இ. 1791)
- 1788- ஜார்ஜ் கோர்டன் பைரன், ஆங்கிலேயக் கவிஞர், நாடகாசிரியர் (இ. 1824)
- 1870- சேசாத்திரி சுவாமிகள், தமிழகச் சித்தர் (இ. 1929)
- 1891- அண்டோனியோ கிராம்ஷி, இத்தாலிய மெய்யியலாளர், அரசியல்வாதி (இ. 1937)
- 1898- செர்கீ ஐசென்ஸ்டைன், ரஷ்யத் திரைப்பட இயக்குநர் (இ. 1948)
- 1906- ராபர்ட் ஈ. ஒவார்ட், அமெரிக்க எழுத்தாளர், கவிஞர் (இ. 1936)
- 1909- ஊ தாண்ட், பர்மியக் கல்வியாளர், ஐ.நாவின் 3வது பொதுச் செயலர் (இ. 1974)
- 1922- தி. வே. கோபாலையர், தமிழகத் தமிழறிஞர் (இ. 2007)
- 1976- டி. எம். கிருஷ்ணா, தமிழகக் கர்நாடக இசைப் பாடகர்

### இறப்புகள்

- 1666- ஷாஜகான், முகலாயப் பேரரசர் (பி. 1592)
- 1897- ஐசக் பிட்மன், சுருக்கெழுத்து முறையைக் கண்டுபிடித்த ஆங்கிலேயர் (பி. 1813)
- 1901- ஐக்கிய இராச்சியத்தின் விக்டோரியா (பி. 1819)
- 1922- சே. ப. நரசிம்மலு நாயுடு, தமிழகத் தமிழறிஞர், பேச்சாளர், பதிப்பாளர் (பி. 1854)
- 1947- சுவாமி ஞானப்பிரகாசர், ஈழத்துப் பன்மொழிப் புலவர் (பி. 1875)
- 2014- அ. நாகேஸ்வர ராவ், தென்னிந்தியத் திரைப்பட நடிகர் (பி. 1924)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 100 | 100 | 80 | 100 |
| உருளைக்கிழங்கு | 80 | 100 | 50 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 140 | 100 | 120 | 160 | 140 |
| தக்காளி | 60 | 100 | 60 | 80 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 50 | 40 | 35 |
| கோவா | 60 | 40 | 60 | 60 | 45 |
| கரட் | 60 | 80 | 100 | 160 | 120 |
| பூசணி | 60 | 50 | 80 | 80 | 45 |
| புடோல் | 80 | 50 | 80 | 100 | 80 |
| வாழைக்காய் | 60 | 50 | 80 | 120 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 350 | 250 | 300 | 250 |
| பெரிய வெங்காயம் | 160 | 180 | 120 | 160 | 140 |
| பாகற்காய் | 180 | 150 | 140 | 200 | 160 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 120 | 160 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | 50 | 80 | 50 |
| பயற்றங்காய் | 160 | 100 | 140 | 120 | 200 |
| லீக்ஸ் | 180 | 100 | 240 | 240 | 220 |
| பீற்றூட் | 60 | 100 | 80 | 80 | 80 |
| கறிமிளகாய் | 150 | 100 | 140 | 200 | 140 |
| முருங்கைக்காய் | 500 | 100 | 800 | 800 | 1400 |
| போஞ்சி | 150 | 100 | 160 | 120 | 100 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 80 | 70 | 80 |
| கீரை - 1பிடி | 20 | 100 | 30 | 40 | 30 |
| தேசிக்காய் | 40 | 20 | 30 | 40 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 100 | 80 | 75 | 90 |
| இராசவள்ளி | 150 | 100 | 160 | 200 | 150 |
| வெங்காயப்பூ | 160 | 100 | 180 | 240 | 120 |
| முள்ளங்கி | 30 | 100 | 60 | 60 | 50 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 50 | 20 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 20 | 60 |
| ஈரப்பலா | 100 | 50 | 50 | 80 | — |

எமது உண்மையான சேமிப்பு வங்கி எது? ஒழுக்கம்தான்! ஒழுக்கம் மட்டுமே.

~ ஜிக் ஜில்லர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## உயர்ந்த பதவிகளில் மேன்மக்கள் இல்லையென்றால்...

*"...கெட்டாலும் மேன்மக்களே சங்கு சுட்டாலும் வெண்மை தரும்"* என்கிறது ஒளவையாரின் மூதுரை. இதன் அர்த்தம் ஆழமானது.

மேன்மக்கள் என்று போற்றப்படுவோர் என்றும் உயர்ந்த பண்புடையவர்கள்.

ஆக, உயர்ந்த பண்பும் பக்குவமும் யாரிடமெல்லாம் இருக்கிறதோ அவர்கள் மேன்மக்கள் என்ற வகுதிக்குள் அடக்கப்படுவர்.

இவ்வாறான மேன்மக்கள் உயரிய பதவிகளில் இருக்கும்போது அவர்கள் எப்போதும் மற்றவர்களை மதித்து தமது பணியை முன்னெடுப்பார்கள்.

இத்தகையவர்களிடம் நேர்மை, தாளாண்மை, இரக்கம், ஈகை என அனைத்தும் அதீதமாக இருக்கும்.

முன்கோபம், சினம், ஆத்திரப்படுதல், இன்னாச்சொல் என்ற தீய குணங்களுக்கு அறவே இடமிருக்காது. இவை மேன் மக்களின் சால்பு.

எனவே மேன்மக்களைப் பதவியில் இருத்துவது அல்லது பதவிக்கு வந்த பின்பேனும் உயர்ந்த பண்பாட்டுக்கு ஆட்படுவது என்ற விடயங்கள் நடந்தாக வேண்டும்.

இது விடயத்தில் பொதுமக்களின் வகிபங்கு என்பது காத்திரமானது. குறிப்பாக அரசியல் சார்ந்த பதவிகளில் மேன்மக்களைத் தெரிவு செய்வது பொதுமக்களின் கடமையாகும்.

இங்கு மேன்மக்கள் என்று ஒளவையார் குறித்துரைப்பது இன, மத, மொழி, சமய, சாதி பேதங்களை அல்ல.

மாறாக ஒருவரிடம் இருக்கக்கூடிய உயர்ந்த குணம்; உயர்ந்த பண்பாடு; உயர்ந்த ஒழுக்கம் இவற்றை மையப்படுத்தியே மேன்மக்கள் என்பதை ஒளவையார் வரையறுக்கிறார்.

அண்மையில் ஊவா மாகாண முதலமைச்சர், பெண் அதிபர் ஒருவரை தன்முன் மண்டியிட வைத்து கரம் கூப்பி மன்னிப்புக் கேட்க வைத்துள்ளார்.

இந்தச் சம்பவம் இப்போது நாடுபூராகவும் செய்தியாகப் பரவி பலரையும் அதிர்ச்சிப்படுத்தியுள்ளது.

ஒரு மாகாணத்தின் முதலமைச்சர், பெண் அதிபரை தன் முன் மண்டியிட வைத்து மன்னிப்புக் கேட்க வைத்தார் என்றால், அவரின் குண இயல்பு, அவரின் அடிப்படைப் பண்பு எவ்வாறாக இருக்கும் என்பதைப் புரிந்து கொள்வது கடினமல்ல.

ஈவு, இரக்கம், மனிதநேயம்மிக்க எவரும் இந்தச் செயலை மன்னிக்க மாட்டார்கள். முன்பு மேர்வின் சில்வா என்பவர் ஒரு அரச உத்தியோகத்தரை மரத்தில் கட்டி வைத்தார்.

இப்போது ஊவா மாகாண முதலமைச்சர் பெண் அதிபரை மண்டியிட்டு மன்னிப்புக் கேட்க வைத்துள்ளார் எனில் இலங்கையில் சனநாயகம் இருக்கிறதா? என்ற கேள்வி எழவே செய்யும்.

எதுஎவ்வாறாயினும் ஊவா மாகாண முதலமைச்சரைப் பதவி விலகச் செய்யாவிட்டால் சின்னத்தனமான செயல்கள் மலியவே செய்யும்.

# ரூ.2 கோடி வாங்கியதை சிவசக்தி ஆனந்தனால் ஆதாரத்துடன் உறுதிப்படுத்த முடியுமா?

## சிறீதரன் சவால்

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசிடம் இருந்து இரண்டு கோடி ரூபாய்களை வாங்கியதாக நேற்று முன் தினம் வவுனியாவில் சிவசக்தி ஆனந்தன் எம்.பி தெரிவித்திருக்கிறார்.

எனவே நான் அவர்களிடம் சவால் விடுகின்றேன், முடிந்தால் அதனை ஆதாரத்துடன் நிரூபிக்க முடியுமா? என சிறீதரன் எம்.பி கேட்டுள்ளார்.

நேற்று கிளிநொச்சி வட்டக்கச்சி பொதுச் சந்தையில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியாவில், உதய சூரியன் சின்னத்தில் போட்டியிடுகின்ற ஈபிஆர்எல்எப் எந்த வட்டாரத்திலும் வெல்ல மாட்டார்கள்.

இந்த இடத்தில் நீங்கள் அதனை குறித்து வைத்துக் கொள்ளுங்கள் எனத் தெரிவித்த அவர், எமது தமிழ் மக்களை ஈபிஆர்எல்எப் கொலை செய்தமையினையும், கொன்று குவித்தமையினையும் மக்கள் மறந்து விடமாட்டார்கள் என்றும் தெரிவித்தார்.

அத்தோடு வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களைக் கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக போராட்டத்தை மேற்கொண்டது சிவசக்தி ஆனந்தன்தான் எனவும் குற்றம் சாட்டினார்.

மேலும் நாங்கள் இந்த தேர்தலில் இடைக்கால அறிக்கைக்கு ஆணை வழங்குங்கள் என்று மக்களிடம் கோரவில்லை. இது அதற்கான தேர்தலும் அல்ல. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் எங்காவது இடைக் கால அறிகைக்கு ஆணை கோரி இந்த தேர்தலில் வாக்களியுங்கள் என்று கோரியுள்ளனரா? அதனை உறுதிப்படுத்த முடியுமா? எனவும் கேள்வி எழுப்பிய அவர்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமே ஒரு இலக்கு நோக்கி பயணித்துக் கொண்டிருக்கிறது என்றும் தெரிவித்தார். (மு-312)

## வெளிநாட்டு இராஜதந்திரிகளால்

# அமைச்சரவைக் கூட்டம் இவ்வாரம் இல்லை-கயந்த

இந்த வாரத்தில் அமைச்சரவைக் கூட்டம் நடத்தப்படாது என தெரிவிக்கப்படுகிறது.

வாராந்தம் செவ்வாய்க் கிழமைகளில் அமைச்சரவைக் கூட்டம் நடத்தப்படுவது வழமையானதாகும்.

எனினும், நாளை செவ்வாய்க்கிழமை 23ஆம் திகதி அமைச்சரவைக் கூட்டம் நடத்தப்படாது என அமைச்சரவைய்யின் இணைப் பேச்சாளர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு இராஜதந்திரிகள் சிலர் இலங்கைக்கு விஜயம் செய்வதனால் இவ்வாறு அமைச்சரவைக்கூட்டம ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (இ-7)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




### வணக்கம் சொல்வதன் நோக்கம் என்ன?

பண்டையக் காலம் முதல் ஒருவர் மற்றொருவரின் வீட்டிற்குச் செல்லும் போது வணக்கம் சொல்லம் பழக்கம் இருந்து வந்துள்ளது. அது ஒரு ஆசாரமாகும். வணக்கம் என்பதற்கு உன்னை நான் வணங்குகிறேன் என்பது பொருளாகும். அனைத்து மனிதர்களும் ஒரே மாதிரி இறை அம்சம் பெற்றவர்கள். அனைவரது உணர்வும் ஆத்மாவும் ஒரே மாதிரி தான்.

அது இறைவனாகும். நாம் ஒருவரை வணங்குகிறோம் என்றால் அவருக்குள் உள்ள இறைவனை வணங்குகிறோம் என்ற அர்த்தமாகும். இறைவன் எப்பொழுதும் அனைவராலும் வணங்கப்படுபவன் அல்லவா? எனவே இறைவனை வணங்க வேண்டியது அனைவரது கடமையாகும். இதை உணர்ந்துள்ளவர்கள் அனைவரும் மற்றவர்களைக் காணும் போது வணங்கி வணக்கம் சொல்கிறார்கள். (தொடரும்)

# மின்சாரம் தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய் காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை கிளிநொச்சி பிரதேசத்தில் உருத்திரபுரம், ஜெயந்தி நகர் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் கோவில் குளம், ஆச்சிபுரம், சமணன் குளம், மகாமயிலங்குளம், மருதநகர், எல்லப்ப மருதங்குளம், பொயகூமர சங்குளம், ஆசிகுளம், சிதம்பரபுரம், சாந்த சோலை கிராமம், கொக்கிளிய, அக்போபுர, மதவு வைத்தகுளம், தவசிக் குளம், குட்செட்றோட், தோணிக்கல், பண்டாரிக் குளம ஆகிய பிரதேசங்களிலும மின் தடைப்படும். (இ-9)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## குண்டலினி யோகம்



நாம் உணர்ந்து உலகிற்கு உணர்த்துவது எளியமுறைக் குண்டலினி யோகம் என்பதாகும். எளியமுறைக் குண்டலினி என்பது அறிவின் பதிவைக் கொண்ட உயிர்ச் சக்தியை மேலே நோக்கி எழச் செய்து அதிலே ஒன்றி நின்று இயற்கை இரகசியங்களை உணர்ந்து தன்னிலை உணரும் பயிற்சியாகும். உயரே சொல்லாமல், கீழ்நோக்கிப் போகா விட்டால் மேல்நிலை அனுபவ உணர்வு பெறுவது போய், தாழ்ந்த உணர்வுகளே தலையெடுத்து ஓங்கும் நிலை ஏற்படும். அதைத் தான் இன்று பெரும்பாலும் காண்கிறோம். அதனால் தான் சிக்கல்கள் ஏற்படுகின்றன. மனிதனின் இந்தப் பழக்கத்தால் அவனின் உயிர்ச்சக்தி கீழ் நோக்கிய இடத்தில். அதாவது மூலாதாரத்தில் தேங்கிக் கிடக்கின்றது குண்டலித்து உள்ளது. இதனையே குண்டலினி சக்தி என்கிறோம். சக்தி என்ற உடன் அது உடல் எங்கும் நிலவுவதாயிற்றே என்ற எண்ணம் எழலாம். எங்கும் இயங்கும் சக்திக்கு ஒரு இயக்க மையம் வேண்டும் அல்லவா? இந்த இயக்க மையமே மூலாதாரம் எனப்படும். எனவே. இயக்க மையத்தை முறையாக உசுப்பி விடும்போது மிகச் சிறப்பாகச் செயல்படுவது இயல்பு. அதைத்தான் எளியமுறைக் குண்டலினியோகப் பயிற்சி என்கிறோம். இந்த உயிர்ச்சக்தி உடலின் மற்ற எல்லா இடத்திலும் பரவி இருப்பினும் அதற்கு ஒரு இயக்க மையம் உண்டு. இரத்தம் உடல் முழுவதிலும் பரவி இருந்தாலும் இருதயத்தை இயக்க மையமாகக் கொண்டிருப்பதனைப் போல. காற்று உடல் முழுவதிலும் பரவி இருப்பினும் நுரையீரலை இயக்க மையமாகக் கொண்டிருப்பதனைப் போல. உயிர்ச் சக்திக்கும் இயக்க மையம் இருக்கத்தானே வேண்டும். உயிருக்கு இயக்க மையங்கள் பல உள்ளன. அத்தகைய மையங்கள் உடம்பில் ஆறு இடங்களில் இருப்பதாக மெய்யுணர்வாளர்கள் உணர்ந்து உணர்த்தி உள்ளனர். அவைகளின் அடி மட்டத்தில் இருக்கும் மையம் மூலாதாரமாகும்.

ஒவ்வொரு மையத்திலும். உயிர்ச்சக்தியை இயக்கிவிட்டால் அதற்கேற்ற பலன் ஏற்படும். மேலும் கீழே இருந்து மேலே போகப் போக. பலன்மிகும். இவ்வாறு இயக்கிவிடப்படும் உயிர்ச்சக்தியால் உடலில் உள்ள செல்களை ஒழுங்குபடுத்திச் செயல்படுத்த இயலும். உயிர்ச் சக்தியானது உடலின் செல்களுக்கு ஒத்த முறையில் அமையவில்லையென்றால் உடல் நோய்கள். மன நோய்கள் போன்றவை ஏற்படும். எனவே. ஆற்றல் மிக்க உயிர்ச்சக்தியைச் சேர்க்கவும். பாதுகாக்கவும் அறிந்திருக்க வேண்டும். இதனைத்தான் ஆன்மீக அறிவு என்கின்றனர். இந்தத் தெளிவையும் பயிற்சியையும் நல்குவதே எளிய முறைக் குண்டலினியோகம் என்பது. உயிர்ச் சக்தியை உணர்ந்து அதன் இயக்கத்தை நெறிப்படுத்துவதன் மூலம். அதன் படர்க்கை நிலையான மனதையும் சீரமைத்துக் கொள்ள இயலும்.

# அபினாஸ் - கபில்ராஜ் - யதுசன் சிறப்பாட்டம்
# சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி அசத்தல் வெற்றி


கபில்ராஜ்


யதுசன்


அபினாஸ்

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறும், பாடசாலைகளின் 19 வயது. பிரிவு - 2 அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இரண்டு நாட்கள் மட்டுப்படுத்தப்படாத ஓவர்களைக் கொண்டதாக இந்தச் சுற்றுப் போட்டியின் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

மேற்படி போட்டியொன்று கேகாலை வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற போது, சென். ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து கேகாலை வித்தியாலய அணி மோதியது.

நாணயச்சுழற்சியில்வென்ற கேகாலை வித்தியாலய அணி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது. முதல் இனிங்ஸில், 55.1 ஓவர்களை எதிர்கொண்ட கேகாலை அணி, மதுசன் குணசிங்கவின் சதத்தின் உதவியுடன் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 224 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் மதுசன் குணசிங்க 113 ஓட்டங்களையும், வி.தராக்க 48 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில்சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி சார்பாக, முர்பின் அபினாஸ் 43 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 4 விக்கெட்களையும், கனகரட்ணம் கபில்ராஜ் 3 விக்கெட்களையும், ரி.டினேசன் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் தமது முதலாவது இனிங்ஸிஸைத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய சென்.ஜோன்ஸ்கல்லூரி அணி, முதல்நாள் ஆட்டநேர முடிவில் 163 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களை இழந்து பலமான நிலையில் இருந்தது. எனினும், இரண்டாம் நாள் ஆட்டத்தில் விரைவாக விக்கெட்களை இழந்து, 61.4 ஓவர்களில் 215 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்களையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் முர்பின் அபினாஸ் 88 ஓட்டங்களையும், ரி.டினேசன் 28, என்.சௌமியன் 25 ஓட்டங்களையும், டி.செரோபன் 21 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் கேகாலை அணி சார்பாக, தரிந்து சண்டருவான் 73 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களையும், உமாசா தாருக்க, சசின் நிமேஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

9 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்த கேகாலை அணிக்கு போட்டி சரியாக அமையவில்லை. கபில்ராஜ், யதுசன் மற்றும் அபினாஸின் பந்து வீச்சுக்களுக்கு முகங்கொடுக்க முடியாமல், 38.1 ஓவர்களில் 84 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்களையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் சந்துரு மிசக்க 20 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

பந்துவீச்சில் சென்.ஜோன்ஸ் அணி சார்பாக, கனகரட்ணம் கபில்ராஜ் 40 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களையும், வசந்தன் யதுசன் 3 விக்கெட்களையும், முர்பின் அபினாஸ் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

94 ஓட்டங்கள் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன், இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்த சென்.ஜோன்ஸ் அணிக்கு, அதன் அணித் தலைவர் வசந்தன் யதுசன் இலகுவான வெற்றியைப் பெற்றுக்கொடுத்தார். 22 ஓவர்களில் 2 விக்கெட்களை மாத்திரம் இழந்து சென். ஜோன்ஸ் அணி வெற்றியை அடைந்தது. துடுப்பாட்டத்தில் வசந்தன் யதுசன் ஆட்டமிழக்காமல் 66 ஓட்டங்களையும், டி.செரோபன் ஆட்டமிழக்காமல் 18 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

இதற்கு முன்னர் கண்டி கிங்ஸ்வூட் கல்லூரி மற்றும் கண்டி, ஸ்ரீ பிரியரத்ன மகா வித்தியாலயம் ஆகிய அணிகளை சென்.ஜோன்ஸ் அணி வென்றிருந்தது. இந்த வெற்றியுடன் தொடர்ச்சியாக மூன்று வெற்றிகளை சென். ஜோன்ஸ் அணி பெற்றுள்ளது. (க-26)

# சமபோச வெற்றிக்கிண்ணம்
## தேசிய சம்பியன் பட்டத்தை வென்றது பண்டத்தரிப்பு பெண்கள் பாடசாலை
## மூன்றாமிடம் மகாஜனா அணிக்கு

சமபோச வெற்றிக்கிண்ணத்துக்கான கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் 14 வயதுப்பிரிவில் யாழ்ப்பாணம் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி சம்பியனாகியது. அதேபிரிவில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அணி மூன்றாமிடத்தைப் பெற்றுக்கொண்டது.

சமபோச வெற்றிக்கிண்ணத்துக்கான தேசிய மட்டப் பாடசாலைகளின் 14 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டி கொழும்பில் நடைபெற்று வந்தது. இந்தச் சுற்றுப்போட்டியின் அரையிறுதிக்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரண்டு பாடசாலைகளான பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியும், தெல்லிப்பழை மகாஜனாக் க்ல்லூரி அணியும் தகுதி பெற்றன.

முதலாவது அரையிறுதியாட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அணியை எதிர்த்து குருநாகல் மலியதேவா பாலிக மகா வித்தியாலய அணி மோதியது. இதில் 2:1 என்ற கோல்கள் கணக்கில் மலியதேவா மகா வித்தியாலய அணி வென்றது.

இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியை எதிர்த்து மொனராகலை நன்னபுரவ மகா வித்தியாலயம் மோதியது. இதில் பண்டத்தரிப்பு பெண்கள் பாடசாலை அணி, 4:0 என்ற கோல்கள் கணக்கில் வென்றது.

தொடர்ந்து இறுதியாட்டம் கடந்த 20 ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பு சிற்றி லீக் மைதானத்தில் நடைபெற்றது. இதில் குருநாகல் மலியதேவா பாலிக மகா வித்தியாலய அணியை எதிர்த்து பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி மோதியது. முதற்பாதியாட்டத்தில் எவ்வித கோல்களும் பதிவு செய்யப்படவில்லை. இரண்டாவது பாதியாட்டத்தின் 14 ஆவது நிமிடத்தில் பண்டத்தரிப்பு அணியின் எஸ்.சயந்தினி முதலாவது கோலை அடித்தார். தொடர்ந்து 21 ஆவது நிமிடத்தில் இரண்டாவது கோலைப் பதிவு செய்த சயந்தினி வெற்றியை உறுதி செய்தார். முடிவில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி, 2:0 என்ற கோல்கள் கணக்கில் வென்று, தேசிய சம்பியனாகியது.





இந்தச் சுற்றுப்போட்டியில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியின் தலைவி, ர.கிருசாந்தி 23 கோல்களைப் பதிவு செய்திருந்தமையும் சுட்டிக் காட்டத்தக்கது.

மூன்றாமிடத்துக்கான ஆட்டம் ஒன்றில் தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி அணியை எதிர்த்து மொனராகலை நன்னபுரவ மகா வித்தியாலய அணி மோதியது. ஆட்டத்தின் 12 ஆவது நிமிடத்தில் மகாஜனாக் கல்லூரியின் ச.நிலோஜிகா கோல் ஒன்றை அடித்தார். முதற்பாதியாட்டம் அந்தக் கோலுடன் நிறைவடைந்தது. இரண்டாவது பாதியாட்டத்தில் மேலதிக கோல்கள் பதிவுசெய்யப்படவில்லை. முடிவில் மகாஜனாக் கல்லூரி அணி, 1:0 என்ற கோல் கணக்கில் வென்று, மூன்றாமிடத்தைத் தட்டிச் சென்றது. (க-26)

# வலி.மேற்கு பிரதேச சபையின் கயிறு இழுத்தல் போட்டி



வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் விளையாட்டுப் போட்டிகளில் ஆண்கள் பெண்களுக்கான கயிறு இழுத்தல் போட்டிஎதிர் வரும் மாதம் (11.02.2018) அன்று நடத்த தீர்மானிக்கபட்டு இருந்தது.

எனினும் தவிர்கமுடியாத காரணத்தால் இப் போட்டி இம்மாதம் 27.01.2018 எதிர் வரும் சனிக்கிழமை 8.30 மணிக்கு வட்டுக்கோட்டை மைதானத்தில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவே கழகங்கள் உரிய நேரத்திற்கு வருகை தருமாறு அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## யாழ்.பிரேதேச செயலகம் உதைபந்தாட்ட முடிவுகள்

யாழ்.பிரதேச செயலகத் திற்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டப்போட்டி கடந்த சனிக்கிழமை சென். அன்ரனிஸ் விளையாட்டு கழக மைதானத்தில் நடைபெற்றது.

காலை ஒன்பது மணிக்கு ஆரம்பமாகிய போட்டியில் விண்மீன்அணி சமுகம் தராத காரணத்தினால் வசந்தபுரம் விளையாட்டுக்கழகத்திற்கு வெற்றி வழங்கப்பட்டது.

மற்றுமொரு ஆட்டத்தில் யுனைட்டட் அணி வருகை தராததால் சென்.நீக்கிலஸ் அணிக்கு வெற்றி வழங்கப் பட்டது.

தொடர்ந்து கலைவாணி வினையாட்டுக்கழகத்தினை எதிர்த்து குருநகர் சென். லூட்ஸ் அணி மோதியத. இப்போட்டியிலவ் 03-02 என்ற கோல் கணக்கில் கலைவாணி அணி வெற்றி பெற்றது. தொடர்ந்து கென் லைன்ஸ் விளையாட்டு கழகத்தினை எதிர்த்து முத்தமிழ் விளையாட்டுக்கழகம் ஒரு கோல்பதிவு செய்துவெற்றியைச் சுவவீகரித்தது. (க-106,107)

## விறுவிறுப்பானது இரண்டாவது பாதியாட்டம்
# அடுத்தடுத்துக் கோல் அடித்து
## மூன்றாமிடத்தைப் பெற்றது சென்.லூட்ஸ்




இறுதி நேர தாக்குதல் ஆட்டம் மூலம் போட்டியின் போக்கையே திருப்பி, இளவாலை சென்.லூட்ஸ் அணி மூன்றாமிடத்தைத் தட்டிச் சென்றது.

உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக்கழகம், கால்பந்தாட்ட அணிகளுக்கிடையில் அணிக்கு 7 பேர்கொண்ட கால்பந்தாட்ட சுற்றுப்போட்டியொன்றை தமது விளையாட்டுக்கழக மைதானத்தில் நடத்தி வருகின்றது. மொத்தமாக 48 அணிகள் பங்குபற்றிய இந்தச் சுற்றுப்போட்டியில் முதற்சுற்று ஆட்டங்கள் விலகல் முறையில் இடம்பெற்றன. அதிலிருந்து, 8 அணிகள் தெரிவு செய்யப்பட்டு, அவற்றுக்கிடையில் லீக் முறையில் ஆட்டங்கள் இடம்பெற்றன.

அதிலிருந்து அரையிறுதி ஆட்டத்துக்கு அணிகள் தெரிவாகின. அரையிறுதி ஆட்டத்தில் தோல்வியடைந்த இளவாலை சென்.லூட்ஸ் மற்றும் பலாலி விண்மீன் அணிகளுக்கிடையிலான மூன்றாமிடத்துக்கான ஆட்டம் 20 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது.

ஆட்டம் தொடங்கியதும் விண்மீன் அணி தனது ஆதீக்கத்தை மைதானத்தில் நிலைநிறுத்தியது.

முதற்பாதியாட்டத்தில் அடுத்தடுத்து 2 கோல்களை அடித்த விண்மீன் அணி, முதற்பாதியாட்டத்தில் 2:0 என்ற கோல்கள் கணக்கில் முன்னிலையில் இருந்தது.

எனினும், இரண்டாவது பாதியாட்டம் முழுமையாக மாற்றமடைந்தது. சென். லூட்ஸ், ஆட்டத்தை கட்டுப் பாட்டுக்குள் வைத்திருந்து, அடுத்தடுத்து கோல்களை இறக்கி விண்மீன் அணியை திக்குமுக்காடச் செய்தது. தொடர்ச்சியாக 3 கோல்களை அடித்த சென்.லூட்ஸ் அணி தமது வெற்றியையும் உறுதி செய்தது. முடிவில், சென்.லூட்ஸ் அணி, 3:2 என்ற கோல்கள் கணக்கில் வென்று மூன்றாமிடத்தைப் பெற்றது. (க-26)

## தமிழ்த் தேசிய...

மொன்றில் கட்டுரை எழுதியுள்ளதாகவும் இது சட்டத்திற்கு முரணான செயல் என்றும் தெரிவித்து தமிழ்த் தேசியப் பேரவையும் முறைப்பாடு ஒன்றை யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்துள்ளது.

இது இவ்வாறு இருக்க நேற்றையதினம் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தனது வாக்குமூலத்தை பதிவு செய்தார். (மு-1)

## தபால் மூலமான...

ன்றது.

தபால் மூலம் வாக்களிப்பதற்காக சுமார் 5 இலட்சத்து 60 ஆயிரம் பேர் இம்முறை தகுதி பெற்றுள்ளனர்.

பொலிஸ் அதிகாரிகள், தேர்தல் அலுவலக மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலக அதிகாரிகளுக்கான தபால்மூல வாக்களிப்பு இன்று இடம்பெறும் என்று தேர்தல்கள் ஆணைக் குழுத் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இதேவேளை, 25ஆம் மற்றும் 26 ஆம் திகதிகளும் தபால்மூல வாக்குப்பதிவுகள் இடம்பெறவுள்ளன.

குறித்த தினங்களில் தபால்மூல வாக்கை பதிவுசெய்யாதவர்களுக்கு எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் மற்றும் இரண்டாம் திகதிகளில், வாக்குப்பதிவை மேற்கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்படும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் தெரிவித்துள்ளார்.(மு-1)

## கடற்படையின்...

ளிடத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஊர்காவற்றுறை புருத்தியடைப்பு கடற்கரை வீதியில் கடற்படையினர் பொதுமக்களின் காணிகளை அபகரிக்கவுள்ளனர். அதில் ஜே/ 50 கிராம சேவகர் பிரிவில் உள்ள 2 ஏக்கர் காணி ஒன்றை கடற்படையினரின் முகாம் அமைப்பதற்கு சுவீகரிக்கப்படவுள்ளது.

இந்த நிலையில் குறித்த காணியை அளவிடுவதற்கு எதிர்வரும் 25ஆம் திகதி நில அளவையாளர்கள் வருகை தரவுள்ளதாக குறித்த காணியின் உரிமையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் மனமுடைந்த குறித்த உரிமையாளர் தனது காணியை மீட்டுத்தருமாறு அனைத்து அதிகாரிகளிடத்திலும் முறையிட்டிருந்தேன். எனது கோரிக்கைகள் எதையும் செவிசாய்க்காமல் எனது காணியை சுவீகரிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

எனவே இந்த காணி அளவீட்டை நிறுத்தி கடற்படையினரிடம் இருந்து எனது காணியை பெற்றுத்தர உதவுமாறு சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளுக்கும் மகஜர் அனுப்பியுள்ளார். தனது காணியை பெற்றுத்தராத விடத்து எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவேன் எனவும் தெரிவித்துள்ளார். (மு- 9)

## 50 பாடசாலை மாணவர்...

ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்தைச் சேர்ந்த கன்சோ சிறிலங்கா ஜனகட என்ற நிறுவனத்தின் நிதியுதவியில் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள வறுமைக் கோட்டுக்குட்பட்ட தெரிவுசெய்யப்பட்ட 50 பாடசாலை மாணவர்களுக்கு மாதாந்தம் 5000 ரூபா வீதம் ஐந்து வருடங்களுக்கு புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு நேற்று பலாலி பாதுகாப்பு படைத் தலைமையகத்தில் இடம்பெற்றது. அதில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில், யுத்தம் இடம் பெறுவதற்கு முன்னர் வடக்கு, தெற்கு மக்கள் மிகவும் ஒற்றுமையுடனும், சினேகபூர்வமாகவும் வாழ்ந்து வந்தோம். விடுமுறையின் போது வடக்கு மக்கள் தெற்குக்கும் தெற்கு மக்கள் வடக்குக்கும் சினேகபூர்வமான பயணங்களை மேற்கொண்டிருந்தோம். அதே வேளை யுத்தத்திற்கு பின்னர் தற்போதும் அவ்வாறான சமத்துவ நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த முப்பது வருடங்களாக இடம்பெற்ற யுத்தம் பயங்கரவாதிகளுக்கு எதிரானதே தவிர தமிழ் மக்களுக்கு எதிரானது அல்ல.

யுத்தம் நிறைவடைந்து 9 ஆண்டுகள் பூர்த்தி அடைந்துவிட்டது. இனியும் அந்த சம்பவங்களை நினைத்து வருந்தாமல், அதன் பாதிப்புகளை நினைத்து எமது சகோதர தொடர்புகளை இழக்காமல் இனிவரும் காலத்தில் சகோதரத்துவத்துடன் காலத்தை இனிமையாக மாற்ற வேண்டும்.

முன்னைய காலத்தில் இருந்த வைத்திய ர்கள் மற்றும் அரச அதிகாரிகள் என பல் வேறு துறைகளில் பெரிய பதவிகளில் இருந்தவர்கள் பலர் தமிழ் இனத்தை சார்ந்தவர்கள் தான்.

பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் நிலையை உணர்ந்து அவர்களுக்கு எந்த வழியில் உதவ முடியுமோ அந்த வழியில் உதவிகளை மேற்கொள்வோம்.

எமது நாட்டிலுள்ள யுத்தத்தால் பாதிக்கப்பட்ட கல்வியில் பின்தங்கிய பிள்ளைகளை கல்விக்கான உதவிகளை வழங்கி அவர்களை கல்விமான்களாக உருவாக்குவதன் மூலம் நாட்டில் மீண்டும் ஓர் யுத்தம் நிகழாமல் இருப்பதற்கு வழிகோலமுடியும்.

எமது நாட்டில் திறமைகள் இடம்பெறாது இருக்க இளைஞர்களின் கல்வியை மென்மேலும் வளர்ப்பதற்கு நாம் பல உதவிகளை செய்து வருகிறோம். மாணவர்கள் தமக்கு கிடைக்கும் வசதிகளை பயன்படுத்தி கல்வியில் முன்னேறி நாட்டின் ஒற்றுமைக்கு உதவ வேண்டும்.

மேலும் கடந்த காலங்களில் நாட்டில் இடம்பெற்றதைப் போன்ற யுத்தம் மீண்டும் இடம்பெறாமல் இருப்பதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என மேலும் தெரிவித்தார்.

குறித்த நிதியுதவி அளித்த பெரும்பான்மை இனத்தவரை முன்னுதாரணமாகக் கொண்டு ஏனையோரும் இவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம் என்பது குறிப்பிடத்தக்கது. (மு-9)

## கூட்டமைப்பின்...

காங்கிரஸின் செட்டிகுளம் பிரதேச சபைக்கான பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு உரையாற்றியுள்ளார்.

இது குறித்து அவர் அங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில்,

எமது விடுதலை போராட்டமானது பயங்கரவாதமாக சித்தரிக்கப்பட்ட போது இந்த போராட்டத்தை ஒரு விடுதலைப்போராட்டமாக வெளியுலகிற்கு கொண்டு சென்றதோடு இப்போராட்டத்தை பயங்கரவாதமாக கொச்சைப்படுத்த எண்ணிய தரப்பிற்கு சவாலாகவும் இருந்தது.

ஆயுதப் போராட்டம் பலம் பொருந்தி வந்த காலத்தில் ஜனநாயக தலைமை என்னுடைய தந்தையின் கைகளிற்கு மாறிவிடும் என்ற பயத்தில் அவரை சுட்டுக்கொலை செய்தார்கள். ஆகவே எங்களிற்கு தியாகம் என்றால் என்ன என்று தெரியும்.

இலட்சக்கணக்கான மக்கள் உயிரைக் கொடுத்தது ஒற்றையாட்சிக்கு ஆதரவளிப்பதற்காக அல்ல. அவ்வாறெனின் எப்பொழுதே இலட்சக்கணக்கான மக்களைக் காப்பாற்றியிருக்கலாம்.

இன்று இப் போராட்டம் சரணடையாது உயிர்போனாலும் பரவாயில்லை என்று முள்ளிவாய்க்காலில் போய் முடிந்தமையானது எட்டு வருடங்கள் கழித்து நாங்கள் இந்த இலட்சியத்தை கைவிடுவதற்காக அல்ல.

எங்களிற்கென்று ஒரு அணுகுமுறை இருக்கிறது. நாங்கள் சர்வதேச அரசியலை படித்தவர்கள். எங்களது மக்களது உரிமைகளை எவ்வாறு பெற்றுக்கொள்வது தொடர்பாக ஒரு திட்டம் எம்மிடம் இருக்கின்றது. உங்களுக்கு முழங்கால் இட்டுக் கெஞ்சிக்கொண்டு போவதுதான் உங்கள் பாதையென்றால் நீங்கள் இதை விட்டு போங்கள். நாம் பார்த்துக் கொள்கிறோம்.

எங்களது மக்களை ஏமாற்றி அழிக்காதீர்கள். தியாகத்தின் உச்சமான இந்த மண்ணில் இருந்து கேட்கின்றேன் நடக்கப்போகின்ற சதித்திட்டங்களுக்கு துணை போகாமல் உரிமையை பெற்றெடுப்பதற்கான பங்காளர்களாகவும் செயற்பாட்டாளர்களாகவும் முன்வாருங்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.(மு-1)

# இரட்ணஜீவன் ஹூல் விடுத்த பத்திரிகைகளுக்கான அறிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசியப் பேரவையின் யாழ். மாநகர முதன்மை வேட்பாளரான சட்டத்தரணி வி. மணிவண்ணன் தன்னை எச்சரிக்கும் பாணியில் தமது கட்சியின் தேர்தல் விஞ்ஞாபன வெளியீட்டின் போது உரையாற்றியதாக தேர்தல் ஆணைக்குழுவின் அங்கத்தவர் கா.இரத்தினஜீவன் ஹூல் தெரிவித்து பத்திரிகை வெளியீடு ஒன்றை மின்னஞ்சல் மூலமாக வலம்புரிக்கு அனுப்பி வைத்துள்ளார்.

அதன் விபரம் வருமாறு,

17.01.2018 அன்று யாழ்ப்பாணத்தில் உள்ள இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெற்ற தமிழ்த் தேசிய பேரவையின் விஞ்ஞாபன வெளியீட்டின் போது தேர்தல்கள் ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கின்ற என்னைப் பற்றித் தமிழ்த் தேசியப் பேரவையின் யாழ் முதன்மை வேட்பாளரான சட்டத்தரணி வி.மணிவண்ணன்,

"நாங்கள் ஒன்றை இந்தத்தருணத்தில் தெளிவுபடுத்த விரும்புகின்றோம். எங்கள் மீது 2018ஆம் ஆண்டு பெப்ரவரி 10ஆம் திகதி வரை நீங்கள் தாக்குதலை நடத்துங்கள். 11 ஆம் திகதி உங்கள் மீது தாக்குதல் தொடங்கப்படும். அதை எதிர்கொள்ள நீங்கள் தயாராக இருங்கள். தயவாகவும் பொறுப்புடனும் இதனைக் கூறிக்கொள்கின்றோம். எங்களை வம்பிற்கு இழுத்தால் நாங்களும் சும்மா விடப்போவதில்லை என்று பேசி உள்ளார்.

இந்த வைபவத்தில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரசின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் இணைந்துள்ளார்.

இவ்விடயமானது வலம்புரி, தினக்குரல், உதயன் ஆகிய பத்திரிகைகளிலும் வேறும் பல இணையத்தளங்களிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அகில இலங்கைத் தமிழ் காங்கிரசுடனும், கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துடனும், தமிழ் மக்கள் முன்னணியினால் இம் மிரட்டல் ஊடகங்களிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை இப்பத்திரிகைப் பிரசுரங்கள் சரியானவை என்பதையும் காட்டுகின்றன.

தேர்தல் வேளையில் அச்சுறுத்தல் வெளிவிடுவது மிகப்பார தூரமானது என்று உள்ளூராட்சிச்சட்டம் காட்டுகின்றது. அச்சுறுத்தலால் கடமையைத்தடுக்கும் நோக்கத்துடன் தேர்தல் ஆணைக்குழுஅங்கத்தவருக்கு எதிராகவே அச்சுறுத்தல் வெளியிட்டமையை பெரிய குற்றமாககருதி ஆணைக்குழுசட்டமா அதிபருக்கு அனுப்பியுள்ளதுடன் நானும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திலும் முறையிட வேண்டிவந்தது.

இவ் விடயமானது சட்ட நடவடிக்கைக்கு உள்ளாகும் தருணத்தில் நான் அது தொடர்பில விமர்சிப்பது பொருத்தமற்றது. ஆனால் நீதிமன்றத்தில் நிரூபிக்கப்படின் தண்டனை மிகப்பெரிதாய் அமையும்.

இந்தமுறைவேட்பாளரின் குணம், தகுதி பார்த்துமக்களை வாக்களிக்குமாறு ஆணைக் குழுவேண்டிநிற்கும் இத்தருணத்தில் வாக்காளர் சிந்திக்கவேண்டியது இது. சண்டித்தனம், காவாலித்தனம், ஆகியவற்றில் ஈடுபடுகின்றவர்களினதும், தேர்தல் விதிமுறை மீறல்களை ஆணைக்குழுதடுப்பது பக்கச்சார்பான செயல் என்றுபுனைபவர்களினதும், சட்டத்தரணிகளாய் இருந்தும் சட்டத்தை மீறுபவர்களினதும், பலவருடங்களாக பாராளுமன்றத்திற்கு செல்லாமல் பாராளுமன்றமுறைகள் அறியாது, சுயாதீனமான தேர்தல் ஆணைக் குழுவினர்களை அரசாங்கம் நியமிக்கின்றது என இத் தவறுணராது பேசுகின்றவர்களினதும் கட்சி ஒன்று வாக்காளர்களிடம் அவர்களது வாக்கைக் கேட்டுப் போகிறநேரம் இது.

இப்படியானவர்கள் தொடர்பில் வாக்காளர்களே சிந்தித்து விளிப்பாயிருப்பது அவசியம். (மு)

# தமிழ் மக்களின் சகல பிரச்சினைகளுக்கும் நிரந்தர தீர்வு காணப்படவேண்டும்

## டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்து

(கொழும்பு)

நாடாளுமன்ற ஜனநாயகத்திற்கூடாகத் தான் எமது மக்களின் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுகாணமுடியும் என்ற நம்பிக்கையில் தான் இற்றைவரை எமது அரசியல் பயணத்தை முன்னெடுத்து வருகின்றோம் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்

வவுனியா தரணிக்குளம் பகுதியில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

ஒருகாலகட்டத்தில் ஆயுதப்போராட்டத்திற்கான தேவை இருந்தது என்பது உண்மை தான். இலங்கை-இந்திய ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட்டதனூடாக ஜனநாயக வழிமுறையை நாம் தேர்ந்தெடுத்து அதன் வழியில் பயணித்துக்கொண்டிருக்கின்றோம்.

ஆனால் ஆயுத வழிமுறை மூலமும்தான் தீர்வுகாணலாம் என்று கூறியவர்களின் நிலை குறித்து மக்கள் நன்கறிவார்கள்.

எனவே இன்று எமது வழிமுறையே சரி என்பதை எமது மக்களும் சக அரசியல் தலைமைகளும் தென்னிலங்கை அரசியல் தலைமைகளும் மட்டுமன்றி சர்வதேசமும் ஏற்றுக் கொண்டுள்ளது.

சக அரசியல் கட்சிகள் எமது வழிமுறைக்கு வந்திருந்தாலும் கூட எமது பொறிமுறைக்கு வராத ஒரு அவலம் இற்றைவரை தொடர்கின்றது. சக தமிழ் கட்சிகளுக்கு குறிப்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு மக்களின் பிரச்சினைகளை தீர்த்துவைப்பதில் அக்கறையோ ஆற்றலோ கிடையாது.

அதுமாத்திரமன்றி மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டால் தமது அரசியல் இருப்பு கேள்விக்குறியாகிவிடும் என்றும் அவர்கள் கருதுகின்றனர்.

ஆனால் நாம் அதிலிருந்து மாறுபட்டவர்களாக இருப்பதுடன் எமது மக்கள் எதிர்கொள்ளும் சகல பிரச்சினைகளுக்கும் உரிய தீர்வுகள் காணப்படவேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகவும் உள்ளது.

இந்நிலையிலேயே மக்கள் ஒரு மாற்றத்தை விரும்புகின்றார்கள். மக்கள் விரும்பும் மாற்றத்தை நாம் மக்களுக்கு வழங்கு தயாராக இருக்கின்றோம்

இதற்காக எந்தச் சவால்களையும் நெருக்கடிகளையும் நாம் எதிர்கொள்ளவும் தயாராக இருக்கின்றோம் என்றும் டக்ளஸ் தேவானந்தா இதன்போது சுட்டிக்காட்டினார். (மு-1)

# ஜே.வி.பியும் கூட்டமைப்பும் நடித்து வருகின்றன-மகிந்த

(கொழும்பு)

நாட்டில் தற்போது நல்லாட்சி அரசாங்கம் இருப்பது போல், நல்லாட்சி எதிர்க்கட்சியும் இருப்பதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நல்லாட்சியில் எதிர்க்கட்சியின் பங்கு என்ற தலைப்பில் மகிந்த ராஜபக்ஷ வெளியிட்டுள்ள அறிக்கையில் இதனை கூறியுள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் எதிர்க்கட்சி அரசியல் கட்சிகள் போல் செயற்பட்டு நடித்து வருகின்றன.

கடந்த மூன்று ஆண்டுகளில் நல்லாட்சி அரசாங்கம் எடுத்த சகல ஜனநாயக விரோத செயல்களுக்கும் இந்த கட்சிகள் ஒத்துழைப்பை வழங்கின.

இந்த அரசியல் கட்சிகள் எதிர்ப்பு தெரிவிப்பது போல் பொய்யாக நடிக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களின் கட்சிகள்.

2004ஆம் மற்றும் 2005ஆம் ஆண்டுகளில் மக்கள் விடுதலை முன்னணி நான்கு அமைச்சுக்களை நிர்வகித்தமையானது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு மாகாணத்தை நிர்வகிப்பதற்கு சமனானது.

இந்த நிலைமையில், வேலை செய்ய முடியாத நல்லாட்சி அரசாங்கத்தை மாத்திரமல்ல வேலை செய்ய தெரியாத நல்லாட்சி எதிர்க்கட்சிகளும் நாட்டிற்குள் இருக்கின்றன என்பதை மக்கள் புரிந்துக்கொள்ள வேண்டும் எனவும் மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். (மு-1)

## நாட்டின் அரசி...

உரையாற்றியபோதே ஜனாதிபதி இதனை கூறியுள்ளார்:

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி சார்பில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் வெற்றியை உறுதி செய்யும் வகையில மட்டக்களப்பு - மாவடிவேம்பு பகுதியில் நேற்று மாலை இந்த மக்கள் சந்திப்பு நடைபெற்றது.

அங்கு உரையாற்றிய ஜனாதிபதி நாட்டின் அரசியல்வாதிகளில் 50 வீதமானோர் திருடர்கள் எனவும்,

ஏனைய அபிவிருத்தியடைந்த நாடுகளை போன்று இலங்கையை அபிவிருத்தி செய்ய முடியாமல் இருப்பதற்கு அதுவே காரணம் எனவும் சுட்டிக்காட்டினார்.

மத்திய வங்கியின் முறிகள் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையின் படி 2008 ஆம் ஆண்டில் இருந்து 2016 ஆம் ஆண்டு வரை மோசடிச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை தெரியவந்துள்ளதாக குறிப்பிட்ட ஜனாதிபதி.

அப்பாவி ஏழை மக்களின் கோடிக்கணக்கான பணத்தை திருடியவர்களுக்கு தாம் ஒருபோதும் மன்னிப்பு வழங்குவதில்லை எனவும் குறிப்பிட்டார்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு கிழக்கு மாகாணங்களை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்களை அரசாங்கம் முன்னெடுத்துள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அனைத்து இன மக்களும் ஒற்றுமையாக வாழக்கூடிய இலங்கையை உருவாக்குவதாக தான் சர்வதேச தலைவர்களுக்கு உறுதி வழங்கியுள்ளதாகவும் அதனை செயற்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

தமது அரசாங்கத்துக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு முழுமையான ஆதரவு வழங்கி வருவதாகவும், கிழக்கில் பட்டதாரிகளின் பிரச்சினைகளை தாம் நன்கு அறிந்திருந்ததாகவும் அந்த பிரச்சினையை தீர்ப்பதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேலும் தெரிவித்தார். (மு-1)


நல்லூர் சாயி சமித்தியில் தங்கி இருந்து மேற்படிப்பு, வேலைவாய்ப்பு பெற்றுக்கொள்ள விரும்பும் ஆண் பிள்ளைகள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 077405 2257, 077 910 4771

(C-1279)

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்.




றோயல் குளுக்கோஸ்

உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்

றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்

ஏக விநியோகஸ்தர்கள் சிவா நறுமணப் பூங்கா 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P - 021 222 2567

உற்சாகம்! புத்துணர்ச்சி!! ஆரோக்கியம்!!!

PACKED BY: ROYAL Industries Colombo-13 T.P:- 077 727 7670

அனைத்துப் பார்மசிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். (C-1293)

ICT

(பெருமாள் கோவில் வீதி, யாழ்ப்பாணம்)

A/L 2020, 2019, 2018 Day Class

(தமிழ், ஆங்கில மொழி மூலம்)

திங்கள் - வெள்ளி 3.00 - 5.00

எமது சேவைகள்:

- கற்றல் கையேடுகள், மாதிரிப் பரீட்சை வினாத்தாள்கள் மற்றும் பயிற்சி வினாத்தாள்கள் வழங்கப்படும்.
- ஒவ்வொரு அலகு முடிவிலும் பரீட்சைகள் நடத்தப்படும்.
- பரீட்சையில் உயர்புள்ளி பெறும் மாணவருக்கு குறித்த மாதக் கட்டணத்திலிருந்து விலக்களிப்பு வழங்கப்படும்.
- பல்லூடக எறிகை, நிகழ்த்துகை மூலமான கற்பித்தல்.

தொடர்பு: 076 703 1337 (C-1300)

German Swiss Academy

Deutsch வகுப்புக்கள் R.மயூரன் ஆசிரியரால் A1 பரீட்சைக்கு ஏற்றவாறு கற்பிக்கப்படுகின்றது. திருமணம் முடித்து U.K செல்வோர்களுக்கான IELTS Life skills A1, B1, Spoken English, Sinhala வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

இல.17, மின்சார நிலைய வீதி, 3-ம் ஒழுங்கை யாழ்ப்பாணம். (Near C.T.B Bus Stand) | இல.17A, கச்சாய் வீதி, சாவகச்சேரி.

(2489) தொ.பே இல.: 077 645 4998 / 021 312 2029

சகல விதமான சளி இருமல்களிற்கு சிறந்த மூலிகை இருமல் பாணி

எவரெஸ்ட் மூலிகை இருமல் பாணி




100% இயற்கையானது

உள்ளடக்கம்

ஆடாதோடை, திப்பலி, அதிமதுரம், கண்டங்கத்தரி, சிறு தேக்கு, மிளகு, பனங்கற்கண்டு.

தொடர்ந்து பாவித்து வருவதன் மூலம் ஆஸ்மா நோய் தணிவடையும்

எல்லா மருந்தகங்களிலும் சாதாரண கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

தயாரிப்பு:- எவரெஸ்ட் மருந்தகம், உசன், மிருசுவில், யாழ்ப்பாணம்.

ஏக விநியோகஸ்தர் பிரமநாதன் and Co

எண் 28,26, பேரின்ப நாயகம் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

கைபேசி எண் : 0776389356, 0777153571



கண்ணீர் அஞ்சலி



அமரர் சுப்பையா செல்வரத்தினம்

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய முன்னைநாள் தர்மகர்த்தாசபை உறுப்பினரும் ஆலயத்துடன் ஈடுபாடு கொண்டவருமான அமரர் சுப்பையா செல்வரத்தினம் அவர்களின் மறைவுச் செய்தியறிந்து ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா மஞ்சவனப்பதி முருகப்பெருமானின் பாதாரவிந்தங்களை சென்றடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தோற்றம் : 20.04.1939

மறைவு : 21.01.2018

தர்மகர்த்தா சபை,
மஞ்சவனப்பதி முருகன் ஆலயம், கொக்குவில்

(2499)

விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

(C-1228)



UK-550/=Kg

மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்

DELIVERY IN 3 - 5 DAYS

V2 TRAVELS-0768226240

- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

TECHNO WORLD

(பெருமாள் கோவில் வீதி, வெலிங்டன் சந்தி, யாழ்)

A/L தொழில்நுட்பப் பிரிவு

A/L 2020 Day:
திங்கள் - வெள்ளி 8.00 - 12.00

A/L 2018, 2019:
திங்கள் - வெள்ளி 3.30 - 5.00

A/L 2020, 2019, 2018 Day
சனி, ஞாயிறு - 8.00 - 1.30

தொடர்பு: 077 017 5346

(C-1300)


## தனித்திருந்த வயோ...

ஆறுகால்மடம் பொன்னையா வீதியை சேர்ந்த ஜெகனாதன் சத்தியபாமா (வயது 72) என்ற மூதாட்டியே மேற்படி சடலமாக மீட்கப்பட்டவராவார்.

யாழ். ஆனைக்கோட்டை பொன்னையா வீதிப் பகுதியில் வாடகை வீட்டில் வசித்து வந்துள்ளார். குறித்த மூதாட்டி, உறவினர்கள் யாருமின்றி தனிமையிலேயே வசித்து வருகின்றார். இவர் நடக்க முடியாதவர் என்பதுடன் சக்கர நாற்காலி, மற்றும் ஊன்றுகோலை பயன்படுத்தி வந்துள்ளார்.

இவரது பெறாமகன் ஒருவர் கிளிநொச்சியில் வசித்து வருவதுடன், அடிக்கடி குறித்த மூதாட்டியை வந்து பார்வையிட்டு செல்வது வழமை. அத்துடன் உணவு வகைகள் வேறு நபர்களிடம் இருந்து குறித்த மூதாட்டிக்கு வழங்குவதற்கான ஏற்பாட்டையும் செய்து வைத்துள்ளார்.

வழமை போல் நேற்று மதியம் உணவு கொடுக்கவரும் இளைஞர் உணவை கொடுத்துவிட்டு சென்றுள்ளார். பின்னர் மூதாட்டிக்கு பாதுகாப்பாக அவரது மைத்துனர் ஒருவர் வழமையாக வீட்டில் தங்குவதாகவும் அவர் நேற்று இரவு 7.30 மணியளவில் வந்த போதே வீட்டின் கதவுகள் திறக்கப்பட்டிருந்ததுடன், மின்சாரம் இன்றி வீடு இருட்டாக காணப்பட்டுள்ளது.

உடனடியாக குறித்த மைத்துனர் வீட்டின் மின்விளக்கை ஒளிரவிட முயற்சித்த போது ரிப் (மின்தடை கருவி) நிறுத்தப்பட்டுள்ளது. அதை சரிசெய்துவிட்டு மூதாட்டியை தேடிய போது மூதாட்டி ஒரு அறையில் தலையில் காயங்களுடன் சடலமாக காணப்பட்டுள்ளார்.

அவர் உடனடியாக மானிப்பாய பொலிஸாருக்கு தகவல் வழங்கியதனை அடுத்து பொலிஸார் அவ்விடத்துக்கு வந்து சடலத்தை மீட்டதுடன், விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். மூதாட்டி காதில் அணிந்திருந்த தோடு மற்றும் கையில் போட்டிருந்த மோதிரம் ஆகியவற்றினைக் காணவில்லை என குறித்த மைத்துனர் பொலிஸாருக்குத் தெரிவித்துள்ளார்.

மூதாட்டியின் நகைகள் காணாமல் போயுள்ளமையினால் திருட்டிற்காக இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிப்பதுடன், கொலைச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றார்கள். (மு-4-9)

## தேர்தல் சுவரொ...

ட்டுள்ளனர்.

கோப்பாய் பகுதியில் நேற்று முன்தினம் இரவு தேர்தல் சுவரொட்டிகளை ஒட்டிய போதே அவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் பெயர் பொறிக்கப்பட்ட 25 சுவரொட்டிகள் கைப்பற்றப்பட்டன.

விசாரணைகளின் பின்னர் இருவரும் யாழ்ப்பாணம் நீதவான் முன்னிலையில் படுத்தப்பட்டனர். (மு)

## சிங்கப்பூர் பிரத...

தங்கவுள்ள அவர் நாளை காலை ஜனாதிபதி செயலகத்தில் வைத்து இரு நாடுகளுக்கிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கைகளிலும் கைச்சாத்திடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (மு)


வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை

11 kg மேற்பட்ட பொதிகளுக்கு 1 kg க்கான கட்டணம்

UK-550/-
France - 700/-
Germany - 650/-
Swiss - 750/-
Canada - 950/-

ஏனைய நாடுகளுக்கும் விசேட விலைக் கழிவு பொதிகள் அனுப்பி வைக்கப்படும்

சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் நிபுணத்துவம் வாய்ந்தவர்களூடாக செய்து கொடுக்கப்படும்

திருமுருகன் கொம் நெற் (பிறைவெட்) லிமிடெட்

077 755 4528

3-5 Working Days

DHL aramex SKYNET


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.01.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.